சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

# தினமணி

வெள்ளிக்கிழமை
20 ஆகஸ்ட் 2021
சென்னை
16 பக்கங்கள் ரூ.7


## இரண்டாம் தவணை கரோனா தடுப்பூசி: 3.86 கோடி பேர் தவிர்ப்பு



**புது தில்லி, ஆக. 19:** கரோனா தடுப்பூசி இரண்டாம் தவணையை உரிய நேரத்தில் செலுத்தாமல் 3.86 கோடி பேர் தவிர்த்திருப்பதாக மத்திய அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(விரிவான செய்தி உள்ளே)

## பத்தாம் வகுப்பு: ஆக.23 முதல் தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்

**சென்னை, ஆக. 19:** பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வுக்கான தற்காலிக மதிப்பெண் சான்றிதழை மாணவர்கள் ஆக.23 முதல் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யலாம்.

இது குறித்து அரசுத்தேர்வுகள் இயக்குநர் சி.உஷாராணி வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிவிப்பு:

கடந்த பிப்.25-ஆம் தேதி வெளியிடப்பட்ட அரசாணையின்படி பள்ளி மாணவர்களுக்கு பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு (மார்ச் 2021) தொடர்பான தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை வரும் ஆக.23 காலை 11 மணி முதல் ஆக.31-ஆம் தேதி வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மாணவர்களின் பிறந்த தேதி, தேர்வெண் ஆகியவை அவர்கள் பயின்ற பள்ளிகளில் சமர்ப்பித்த உறுதிமொழிப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செல்லிடப்பேசி எண்களுக்கு குறுஞ்செய்தி மூலமாக அரசுத் தேர்வுத் துறையின் மூலம் ஆக.21-ஆம் தேதி காலை 11 மணிக்கு அனுப்பி வைக்கப்படும்.

எனவே, பள்ளி மாணவர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் தங்களுக்கான வரிசை எண், பிறந்த தேதி ஆகிய விவரங்களைப் பதிவு செய்து மதிப்பெண் சான்றிதழைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

அனைத்து பள்ளிகளும் தற்காலிக மதிப்பெண் சான்றிதழை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என அதில் தெரிவித்துள்ளார்.

**இன்றைய இதழுடன் 4 பக்க வெள்ளிமணி இணைப்பு**

# ஆப்கன் விவகாரம் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

**புது தில்லி/ நியூயார்க், ஆக. 19:** தலிபான்களின் கட்டுப்பாட்டில் வந்துள்ள ஆப்கானிஸ்தானில் நடைபெறும் நிகழ்வுகள் உள்நாட்டு, வெளிநாட்டுப் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி உள்ளது என்று ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் கூறினார்.

மேலும், பாகிஸ்தானில் இருந்து இயங்கும் லஷ்கர்-ஏ- தொய்பா (எல்இடி), ஜெய்ஷ்-ஏ- முகமது (ஜெஏஎம்) பயங்கரவாத இயக்கங்கள் இன்னமும் எந்தவித பாதிப்பில்லாமலும், முனைப்புடனும் செயல்பட்டு வருகின்றன என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

சர்வதேச நாடுகளின் அமைதி, பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற தலைப்பிலான கூட்டத்தில், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் தலைமைப் பொறுப்பேற்றுள்ள இந்தியாவின் சார்பில் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் வியாழக்கிழமை பேசுகையில், 'இராக்கில் உள்ள ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு விரிவாக்கம் அடைந்து வருகிறது. அதேநேரத்தில், ஆப்கானிஸ்தானில் நடைபெறும் நிகழ்வுகள் உள்நாட்டு, வெளிநாட்டுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி உள்ளது.

எல்இடி, ஜெஏஎம் பயங்கரவாத அமைப்புகள் இன்னமும் எந்த விதப் பாதிப்பும் இல்லாமலும், முனைப்புடனும் இந்தியா அல்லது ஆப்கானிஸ்தானுக்கு எதிராகச் செயல்பட்டு வருகின்றன. இதுபோன்ற பிரச்னைகளுக்கு ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் குறிப்பிட்ட நடவடிக்கைகளை எடுப்பதில்லை. பயங்கரவாத அமைப்புகளின் விரிவாக்கம் குறித்து எதுவும் கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை. இதுபோன்ற பயங்கரவாத அமைப்புகளுக்கு சில நாடுகள் புகலிடம் அளிக்கின்றன.

கரோனா தொற்றை முழுமையாக ஒழிக்கும் வரை யாரும் பாதுகாப்பாக இருக்க முடியாது என்பதற்கு ஏற்ப பயங்கரவாதமும் முழுமையாக ஒழிக்கப்பட வேண்டும்' என்றார்.

இராக்கில் செயல்படும் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு, பாகிஸ்தானில் இருந்து இயங்கும் லஷ்கர்-ஏ- தொய்பா (எல்இடி), ஜெய்ஷ்-ஏ- முகமது (ஜெஏஎம்) பயங்கரவாத இயக்கங்கள் ஆகியவை ஆப்கானிஸ்தானில் ஒன்று சேர்ந்து விரிவாக்கம் அடைந்து பெரும் அச்சுறுத்தல் ஏற்படலாம் என்று செய்திகள் வெளியாகும் நிலையில் அமைச்சர் ஜெய்சங்கர் இவ்வாறு பேசியுள்ளார்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்துக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் ஜெய்சங்கர் கூறுகையில், ஆப்கனில் இருந்து இந்தியர்களை தாயகம் அழைத்து வருவதே உடனடிப் பிரச்னை. இதுதொடர்பாக காபூல் விமான நிலையத்தை தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ள அமெரிக்கா மற்றும் சர்வதேச கூட்டாளிகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறோம் என்றார்.

**பயணம் பாதியில் ரத்து:** நியூயார்க்கில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தை முடித்துவிட்டு, அங்கிருந்து மெக்ஸிகோ, பனாமா, கயானா ஆகிய நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொள்ள அமைச்சர் ஜெய்சங்கர் திட்டமிட்டிருந்தார். ஆனால், ஆப்கன் சூழலைக் கருத்தில்கொண்டு தனது பயணத்தைப் பாதியிலேயே முடித்துக்கொண்டு அவர் வெள்ளிக்கிழமை இந்தியா திரும்புகிறார். அவர் தில்லி வந்த பிறகு ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு குறித்து ஆலோசனை நடத்தப்படும் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

### ஐ.நா.வில் அமைச்சர் ஜெய்சங்கர்




ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் பேசுகிறார் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர்.

### இந்தியா-பிரிட்டன் இணைந்து செயல்பட முடிவு

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா சார்பில் நடத்தப்பட்ட மாநாட்டுக்குத் தலைமையேற்பதற்காக சென்றுள்ள வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் டொமினிக் ராபை புதன்கிழமை சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது ஆப்கானிஸ்தான் விவகாரம் குறித்து விவாதிக்கப்பட்டதாக சுட்டுரையில் வெளியிட்ட பதிவில் ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார். டொமினிக் ராப் வெளியிட்ட சுட்டுரைப் பதிவில், பாதுகாப்பு அச்சுறுத்தல்கள், ஆப்கானிஸ்தான் அகதிகளுக்கு ஆதரவு அளித்தல், மனித உரிமைகளைக் காத்தல் ஆகிய விவகாரங்களில் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கு இந்தியாவும் பிரிட்டனும் உறுதி ஏற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

### ஆப்கனுக்கான ஆயுத விற்பனை: அமெரிக்கா நிறுத்திவைப்பு

**வாஷிங்டன், ஆக. 19:** ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியுள்ளதைத் தொடர்ந்து, அந்த நாட்டுக்கான ஆயுத விற்பனையை அமெரிக்கா நிறுத்தி வைத்துள்ளது.

இதுகுறித்து பாதுகாப்புத் தளவாட ஒப்பந்ததாரர்களுக்கு அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சரகத்தின் அரசியல்/ராணுவ விவகாரப் பிரிவு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ஆப்கானிஸ்தானில் வேகமாக மாறி வரும் சூழலைக் கருத்தில் கொண்டு, அந்த நாட்டுக்கு ஆயுதங்கள் மற்றும் தளவாடங்கள் விற்பனை செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தங்கள் மறுபரிசீலனை செய்வதற்காக நிறுத்திவைக்கப்படுகின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**'கடன் கிடையாது':** தலிபான்கள் தலைமையில் அமையக் கூடிய அரசுக்கு கடன் வழங்கவும் தங்களது நிதியாதாரங்களைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதியளிக்கவும் போவதில்லை என்று சர்வதேச நிதியம் அறிவித்துள்ளது.

# மின்னணு முறையில் சாலை விதிமீறல் கண்காணிப்பு

### 4 தமிழக நகரங்களில் அமல்படுத்த அறிவுறுத்தல்

நமது சிறப்பு நிருபர்

**புது தில்லி, ஆக. 19:** சாலைப் போக்குவரத்தில் விதிமீறல்களை மின்னணு சாதனங்களைப் பயன்படுத்தி கண்காணிக்க மத்திய சாலைப் போக்குவரத்து நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

'தேசிய தூய்மைக் காற்று திட்டம்' மேற்கொள்ளப்படும் 132 நகரங்களில் இந்த மின்னணு கண்காணிப்பை உறுதியாக மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் சென்னை, மதுரை, திருச்சி, தூத்துக்குடி ஆகிய நகரங்கள் தூய்மைக் காற்று திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. இந்த நகரங்களில் போக்குவரத்து விதிமீறல்களைக் கண்காணிப்பதற்கு மின்னணு சாதனங்களைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டு அதை உறுதி செய்யவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

போக்குவரத்து விதிமுறைகளை மீறும் வாகன ஓட்டிகளைக் கண்காணித்து, அவர்களுக்கு மோட்டார் வாகனச் சட்டப்படி தண்டனை அளிக்க மின்னணு சாதனங்களைப் பயன்படுத்துவது குறித்து பொது மக்களிடம் கருத்துகளைக் கேட்டு மத்திய அரசு கடந்த பிப்ரவரி மாதம் அறிவிப்பு வெளியிட்டது. இந்தக் கருத்துகள் மற்றும் யோசனைகளைப் பெற்று இறுதி முடிவை மத்திய அரசு கடந்த 17-ஆம் தேதி அரசிதழில் வெளியிட்டது.

இதையொட்டி, இந்த மின்னணு முறை அமலாக்கம் குறித்து மத்திய சாலைப் போக்குவரத்து நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் வியாழக்கிழமை அறிவிக்கை வெளியிட்டது. அதன் விவரம்: போக்குவரத்துக் காவல் துறை அதிகாரிகளும், மாநில வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளும் போக்குவரத்து விதிமீறல்களைக் கண்காணிக்க பொருத்தமான மின்னணு சாதனங்களைப் பயன்படுத்தலாம்.

வேக வரம்புக்குள் வாகனங்களை இயக்குவது, வாகன நிறுத்தம் அனுமதிக்கப்படாத இடங்களில் வாகனத்தை நிறுத்துவது, வாகனம் ஓட்டும்போது செல்லிடப்பேசியைப் பயன்படுத்துவது, முறையற்ற முறையில் வாகனத்தைக் கடந்து செல்வது, அதிக ஒலியுடைய வாகனங்கள், அதிக புகையை வெளியிடும் வாகனங்கள் உள்ளிட்ட பல்வேறு போக்குவரத்து விதிமீறல்களைக் கண்காணிக்க இந்தச் சாதனங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

வேகத்தை அளவிடும் மீட்டர் அல்லது கேமரா, சிசிடிவி கேமரா, உடலில் அணியும் கேமரா, வாகனங்களில் பொருத்தப்பட்ட கேமரா, வாகன எண் பலகையை அடையாளம் காணும் தானியங்கிக் கருவி, எடை பார்க்கும் கருவி உள்ளிட்ட பல மின்னணு கருவிகளைப் பயன்படுத்தி தவறுகளைப் பதிவு செய்து, வாகன ஓட்டிகள் மீது போக்குவரத்து விதிமீறல் தொடர்பான குற்றத்தைப் பதிவு செய்யலாம். 15 தினங்களுக்குள் சம்பந்தப்பட்டவர்களுக்கு நோட்டீஸ் அளிக்கப்பட வேண்டும். வழக்கு முடியும் வரை இந்த மின்னணு பதிவுகளைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

தில்லி உள்ளிட்ட 132 நகரங்கள் அல்லது 10 லட்சத்துக்கும் அதிகமாக மக்கள்தொகை கொண்ட நகரங்களில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகள், நகர்ப்புறங்களில் போக்குவரத்து நெரிசல் மிக்க பகுதிகள், முக்கியச் சந்திப்புகளில் இத்தகைய மின்னணு சாதனங்கள் பொருத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும். இந்தச் சாதனங்களின் தெளிவான புகைப்பட ஆதாரங்களைப் போக்குவரத்து விதிமீறல் குற்றங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற மின்னணு சாதனங்கள் ஏற்கெனவே காவல் துறையினரால் பயன்படுத்தப்பட்டாலும் தற்போது சட்டபூர்வமாகவும் கட்டாயமாகவும் பயன்படுத்த மத்திய அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

https://t.me/Tamil_epaper2

## ஜம்மு-காஷ்மீர் மோதலில் ராணுவ அதிகாரி பலி; பயங்கரவாதி சுட்டுக் கொலை

**ஜம்மு, ஆக. 19:** ஜம்மு-காஷ்மீரின் ரஜெளரி மாவட்டத்தில் பயங்கரவாதிகளுடன் வியாழக்கிழமை நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் ராணுவ அதிகாரி பலியானார். பயங்கரவாதி ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்டார்.

'ரஜெளரி மாவட்டம் தனமண்டி பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தவலின் அடிப்படையில், பாதுகாப்புப் படையினர் அந்தப் பகுதியை சுற்றி வளைத்து தீவிர தேடுதல் பணியில் வியாழக்கிழமை ஈடுபட்டனர். அப்போது, அங்கு பதுங்கியிருந்த பயங்கரவாதிகள் பாதுகாப்புப் படையினரை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். பாதுகாப்புப் படையினரும் பதிலடி கொடுத்தனர்' என்று ராணுவ அதிகாரி ஒருவர் கூறினார்.

இதுகுறித்து ராணுவ மக்கள் தொடர்பு அதிகாரி தேவேந்திர ஆனந்த் கூறுகையில், 'துப்பாக்கிச் சண்டையில் பயங்கரவாதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அதே நேரம், பயங்கரவாதிகள் சுட்டதில் ராஷ்ட்ரீய ரைஃபிள்ஸ் படைப் பிரிவின் இளநிலை அதிகாரி (ஜேசிஓ) ஒருவர் குண்டு பாய்ந்து காயமடைந்தார். அவர் உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். ஆனால், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்' என்றார்.

'பயங்கரவாதிகளுடனான துப்பாக்கிச் சண்டை தொடர்ந்து நடைபெற்று வருகிறது' என்று ரஜெளரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீமா நபி கஸ்பா கூறினார்.

இந்த ஆண்டில் ஆகஸ்ட் மாதத்தில் பயங்கரவாதிகளுடனான இரண்டாவது மோதல் சம்பவம் இதுவாகும். முன்னதாக, கடந்த 6-ஆம் தேதி இதே பகுதியில் பயங்கரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையெ நடந்த மோதலில் லஷ்கர்-ஏ-தொய்பா அமைப்பைச் சேர்ந்த 2 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

### மேற்கு வங்கத் தேர்தலுக்கு பிந்தைய வன்முறை

# சிபிஐ, எஸ்ஐடி விசாரணைக்கு கொல்கத்தா உயர்நீதிமன்றம் உத்தரவு

**கொல்கத்தா, ஆக.19:** மேற்கு வங்க மாநிலத்தில் சட்டப் பேரவைத் தேர்தலுக்குப் பிறகு நடந்த கொலை, பாலியல் வன்கொடுமை, வன்முறை தொடர்பான வழக்குகளை சிபிஐ விசாரணைக்கு மாற்றி அந்த மாநில உயர்நீதிமன்றம் வியாழக்கிழமை உத்தரவிட்டது.

தேர்தலுக்குப் பிறகு நடந்த அனைத்து குற்றச் சம்பவங்கள் தொடர்பாக சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணை(எஸ்ஐடி) நடத்தவும் அந்த நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேற்கு வங்க மாநிலத்தில் கடந்த மே மாதம் நடந்து முடிந்த சட்டப் பேரவைத் தேர்தலில் முதல்வர் மம்தா பானர்ஜி வெற்றி பெற்றார். அதன் பிறகு மாநிலத்தின் பல்வேறு இடங்களில் திரிணமூல் காங்கிரஸ் கட்சியினருக்கும் பாஜகவினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. பல இடங்களில் வன்முறை வெடித்தது. இந்தச் சம்பவங்களில் தங்கள் கட்சித் தொண்டர்கள் 20-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாக பாஜக கூறியது. பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்தக் கோரி கொல்கத்தா உயர்நீதிமன்றத்தில் பல்வேறு பொதுநல மனுக்கள் தாக்கப்பட்டன. தேசிய மனித உரிமைகள் ஆணையமும் விசாரணை நடத்தி உயர்நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தது.

**ஆவணங்களை ஒப்படைக்க உத்தரவு:** இந்த விவகாரம், தலைமை பொறுப்பு நீதிபதி ராஜேஷ் பிண்டல் தலைமையிலான 5 நீதிபதிகளைக் கொண்ட அமர்வு முன் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, நீதிபதிகள் கூறியதாவது:

தேர்தலுக்குப் பிந்தைய வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான அனைத்து வழக்குகளும் சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடப்படுகிறது. எனவே, வழக்கு தொடர்பான ஆவணங்களை தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் குழுவும் மாநில அரசும் சிபிஐ வசம் ஒப்படைக்க வேண்டும்.



**விசாரணை அறிக்கையை...:** இதுதவிர, தேர்தலுக்குப் பிறகு நடந்த குற்றச் சம்பவங்கள் குறித்து சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணை நடத்தும். அந்தக் குழுவில், ஐபிஎஸ் அதிகாரிகள் சுமன் பாலா சாஹூ, செளமன் மித்ரா, ரண்வீர் குமார் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

சிபிஐ விசாரணையும், சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணையும் உயர்நீதிமன்ற கண்காணிப்பின் கீழ் நடைபெறும். இவ்விரு குழுக்களும் தங்கள் விசாரணை அறிக்கையை 6 வாரங்களில் தாக்கல் செய்ய வேண்டும்.

பாலியல் வன்கொடுமை, கொலை போன்ற கொடிய குற்றங்கள் தொடர்பான வழக்குகளை சுதந்திரமான அமைப்புதான் விசாரிக்க வேண்டும். சில இடங்களில் கொலை நடந்ததாகக் கூறப்படும் புகார்களில் முதல் தகவல் அறிக்கைகூட பதிவு செய்யப்படவில்லை. இதுபோன்ற சூழல்களில் சுதந்திரமான அமைப்பு விசாரித்தால் மட்டுமே சம்பந்தப்பட்டவர்களுக்கு நீதித் துறை மீது நம்பிக்கை வரும் என்று நீதிபதிகள் தங்கள் உத்தரவில் தெரிவித்தனர்.

**பாஜக வரவேற்பு:** கொல்கத்தா உயர்நீதிமன்றத்தின் உத்தரவுகளை பாஜக வரவேற்றுள்ளது. இதுகுறித்து அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் கெளரவ் பாட்டியா கூறியதாவது:

தேர்தலுக்குப் பிந்தைய வன்முறைக்குப் பிறகு மக்களின் புகார்களுக்கு காவல் துறை செவிமடுக்கவில்லை; குற்றவாளிகளுக்கு திரிணமூல் அரசு பாதுகாப்பு அளித்தது என்பதையே தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் அறிக்கையும், உயர்நீதிமன்றத்தின் உத்தரவும் காட்டுகின்றன. மேலும், நாட்டின் எந்தப் பகுதியிலும் அராஜகவாதிகளுக்கு இடம் இல்லை என்பதையே உயர்நீதிமன்றத்தின் உத்தரவு தெளிவுபடுத்துகிறது என்றார் அவர்.


பாஜக மாநிலத் தலைவர் திலீப் கோஷ் கூறுகையில், 'மேற்கு வங்க அரசு மற்றும் திரிணமூல் காங்கிரஸ் கட்சியால் அடக்குமுறைகளைச் சந்தித்த சகோதரிகள், தாய்மார்கள் உள்ளிட்ட பாதிக்கப்பட்டவர்களுக்கு வெற்றி கிடைத்துள்ளது' என்றார்.

**மேல்முறையீடு செய்ய திரிணமூல் திட்டம்:** கொல்கத்தா உயர்நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்ய திரிணமூல் காங்கிரஸ் திட்டமிட்டிருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளன.

இது குறித்து திரிணமூல் காங்கிரஸ் மூத்த தலைவரும், நாடாளுமன்ற எம்.பி.யுமான செளகதா ராய் கூறியதாவது:

உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு மதிப்பளிக்கிறோம். அந்த உத்தரவை நேரடியாக எதிர்க்க முடியாது. நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவுகளுக்கு மாநில அரசும், திரிணமூல் காங்கிரஸ் தலைமையும் பதிலளிக்கும். தேவைப்பட்டால் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வது குறித்து பரிசீலிப்போம் என்றார் அவர்.

## போர் விமானங்களைப் பாதுகாக்க அதிநவீன தொழில்நுட்பம்



**புது தில்லி, ஆக. 19:** இந்திய விமானப் படைக்குச் சொந்தமான போர் விமானங்களை எதிரி நாட்டு ஏவுகணை தாக்குதலில் இருந்து பாதுகாக்கும் வகையில், அதிநவீன 'சாஃப்' தொழில்நுட்பத்தை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) உருவாக்கியுள்ளது.

இந்தத் தொழில்நுட்பத்தின் மூலம், எதிரி நாட்டு ஏவுகணைகளைத் திசை திருப்பிவிட்டு போர் விமானங்கள் பாதுகாப்பாக தப்பித்துவிட முடியும். இதன் சோதனை வெற்றியடைந்ததைத் தொடர்ந்து, இந்தத் தொழில்நுட்பத்தை போர் விமானங்களில் சேர்க்கும் பணிகளை இந்திய விமானப் படை தொடங்கியுள்ளது.

இது குறித்து டிஆர்டிஓ வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: ஜோத்பூர் மற்றும் புணேயில் உள்ள டிஆர்டிஓ ஆய்வகங்கள் இணைந்து உருவாக்கியுள்ள இந்த நவீன தொழில்நுட்பம், போர் விமானத்தில் பொருத்தும் வகையிலான 'சாஃப்' கேட்ரிட்ஜ் - 118/ஐ' என்ற கருவி உருவாக்கப்பட்டுள்ளது. அதில், சிறு அலுமினியம் அல்லது துத்தநாகம் பூசப்பட்ட நார்த் துகள்கள் லட்சக்கணக்கில் அடைக்கப்பட்டிருக்கும். போர் விமானம் பறந்து கொண்டிருக்கும்போது, இந்தத் துகள்களை வெளியேற்றி காற்றில் பறக்க விடுவதன் மூலம், தாக்க வரும் எதிரி நாட்டு ஏவுகணையை ரேடார் உதவியுடன் திசை திருப்பிவிட முடியும். அதன் மூலம் போர் விமானத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும்.

விமானப் படையின் தொடர் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில், அதிக எண்ணிக்கையில் இந்தக் கருவியை உற்பத்தி செய்வதற்காக உற்பத்தி நிறுவனங்களுடன் இந்தத் தொழில்நுட்பம் பகிர்ந்து கொள்ளப்பட உள்ளது என்று டிஆர்டிஓ தெரிவித்துள்ளது.

'பாதுகாப்புத் தொழில்நுட்ப உருவாக்கத்தில் தற்சார்பு இந்தியா இலக்கை எட்டுவதில் டிஆர்டிஓ மேலும் ஒரு படி முன்னேறியுள்ளது' என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டு தெரிவித்துள்ளார்.




# மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த ரூ.1.78 கோடி ஒதுக்கீடு

**சென்னை, ஆக. 19:** மாவுப் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த ரூ.1.78 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

சட்டப் பேரவையில் வேளாண் நிதிநிலை அறிக்கை மீது நடந்த விவாதங்களுக்கு பதிலளித்து வியாழக்கிழமை அவர் ஆற்றிய உரை: தமிழ்நாட்டில் மாவுப் பூச்சி தாக்குதலால் 10 மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுப் பேசினார். மாவுப் பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. 10 மாவட்டங்களில் 8,945 ஹெக்டேர் அளவுக்கு பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஒரு ஹெக்டேருக்கு ரூ.2 ஆயிரம் என்ற அளவில் ரூ.1.78 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தனது பதிலில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

# பொருளாதாரப் பாதையைத் தீர்மானிக்க இனி ஆண்டுதோறும் ஆய்வறிக்கை வெளியாகும்

## நிதியமைச்சர் தியாகராஜன் பேச்சு

**சென்னை, ஆக. 19:** மாநிலத்தின் பொருளாதாரப் பாதையை தீர்மானிக்கும் வகையில், இனி ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கைக்கு முன்பாக பொருளாதார ஆய்வறிக்கை வெளியிடப்படும் என்று நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்தார். கடந்த 10 ஆண்டுகளாக இந்த ஆய்வறிக்கை வெளியிடப்படவில்லை எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

சட்டப் பேரவையில் திருத்திய நிதிநிலை மற்றும் வேளாண் நிதிநிலை அறிக்கைகளுக்கு அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் வியாழக்கிழமை பதிலளித்துப் பேசியது:

தமிழகத்தின் முதல்வர், எல்லோருக்கும் எல்லாம் எனக் கூறியிருக்கிறார். அவரது அனுமதியுடன் அதனைத் திருத்த விழைகிறேன். சமூக, பொருளாதார நீதிக்கு ஏற்ப எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்கும். ஏனென்றால் அனைத்தையும் இலவசமாக வழங்கிட முடியாது. அப்படி வழங்கினால் அரசு திவாலாகி விடும்.

கடந்த 10 ஆண்டுகளில் யாரெல்லாம், எதையெல்லாம் கைப்பற்ற முடியுமோ அதையெல்லாம் எடுத்துக் கொள்ளுங்கள் என்பது போன்று ஆட்சி நடந்துள்ளது. இதனை மாற்றுவது சாதாரணமான காரியமல்ல. நம்முடைய கடனை, கையில் இருக்கும் சக்தியை வைத்து சீர்செய்வது என்ற அடிப்படையில் செயல்பட்டு வருகிறோம். சில நிதி சீர்திருத்த நடவடிக்கைகளை நிதிநிலை அறிக்கையில் சுட்டிக் காட்டியிருக்கிறோம். தகவல்களின் அடிப்படையில் அனைத்து விவரங்களையும் பார்க்க வேண்டும் என்பது அதில் ஒன்றாகும்.

மத்திய அரசுக்கும், மாநிலத்துக்கும் இடையே உள்ள உறவினை மேம்படுத்துவோம் எனக் கூறியுள்ளோம். தகவல்களைப் பெறுவது, அவற்றைப் பகிர்வது மற்றொரு முக்கிய கூறாகும். உதாரணத்துக்கு பெட்ரோல் பயன்பாடு, வருமான வரி செலுத்துவோர் விவரங்கள், தடுப்பூசி தகவல்களை மாநிலங்களுக்கு மத்திய அரசு பகிர்ந்து கொள்ள சட்டமோ, விதிமுறைகளையோ உருவாக்க வேண்டும்.



மக்களின் நிலம், பணம் பாதுகாப்பாக வைக்க வேண்டும் என நிதிநிலை அறிக்கையில் கூறியுள்ளோம். இடர் மேலாண்மை குறைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் நிதித் துறைக்கும், வருவாய் பேரிடர் மேலாண்மைத் துறைக்கும், பட்டதாரி மாணவர்கள், சட்டப் படிப்பு மாணவர்கள் போன்றவர்களை பணியிடைப் பயிற்சி மூலமாக ஈடுபடுத்துவோம். அனைத்து மத்திய அரசு திட்டங்களையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவோம்.

**சீர்திருத்தத்தின் முதல் கட்டம்:** சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் தொகுதி மேம்பாட்டு நிதியைத் தடையின்றிப் பயன்படுத்துவதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்த கோரிக்கை தொடர்பாக ஏற்கெனவே பரிசீலனை செய்யப்பட்டது. அதில், சில அடிப்படை பிரச்னைகள் உள்ளன. அது முதல்வரின் கவனத்தில் இருக்கிறது. அதில் ஒரு முடிவு வரும். இவையெல்லாம் சீர்திருத்தத்தின் முதல் கட்டம். இன்னும் பல நடவடிக்கைகள் வர இருக்கின்றன.

தகவல்கள் திரட்டுவது அதன் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுப்பது என்பதை சாமானிய ஏழை, எளிய மக்களின் நண்பனாகவே பார்க்க வேண்டும். இதனால் யாரும் அச்சப்பட வேண்டாம்.

பொருளாதாரத்தின் பாதையைத் தீர்மானிக்கும் வகையிலான ஆண்டு பொருளாதார ஆய்வறிக்கை கடந்த 10 ஆண்டுகளாக வெளியிடப்படவில்லை. அடுத்த ஆண்டில் இருந்து நிதிநிலை அறிக்கை தாக்கலுக்கு முன்பாக பொருளாதார ஆய்வறிக்கை வெளியிடப்படும்.

**110 விதி திட்டங்கள்:** கடந்த ஆட்சிக் காலத்தில் பேரவை விதி 110-ன் கீழ் வெளியிடப்பட்ட திட்டங்களின் நிலை குறித்து ஆய்வு செய்து நடப்பு கூட்டத் தொடரிலேயே அறிக்கை தாக்கல் செய்யப்படும். இது போன்ற ஆய்வுகள் யாரையும் பழி வாங்க அல்ல. ஒரு புரிதல் வருவதற்காகவே எடுக்கப்பட வேண்டியுள்ளது.

நம்முடைய சூழ்நிலை இக்கட்டான சூழ்நிலையாக உள்ளது. அனைவரின் ஒத்துழைப்பும் இருந்தால்தான் முன்னேற முடியும். பொது மக்களுக்கு குடிநீர், சாலை, மருத்துவமனை, கட்டடம், வீடு ஆகியன கட்டிக் கொடுக்க அரசின் நிதிநிலையை மேம்படுத்தாமல் செய்ய முடியாது. இன்றைக்குள்ள சூழ்நிலையை சீர்செய்தே ஆக வேண்டும் என்று நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் கூறினார்.

**விலை குறைப்பால் பெட்ரோல் பயன்பாடு அதிகரிப்பு:** தமிழகத்தில் விலை குறைப்பால், பெட்ரோல் பயன்பாடு 12 சதவீதம் அதிகரித்துள்ளதாக நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பதிலளித்தார்.

திருத்திய நிதிநிலை மற்றும் வேளாண் நிதிநிலை அறிக்கைகள் தொடர்பாக நடந்த விவாதங்களுக்கு, சட்டப் பேரவையில் வியாழக்கிழமை அவர் பதிலளித்துப் பேசியது:-

பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.3 குறைக்கப்பட்டது. உடனடியாக தகவல்களைத் திரட்டத் தொடங்கினோம். தகவல்கள் நம்மிடம் இல்லை. மத்திய அரசின் நிறுவனங்களிடமே உள்ளன. இவற்றைத் தேடி எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. 17-ஆம் தேதி இரவு வரை விற்பனை நிலவரத்தை எடுத்துப் பார்த்தால் சில விவரங்கள் தெரிய வருகிறது.

ஆகஸ்ட் 1-ஆம் தேதி முதல் 13-ஆம் தேதிவரை 9 ஆயிரத்து 188 கிலோ லிட்டர் சராசரியாக பெட்ரோல் விற்பனைசெய்யப்படுகிறது. வரியைக் குறைத்த பிறகு, நான்கு நாள்கள் சரியாக 10 ஆயிரத்து 317 கிலோ லிட்டர். 11.28 லட்சம் லிட்டர் பெட்ரோல் விற்பனை அதிகரித்துள்ளது. யாருக்கோ பலன் கிடைத்துள்ளது. விலை குறைந்ததால் மக்கள் கூடுதலாக பயணம் செய்யத் தொடங்கியுள்ளனர்.

12 சதவீதம் விற்பனை அதிகரித்துள்ளது. பெட்ரோல் பயன்பாடு அதிகரிப்பால், வரி வருவாயாக நாளொன்றுக்கு மத்திய அரசுக்கு ரூ.3.55 கோடி கூடுதலாகக் கிடைத்து வருகிறது. ஏற்கெனவே கிடைத்த வருவாயுடன் ஆண்டுக்கு சுமார் ரூ.1,200 கோடி அதிகமாகக் கிடைக்கும் என்றார்.

# நிதித் துறை வளாகக் கட்டடத்துக்கு க.அன்பழகன் பெயர்

**சென்னை, ஆக. 19:** சென்னை நந்தனத்தில் உள்ள நிதித் துறை வளாகக் கட்டடத்துக்கு மறைந்த முன்னாள் நிதியமைச்சர் க.அன்பழகன் பெயர் சூட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

சட்டப் பேரவையில் நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் இதற்கான அறிவிப்பை வியாழக்கிழமை வெளியிட்டார். நிதித் துறையின் கீழ் செயல்பட்டு வரும் 10 அலுவலகங்களுக்கு சென்னை நந்தனத்தில் ஒருங்கிணைந்த நிதித் துறை அலுவலக வளாகக் கட்டடம் ரூ.36.33 கோடியில் கட்டப்பட்டது. இந்தக் கட்டடம் 2017-ஆம் ஆண்டு மார்ச்சில் திறக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# குமரி மாவட்டத்தில் சாலைகளை சீரமைக்க நடவடிக்கை

## அமைச்சர் எ.வ.வேலு தகவல்

**சென்னை, ஆக. 19:** குமரி மாவட்டத்தில் சாலைகளைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு உறுதியளித்தார்.

சட்டப் பேரவையில் இதுகுறித்த சிறப்பு கவனஈர்ப்பு தீர்மானத்தை காங்கிரஸ் உறுப்பினர் எஸ்.ராஜேஷ்குமார் வியாழக்கிழமை கொண்டு வந்தார். அப்போது பேசிய அவர், கடந்த 5 ஆண்டுகளாக குமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி-களியக்காவிளை, காவல்கிணறு-பார்வதிபுரம் இடையிலான சாலையை செப்பனிடக் கோரிக்கை விடுத்தோம். ஆனால், நடவடிக்கை எடுக்கப்படவில்லை. குடிநீர் வடிகால் வாரிய குழாய்கள் போடப்பட்டுள்ளதால், போக்குவரத்துக்கு தடையாக உள்ளது. எனவே, சாலையைச் சீர் செய்து தர வேண்டும் என்றார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் எ.வ.வேலு, இந்தப் பிரச்னை குறித்து நெடுஞ்சாலை ஆணையரக அதிகாரிகளிடமும் பேசப்பட்டது. பாதாள சாக்கடை பணிகள் முடிந்தவுடன் தற்காலிக சாலை சீரமைப்புப் பணிகளில் ஈடுபடலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில், முன்னுரிமை அளித்து சாலை செப்பனிடப்படும். குடிநீர்க் குழாய் இணைப்புப் பணிகளை விரைந்து முடிப்பது குறித்து நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேருவிடமும் வலியுறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

# புளியந்தோப்பு குடியிருப்பு கட்டுமானம்: யார் தவறிழைத்தாலும் கடும் நடவடிக்கை

## அமைச்சர் உறுதி

**சென்னை, ஆக. 19:** சென்னை புளியந்தோப்பு குடியிருப்பு கட்டுமான விவகாரத்தில் யார் தவறு செய்தாலும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சட்டப் பேரவையில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறினார்.

சென்னை புளியந்தோப்பு குடிசை மாற்று வாரிய குடியிருப்புப் பிரச்னை குறித்து, சட்டப் பேரவையில் சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதனை திமுக உறுப்பினர் பரந்தாமன், காங்கிரஸ் உறுப்பினர் செல்வப்பெருந்தகை ஆகியோர் கொண்டு வந்தனர். இந்தத் தீர்மானத்தின் மீது பரந்தாமன் பேசுகையில், ஒன்பது தளங்களைக் கொண்ட குடியிருப்பு ஓராண்டு நான்கு மாதங்களுக்குள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தொட்டால் சிணுங்கியைப் பார்த்திருக்கிறோம். ஆனால், தொட்டால் சிமெண்ட் உதிரும் கட்டடத்தை அங்கு பார்க்கலாம். இந்தக் கட்டடத்துக்கு சான்றளித்த அதிகாரிகள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் துறைக்கு பொறுப்பு வகித்த அமைச்சர் ஆகியோர் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.



இதைத் தொடர்ந்து, ஊரகத் தொழில்கள் மற்றும் குடிசை மாற்று வாரியத் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் அளித்த பதில்:

புளியந்தோப்பில் கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகள் கரோனா சிகிச்சை மையமாக பயன்பாட்டில் இருந்து வந்தன. கட்டடத்தின் தரம் மற்றும் உறுதித்தன்மை குறித்து ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. இதனை நேரில் ஆய்வு செய்தோம். கட்டடத்தின் தரம் மற்றும் உறுதித் தன்மை குறித்து ஆய்வு மேற்கொண்டு அறிக்கை அளிக்க இந்திய தொழில்நுட்பக் கழகத்துக்கு (ஐஐடி) கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அவர்கள் ஆய்வு செய்து தரும் அறிக்கையில் கட்டுமானப் பணிகளில் தவறு என சுட்டிக் காட்டப்பட்டால் அந்தக் குடியிருப்பைக் கட்டிய ஒப்பந்ததாரர், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். இதில் பாரபட்சம் ஏதும் பார்க்க மாட்டோம் என்றார்.

https://t.me/Tamil_epaper2

CUB
சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்
கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை
நிர்வாக அலுவலகம் : எண் 24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612 001. மின்னஞ்சல் : crmd@cityunionbank.in
போன் : 0435-2432322, ஃபேக்ஸ் : 0435-2431746
[illegible]
நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.1,50,00,000/-
[illegible]

CUB
சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்
கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை
நிர்வாக அலுவலகம் : எண் 24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612 001. மின்னஞ்சல் : crmd@cityunionbank.in
போன் : 0435-2432322, ஃபேக்ஸ் : 0435-2431746
[illegible]
பதிவு அலுவலகம் : எண் 149, T.S.R. (பெரிய) தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம் - 612 001. CIN - L65110TN1904PLC001287, போன் : 0435-2402322, ஃபேக்ஸ் : 0435-2431746, இணையதளம் : www.cityunionbank.com

யூகோ வங்கி
(இந்திய அரசு நிறுவனம்)
சௌகார்பேட்டை கிளை, எண்.18, தேவராஜ முதலி தெரு, சௌகார்பேட்டை, சென்னை-600003. போன்:044-25354614. மின்னஞ்சல்: sowcar@ucobank.co.in

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு (SARFAESI ACT 2002-ன் கீழ்)
அசையா சொத்தை மின்னணு ஏல விற்பனை மூலம் விற்பதற்கான பொது அறிவிப்பு

[illegible] ரூ.13,34,106.99-ஐ வசூலிக்கும் பொருட்டு 24.09.2021 அன்று விற்பனை செய்யப்படவிருக்கிறது.
* மின்னணு ஏல தேதி மற்றும் நேரம் : 24.09.2021-அன்று காலை 11.00 மணி முதல் [illegible]

| கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர் பெயர் & முகவரி / பாக்கித்தொகை / சுவாதீன அறிவிப்பு தேதி | குறைந்த பட்ச விலை / டேவணித் தொகை (EMD) |
|---|---|
| கடன்தாரர்: 1. திரு. டேவிட்சன் ராஜகுமார், [illegible] 2. திருமதி [illegible] B602, [illegible] சென்னை-600044. 17.08.2021-அன்றுள்ள படியான பாக்கித்தொகை: ரூ.13,34,106.99 - 17.08.2021 [illegible] கோரிக்கை அறிவிப்பு தேதி: 26.04.2021, சுவாதீன அறிவிப்பு தேதி: 02.07.2021. | குறைந்தபட்ச விலை: ரூ.31,23,000/- டேவணித் தொகை: ரூ.3,12,300/- |

சொத்து விபரம்
[illegible]

| இனம் எண் | சர்வே எண் | பரப்பளவு சென்ட் | வடக்கில் சர்வே எண்(கள்) | தெற்கில் சர்வே எண்(கள்) | கிழக்கில் சர்வே எண்(கள்) | மேற்கில் சர்வே எண்(கள்) |
|---|---|---|---|---|---|---|
| I | 262/2B2 PT | 11 | 262/1A1A1 & 258/2 PART | 259/2 PART | 262/2B2 PART | 258/2 PART |
| II | 262/2B2 PT | 34.12 | 262/1A1A1 | 259/2 PT | 18 meter wide public road 502 | 262/2B2 PART |
| III | 259/2 PT | 9 | 255/1A1 | 262/2B2PT and 259/2PT | 262/1A1A1 and 262/2B2PT | 259/2 PT |
| IV | 258/2 PT | 117 | 258/2PT | 509/1, 508, 259/1, 259/2 | 258/2PT AND 259/2PT | 258/1 |
| V | 258/2 PT | 100 | 256 and 257 | 258/2 Part | 259/2 Part | 258/1 |
| VI | 259/2 Part | 81.31 | 262/2B2 Part and 258/2 Part | 507 Part and 502 | 18 Mtrs Wide Public Road 502 | 506 and 508 |
| VII | 507 PT | 140.96 | 259/2PT | 506PT & 502 | 18 Mtrs Wide Public Road 502 | 506 & 508 |
| VIII | 510 | 92 | 509/2 | 511/1 PT 511/3A; 511/3B & 512/3 | 512/3; 509/2 | 222B; &511/1 PT |
| IX | 512/3 | 73 | 508 & 509/2 | 512/1 | 506PT | 510 |
| X | 512/2 PT | 55.84 | 512/1 | 12 Mtrs public road | 506PT | 511/2A2 PT; 511/2B2/ & 511/3B |
| XI | 506 PART | 170.49 | 507 & 508 | 502; 503; 505; & 12 Mtrs public road | 502; 503; 505; & 507 | 512/3; 512/1 & 512/2 PART |
| XII | 512/1 | 77 | 512/3 | 512/2 PART | 506 PART | 511/3B |
| XIII | 511/1 PT | 29.31 | 510 | 12 meter wide public road | 511/2B1PT, 511/3A and 510 | 222B |
| XIV | 511/2B1 | 5 | 511/3A | 511/2A1 PT | 511/2B2 | 511/1 PT |
| XV | 511/2B2 | 3 | 511/3B | 511/2A2, 511/2A1; PART | 512/2 PART | 511/2B1 |
| XVI | 511/3A | 36 | 510 | 511/2B1 | 515/3B | 511/1 PT |
| XVII | 511/3B | 15 | 510 | 511/2B2 | 512/1 & 512/2 PT | 511/3A |
| XVIII | 511/2A1 Part | 7.64 | 511/2B1 and 511/2B2 | 12 meter wide public road | 511/2A2 Part | 511/2A1 Part |
| XIX | 511/2A2 Part | 2.77 | 511/2B2 | 12 meter wide public road | 512/2 Part | 511/2A1 Part |

[illegible] சொத்து திரு.டேவிட்சன் ராஜகுமார் M. அவர்களுக்குச் சொந்தமானது.
[illegible] 20.08.2021 [illegible] 11.00 மணி முதல் மதியம் 01.00 வரை [illegible] https://ibapi.in & https://ibapi.in/Saleinfo_Login.aspx-ஆகிய இணையதளங்களில் [illegible] 9176041007 அல்லது 044-25354614 [illegible]
இடம்: சென்னை
தேதி: 19.08.2021
அதிகாரபூர்வ அலுவலர், யூகோ வங்கி
[illegible]

SBI
பாரத ஸ்டேட் பாங்கு
[illegible] சொத்து நிர்வாகக் கிளை
அதிகாரபூர்வ அலுவலர் விபரங்கள்: பெயர்: திருமதி.K.பிரியா மொபைல்: 7338802929, தொ.பே: 044-28881008.
[illegible] # 32, [illegible] எழும்பூர், சென்னை-600008. தொ.பே:044-28881007 மின்னஞ்சல்: sbi.04105@sbi.co.in

அசையா சொத்துகளின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு
[See Proviso to Rule 8(6)]
[illegible] 31.07.2021 அன்றுள்ளபடியான பாக்கித் தொகை ரூ. 27,46,93,919.68/- [illegible] 07.09.2021 அன்று [illegible]
[illegible]
குறைந்தபட்ச விலை ரூ.19,00,000/- டேவணித் தொகை ரூ.1,90,000/- (குறைந்தபட்ச விலையில் 10%)
உயர்த்தும் ஏலத்தொகை: இனம் 1: ரூ.2,00,000/-, இனம் 2: ரூ.20,000/-
சொத்துகளைப் பார்வையிடும் தேதி - நேரம்: தேதி: 04.09.2021 ; நேரம்:காலை 11.00 முதல் பிற்பகல் 03.00 மணி [illegible] A.R.S. [illegible] : 9840651168
ஏலத்தில் பங்கேற்பதற்கான வேண்டுகோள் கடிதம் /KYC ஆவணம்/EMD செலுத்திய ஆதாரம் சமர்ப்பிக்க தேதி - நேரம்: தேதி: 06.09.2021 நேரம் மாலை 4.00 மணி வரை.
மின் ஏலத் தேதி & நேரம் 07.09.2021 நேரம்: காலை 11.00 முதல் மாலை 04.00 மணி வரை [illegible]
EMD செலுத்துதல்: NEFT [illegible] M/s.MSTC லிமிடெட் [illegible] https://www.mstcecommerce.com/auctionhome/ibapi/index.jsp [illegible]
[illegible] M/s.MSTC லிமிடெட் [illegible] https://www.mstcecommerce.com/auctionhome/ibapi/index.jsp [illegible] www.sbi.co.in மற்றும் https://www.mstcecommerce.com/auctionhome/ibapi/index.jsp [illegible]
இந்த விற்பனை வருமான வரி சட்டம் 194-IA-விற்கு உட்பட்டது.
இடம்: சென்னை
தேதி: 13.08.2021
உதவி பொது மேலாளர் - அதிகாரப்பூர்வ அலுவலர், பாரத ஸ்டேட் பாங்கு, SAM கிளை, சென்னை

வெள்ளிதோறும் தினமணியுடன்... வெள்ளி மணி

# பனை ஏறுவதற்கான கருவி பயன்பாட்டை பரவலாக்க வேண்டும்

**குமரி அனந்தன்**

**சென்னை, ஆக. 19:** பனை ஏறுவதற்கான கருவியின் பயன்பாட்டை பரவலாக அதிகரிக்க வேண்டும் என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவரும், பனைமரத் தொழிலாளர் நல வாரிய முன்னாள் தலைவருமான குமரி அனந்தன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கை: வேளாண்மைக்குத் தனிச் சிறப்பு கொடுத்து தனி நிதி நிலை அறிக்கை வெளியிடச் செய்த முதல்வரைப் பாராட்டுகிறேன். அதில் பனைக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் முக்கியத்துவத்துக்கு எனது பாராட்டுகள்.

76 லட்சத்துக்கும் மேற்பட்ட பனை விதைகளை எங்கும் இலவசமாக வழங்கவும், 1 லட்சம் பனை மரக்கன்றுகளை நடவும், ரேஷன் கடைகளில் கருப்பட்டி மற்றும் பனைப் பொருள்களை விற்கவும் முடிவெடுத்திருப்பது எங்கள் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றுவதாகும்.

பனைகளை வெட்டக் கூடாது, தவிர்க்க முடியாத நிலையில் ஏதேனும் பனையை அகற்ற வேண்டுமென்றாலும், மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி பெற வேண்டும் என்பதும், பனை மேம்பாட்டு இயக்கம் தொடங்கியிருப்பதும் மிகவும் பாராட்டத்தக்கதாகும்.


உடலை வைத்து அழுத்தி பனை ஏறுவதைவிட, ஏறுவதற்குரிய இயந்திரம் வேண்டும் என நான் கோவை வேளாண்மைக் கல்லூரியை அணுகி வேண்டுகோள் வைத்தேன்.

அவர்கள் 2010-இல் அக்கருவியைச் செய்து தந்தார்கள். அக்கருவியின் பயன்பாட்டை பரவலாக அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

## யுவ சம்மான் விருது...



சென்னை நுங்கம்பாக்கம் எம்.ஓ.பி. வைணவ மகளிர் கல்லூரியில் 4- ஆம் ஆண்டாக வியாழக்கிழமை நடைபெற்ற 'யுவ சம்மான்' விருது வழங்கும் விழாவில் (இடமிருந்து) கர்நாடக இசைக் கலைஞர் சிவஸ்ரீ ஸ்கந்தபிரசாத், தொழிலதிபர் காயத்ரி, கல்லூரி முதல்வர் லலிதா பாலகிருஷ்ணன், விருது வழங்கிய சட்டப்பேரவை உறுப்பினர் உதயநிதி ஸ்டாலின், தேசிய டென்னிஸ் வீராங்கனை சாய் சமிதா, தமிழ் இலக்கியச் சொற்பொழிவாளர் கங்காதேவி.



## தீநுண்மிக் குறள்

☞ தினைத் துணையே போல்
தோன்றிடினும் தடுப்பூசி
பனைத் துணையாய்
பயன் கொடுக்கும்.

தகவல்:
தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்.

# மெட்ராஸ் தின நிகழ்ச்சிகள்: பொதுமக்கள் பங்கேற்க அழைப்பு

**சென்னை, ஆக. 19:** மெட்ராஸ் தின நிகழ்ச்சிகளையொட்டி நடைபெறவுள்ள போட்டிகளில் பங்கேற்க பொதுமக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக் குறிப்பு: ஒவ்வோர் ஆண்டும் ஆக.22-ஆம் தேதி மெட்ராஸ் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. மதராசப்பட்டினம் 1639-ஆம் ஆண்டு முதல் தற்போது வரை பல்வேறு நிலைகளில் வளர்ச்சி அடைந்து சென்னை மாநகரமாக 382-ஆவது ஆண்டை நிறைவு செய்துள்ளது.

மேலும் இந்தச் சிறப்பு மிக்க மெட்ராஸ் தினத்தைக் கொண்டாடும் வகையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தூய்மைப் பணி உள்பட பல்வேறு நிகழ்ச்சிகளும், பொதுமக்கள், கல்லூரி, பள்ளி மாணவர்கள் மற்றும் கலைஞர்கள் பங்குபெறும் வகையில் போட்டிகளும் நடத்தப்பட உள்ளன.

அதன்படி, குடிசைப் பகுதிகளில் சுவர்களில் வரையப்பட்ட வண்ண ஓவியங்களை சுய புகைப்படம் (செல்ஃபி) எடுத்து 94451 90856 என்ற எண்ணுக்கு கட்செவி அஞ்சல் (வாட்ஸ் ஆப்) வாயிலாக அனுப்பி வைக்கலாம். இதில் சிறந்த சுவர் ஓவியங்கள் மாநகராட்சியின் சுட்டுரை தளத்தில் பகிரப்படும். மாநகராட்சி பூங்காக்கள் மற்றும் நீர்நிலைகளில் உள்ள பறவைகளை புகைப்படம் எடுத்து twitter@chennaicorp-இல் பகிரலாம்.

ஆர்வமுள்ள பொதுமக்கள், தன்னார்வலர்கள் மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்கள் மெட்ராஸ் தின நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவும், மேலும், இந்த நிகழ்ச்சிகளை சிறப்பாக கொண்டாட சிஎஸ்ஆர் நிதியை வழங்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்க பொதுமக்கள் மற்றும் தன்னார்வலர்கள் தங்களுடைய விவரங்களை https://forms.gle/8KYXEhgjuTK7opfR7 என்ற இணைப்பில் பதிவேற்றம் செய்யலாம். மேலும், மாநகராட்சியின் சார்பில் ஆக.20,21 ஆகிய தேதிகளில் சிங்காரச் சென்னை குறித்த ஓவியப் போட்டி (14 வயதுக்குட்பட்டவர்கள்), சிங்காரச் சென்னை குறித்த புகைப்படப் போட்டி, ஆக.22-ஆம் தேதி, மாநகராட்சி கட்டடச் சுவர்கள், பாலங்களின் கீழுள்ள இடங்கள் மற்றும் இதரப் பொது இடங்களை மறுவடிவமைக்கும் திட்ட வரைபடப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இவற்றில் கலந்து கொள்ள விருப்பமுள்ள நபர்கள் தங்களுடைய படைப்புகளை https://chennaicorporation.gov.in/gcc/onlineservices/comp/home.jsp என்ற இணையதள இணைப்பில், குறிப்பிட்டுள்ள போட்டிகளுக்கான நாள்களில் பதிவேற்றம் செய்யலாம்.

இதுதவிர, சென்னை மாநகரின் அடையாளத்தைக் குறிக்கும் சிற்பங்களைத் தயார் செய்து ஆக.22 முதல் 28-ஆம் தேதி வரை நேரடியாக மாநகராட்சி தலைமையிடத்தில் உள்ள சென்னை சீர்மிகு நகரத் திட்ட அலுவலகத்தில் வழங்கலாம். மேலும், விவரங்களுக்கு 94451 90856 என்ற கட்செவி அஞ்சல் எண்ணை அணுகலாம் என அதில் கூறப்பட்டுள்ளது.

# கோயில்களில் வயது மூப்பைத் தாண்டியோருக்கு தினக் கூலி அடிப்படையில் பணி

**இந்து சமய அறநிலையத் துறை உத்தரவு**

**சென்னை, ஆக. 19:** கோயில்களில் வயது மூப்பைத் தாண்டியோருக்கு தினக் கூலி அடிப்படையில் பணி வழங்க அனுமதி அளித்து இந்து சமய அறநிலையத்துறை உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் ஜெ.குமரகுருபரன் வியாழக்கிழமை அனுப்பிய சுற்றறிக்கை: கோயில்களில் ஏற்கெனவே பணியாற்றிக் கொண்டிருக்கும் அர்ச்சகர்கள் உள்ளிட்ட பணியாளர்கள் யாரும் விடுவிக்கப்பட மாட்டார்கள் என்பதை சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

கோயில்களில் அர்ச்சகர்கள் வயது மூப்பைத் தாண்டியும் தொடர்ந்து பணியாற்றி வரும் நிலையில் அவர்களை தினக் கூலி அடிப்படையில் தொடர்ந்து அங்கேயே பணியாற்ற அனுமதிக்கலாம்.

புதிய பணியிடங்களுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டிய தேவை ஏற்பட்டால் அது குறித்த பரிந்துரைகளை இந்து சமய அறநிலையத் துறை ஆணையரக அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கலாம். பணிவரன்முறைகள் உள்ளிட்ட கோரிக்கைகள் இருந்தாலும் அதையும் உடனடியாக அனுப்பலாம். இது தொடர்பாக தேவையற்ற சிக்கல்கள் ஏற்படுத்தப்படுவது விரும்பத்தக்கதல்ல.

வேறு ஏதேனும் தேவையற்ற சிக்கலான பிரச்னைகள் உருவாக்கப்பட்டால் அதற்கு கோயில் நிர்வாக அதிகாரிகளே பொறுப்பாவார்கள். அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதுபோன்ற சூழ்நிலைகள் எழுந்தால் அதற்கு இணை ஆணையர்கள் அல்லது உதவி ஆணையர்கள் பொறுப்பேற்க வேண்டிய நிலை ஏற்படும்.

தேவையற்ற சிக்கலான செய்திகள் உருவாவதற்கு எந்த இடமும் அளிக்க வேண்டாம். இது குறித்து கோயில் அலுவலர்களுக்கு உடனடியாக அறிவுறுத்தல்களை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.


**ஹோம் ஃபர்ஸ்ட் ஃபைனான்ஸ் கம்பெனி இந்தியா பிரைவேட் லிமிடெட்**
CIN: U65990MH2010PTC240703
இணையத்தளம்: homefirstindia.com தொலைபேசி: 180030008425 மின்னஞ்சல் முகவரி : loanfirst@homefirstindia.com

தனிப்பட்ட முறையிலான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002–இன் கீழான கடனீட்டுச் சொத்து விற்பனை (விதி 8(6)-இன் கீழான அறிவிப்பு)

கீழே கையொப்பமிட்டுள்ளவர் ஹோம் ஃபர்ஸ்ட் ஃபைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டின் (ஹோம் ஃபர்ஸ்ட்) அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால் நீங்கள் எங்களுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகளுக்காக தொடர்புடைய சட்டத்தின் பிரிவு 13(4)-இன்படி அட்டவணையிலுள்ள சொத்துக்களை சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார். இது தொடர்பாக நாங்கள் கீழ்க்காணும் குறைந்தபட்சத் தொகைகளைத் தீர்மானித்து நாளிதழில் ஏல அறிவிப்பு வெளியிட்டிருந்தது குறித்துக் கீழ்க்காணும் நாளிட்ட எமது அறிவிப்புகளில் தெரிவித்திருந்தோம். அந்த ஏலங்கள் கீழ்க்காணும் நாட்களில் நடைபெறுவதாகத் திட்டமிடப்பட்டிருந்தன. ஆனால் ஏலதாரர்களின் வருகைக் குறைவு காரணமாக அந்த ஏலங்கள் வெற்றிகரமாக நடைபெறவில்லை.

எனவே பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், நிலுவைத்தொகைகளைத் திரும்பப் பெறுவது தொடர்பாக நிறுவனத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள விதிமுறைகளின்படி அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கடனீட்டுச் சொத்துக்கள் "உள்ள இடத்தில் உள்ளபடி", "உள்ளது உள்ளபடி" எனும் அடிப்படையில் தனிப்பட்ட முறையிலான விற்பனைக்கு விடப்படுகின்றன. எனினும் தொடர்புடைய சட்டம் மற்றும் அதன் கீழான விதிமுறைகளின்படி, இவ்வறிவிப்பு நாளிலிருந்து 15 நாட்களுக்குள் நிறுவனத்துக்கு வர வேண்டிய நிலுவைத்தொகைகளை முழுமையாகச் செலுத்தி அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை மீட்டுக் கொள்ள உங்களை ஆயத்தப்படுத்தும் பொருட்டு நாங்கள் இந்த அறிவிப்பை உங்களுக்கு வெளியிடுகிறோம். தவறினால், கடன்களைத் தீர்வை செய்யும் பொருட்டு குறிப்பிட்ட சொத்துக்கள் விற்பனை செய்யப்படும். இது தொடர்புடைய சட்டம் அல்லது நடைமுறையில் உள்ள வேறெந்த சட்டத்தின் கீழும் நிறுவனத்துக்கு இருக்கும் வேறெந்த உரிமைக்கும் பாதகமேற்படாத வகையிலானது.

ஆர்வமுள்ளோர் மேலும் விவரங்களுக்கும் / தகவல்களுக்கும் மற்றும் தங்கள் விலைகோரல்களை சமர்ப்பிப்பதற்கும் அதிகாரப்பூர்வ அலுவலரைத் தொடர்பு கொள்ளலாம். விற்பனையானது SARFAESI சட்டத்தின்படி / விதிகளின்படி நடைபெறும்.

| வ. எண் | அமைவிடம் | கணக்கு / ஜாமீன்தாரர்கள் பெயர் | சொத்து / சொத்தின் உரிமையாளர் விவரங்கள் | கோரிக்கை அறிவிப்புப்படி நிலுவைத் தொகை (ரூபாயில்) | விற்பனை அறிவிப்பு நாள் | நாளிதழ் | E- ஏல நாள் | குறைந்தபட்ச விலை (ரூபாயில்) | அதிகாரப்பூர்வ அலுவலரின் எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | காசிவிஸ்வநாதன் C, அலமேலு K | வீட்டு மனை எண் 63, 241/1, நேரு நகர் லேஅவுட், சர்வே எண் 241/1, வெள்ளிவாயல் சாவடி கிராமம், பொன்னேரி வட்டம், திருவள்ளூர், தமிழ்நாடு 600103 | 25,58,814 | 14.07.21 | நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தினமணி | 14.08.21 | 12,00,000 | 9940680430 |

**SARFAESI சட்டம் 2002-இன் கீழான சட்டப்படியான 15 நாள் விற்பனை அறிவிப்பு**

கடன்தாரர்களுக்கு / ஜாமீன்தாரர்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தொகையை நாளது வரையிலான வட்டி மற்றும் இதர செலவுகளுடன் இவ்வறிவிப்பு நாளிலிருந்து 15 நாட்களுக்கு முன்னர் செலுத்தி விட வேண்டும். தவறினால் குறிப்பிட்ட சொத்தானது ஏலம் விடப்பட்டு / விற்பனை செய்யப்பட்டு பாக்கித் தொகை ஏதேனும் இருப்பின் அது வட்டி மற்றும் செலவினத்துடன் வசூலிக்கப்படும்.

நாள்: 20.08.2021, இடம்: சென்னை
ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், ஹோம் ஃபர்ஸ்ட் ஃபைனான்ஸ் கம்பெனி இந்தியா பிரைவேட் லிமிடெட்

**THE TAMILNADU COOPERATIVE TEXTILE PROCESSING MILLS LTD., C.H.22**
428, BHAVANI MAIN ROAD, ERODE -638 004
Phone: (0424) 2293907 Fax: (0424) 2293528 E-mail: tctpmill2015@gmail.com
Ref.No. A/C/675/2021 **TENDER NOTICE** DATE : 20.08.2021

Sealed Tenders in a two-bid (two cover) system are invited from Manufacturers, Dealers for the Supply of Textile Dyes, Processing Chemicals/Auxiliary Chemicals for processing of Cotton as well as Man made fabrics for period up to 31-03-2022 in accordance with terms and conditions detailed in the Tender Schedule. The filled tenders should be submitted in two cover system i.e. Technical Bid & Price Bid separately enclosed in single cover and sent in a sealed cover superscribed as "TENDERS FOR THE SUPPLY OF TEXTILE DYES/ CHEMICALS/ AUXILIARIES FOR THE PERIOD UPTO 31.03.2022" should reach this office on or before 11.00 AM on 13.09.2021 along with Tender Cost, EMD and required documents as specified in the Tender Schedule. The tender documents can also had in person from the office of the Mills from 20.08.2021 by remitting cost as noted in the Tender Schedule. The Tender documents can also be downloaded from the Government website www.tenders.tn.gov.in at free of cost. The dates and timings of the Tender opening meeting details will be available in the tender schedule uploaded in the above noted website.

JOINT DIRECTOR / MANAGING DIRECTOR

https://t.me/Tamil_epaper2

APTUS

கனரா வங்கி
அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு
[ANNEXURE - 10 - SECTION 13(4)]
இடம் : சென்னை
தேதி : 18.08.2021
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
கனரா வங்கி

citibank NA
உடைமை அறிவிப்பு
நாள்: 15.08.2021
இடம்: சென்னை

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு
தேதி : 16.08.2021
இடம் : சென்னை

தமிழ்நாடு அரசின்
10 ஆண்டுகாலப் பிணையப் பத்திரங்களை ஏலத்தின் மூலம் விற்பனை செய்தல்
1. தமிழ்நாடு அரசு மொத்தம் ரூ.1000.00 கோடி மதிப்புள்ள பத்து ஆண்டுக்காலப் பிணையப் பத்திரங்களை ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய முன்வந்துள்ளது. ... ஆகஸ்ட் 24, 2021 அன்று இந்த ஏலத்தை நடத்தும்.
2. ... (Revised Scheme for Non-Competitive Bidding Facility) ... (Primary Dealer) ...
3. ... (Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System) ... (electronic format) ஆகஸ்ட் 24, 2021 ...
அ) ... 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
ஆ) ... 10.30 மணியிலிருந்து 11.00 மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
4. ... (Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System) ...
5. ... ஆகஸ்ட் 24, 2021 ... (Bankers' Cheque) ... (Demand Draft) ஆகஸ்ட் 25, 2021 ...
6. ... பிப்ரவரி 25 மற்றும் ஆகஸ்ட் 25 ... (Government Securities Act, 2006) ... (Government Securities Regulations, 2007) ...
7. ... (Ready Forward Facility) ...
8. ... ஆகஸ்ட் 19, 2021 ... 564(L)/W&M-II/2021 ...
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்துறை, சென்னை–9.

# ஆன்மிக சிந்தனை

ஒருவன் இடைவிடாது ஒளியிலும், சாந்தியிலும் வளர வேண்டும். சொந்த ஆசை இல்லா இடத்து அவை வரும். எப்பொழுதும் ஆழ்ந்த அமைதியிலேயே உண்மையான அக்னி எரியும்; அது அனைத்தையும் வெல்லவல்ல இச்சா சக்தியின் தீ. பூரணமான சாந்தத்தில் அது உன்னிடத்தில் வளரட்டும்.

–ஸ்ரீஅன்னை

துன்மார்க்கர் கர்ப்பத்தில் உற்பவித்தது முதல் பேதலிக்கிறார்கள்; தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் பொய் சொல்லி வழிதப்பிப் போகிறார்கள்.

–சங்கீதம் 58:3

பணம், காசுக்கு அடிமைப்பட்டவன், சபிக்கப்பட்டவனாக இருக்கின்றான்.

–நபிகள் நாயகம் (ஸல்)

# இன்றும் நாளையும்

## வெள்ளிக்கிழமை

(20–08–2021)

பிலவ ஆண்டு, ஆவணி – 04

**பிறை:** வளர்பிறை.

**திதி** : திரயோதசி இரவு 08.46 வரை பிறகு சதுர்த்தசி.
**நட்சத்திரம்** : உத்திராடம் இரவு 10.02 வரை பிறகு திருவோணம்.
**யோகம்** : சித்த / மரண யோகம்.
**ராகுகாலம்** : காலை 10.30 – 12.00 மணி.
**எமகண்டம்** : பிற்பகல் 3.00 – 4.30 மணி.
**சூலம்** : மேற்கு.
**நல்ல நேரம்** : காலை 6 – 7 மணி. மாலை 5 – 6 மணி.

**இன்றைய விசேஷம்:** பிரதோஷம். சுப முகூர்த்த தினம். வரலட்சுமி விரதம். மதுரை ஸ்ரீ சுந்தரேசுவரர் விறகு விற்றருளிய லீலை. சங்கரன்கோவில் ஸ்ரீ கோமதியம்மன் தங்கப் பாவாடை தரிசனம். கீழ்த்திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாளுக்கு காலை திருமஞ்சனம், மாலை ஊஞ்சல் சேவை, மாடவீதி புறப்பாடு. ராமேசுவரம் ஸ்ரீ பர்வதவர்த்தினி அம்மன் நவசக்தி மண்டபம் எழுந்தருளி, தங்கப் பல்லக்கில் புறப்பாடு. திருவிடைமருதூர் ஸ்ரீ பிருகத் குசாம்பிகை சமேத ஸ்ரீ மகாலிங்க சுவாமி மாலை ரிஷப வாகனத்தில் பவனி.

| | |
|---|---|
| மேஷம் | நன்னடத்தை |
| ரிஷபம் | புகழ் |
| மிதுனம் | பரிவு |
| கடகம் | இன்பம் |
| சிம்மம் | பாசம் |
| கன்னி | நிம்மதி |
| துலாம் | சுகம் |
| விருச்சிகம் | மகிழ்ச்சி |
| தனுசு | சுபம் |
| மகரம் | பிரீதி |
| கும்பம் | உற்சாகம் |
| மீனம் | ஆக்கம் |

## சனிக்கிழமை

(21–08–2021)

பிலவ ஆண்டு, ஆவணி – 05

**பிறை:** வளர்பிறை.

**திதி** : சதுர்த்தசி இரவு 07.19 வரை பிறகு பௌர்ணமி.
**நட்சத்திரம்** : திருவோணம் இரவு 09.22 வரை பிறகு அவிட்டம்.
**யோகம்** : சித்த யோகம்.
**ராகுகாலம்** : காலை 9.00 – 10.30 மணி.
**எமகண்டம்** : நண்பகல் 1.30 – 3.00 மணி.
**சூலம்** : கிழக்கு.
**நல்ல நேரம்** : காலை 7 – 8 மணி. மாலை 5 – 6 மணி.

**இன்றைய விசேஷம்:** ஓணம் பண்டிகை. திருவோண விரதம். ரிக் உபாகர்மா, ஆசுவலாயன உபாகர்மா. மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் சட்டத் தேர் சப்தாவரணம். திருநள்ளாறு ஸ்ரீ சனி பகவான் சிறப்பு அபிஷேகம், அலங்காரம். காஞ்சிபுரம் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் சிறப்பு திருமஞ்சன சேவை. உப்பிலியப்பன் கோயில் ஸ்ரீ சீனிவாசப் பெருமாள் சிறப்பு ஸ்திரவார திருமஞ்சன சேவை. விருதுநகர் ஸ்ரீ சொக்கநாதர் ரிஷப வாகனத்தில் பவனி.

| | |
|---|---|
| மேஷம் | பயிற்சி |
| ரிஷபம் | மௌனம் |
| மிதுனம் | பக்தி |
| கடகம் | நற்சொல் |
| சிம்மம் | சுகம் |
| கன்னி | ஆதரவு |
| துலாம் | ஊக்கம் |
| விருச்சிகம் | லாபம் |
| தனுசு | வரவு |
| மகரம் | ஆசை |
| கும்பம் | போட்டி |
| மீனம் | அமைதி |

தினமணி இந்தியா@75 ஆகஸ்ட் 1947 - 2021

# தமிழகத்தின் தியாக தீபங்கள்

## 6 சக்கரை செட்டியார்



சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் தத்துவப் பாடத்தில் பட்டம் பெற்று பின்னர் சட்டம் படித்து வழக்குரைஞரானவர் சக்கரை செட்டியார். இவர் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர். இவரிடமிருந்த அபரிமிதமான ஆங்கிலப் புலமையும் பேச்சாற்றலும் அரசியலில் ஆர்வம் கொள்ள வழிவகுத்தது.

தேசியத் தலைவர்களின் உரைகளும் உறவும் இவரைச் செயல்படத் தூண்டின. இரண்டாண்டு காலத்திலேயே வழக்குரைஞர் தொழிலைத் துறந்து விடுதலைப் போராட்டத்தில் முழுக் கவனம் செலுத்தினார். 1924 முதல் இருந்து 1948 வரை 24 ஆண்டுகள் சென்னை மாமன்ற உறுப்பினராகத் தொடர்ந்து பணியாற்றினார். இடையில் 1941–1942 ஆண்டுகளில் சென்னை மாநகராட்சியின் மேயராகவும் திகழ்ந்துள்ளார்.

அது நேதாஜி காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து உள்கட்சி நெருக்கடியால் விலகிய காலகட்டம். சென்னை மாநகருக்கு 1939–ஆம் ஆண்டு வந்திருந்த நேதாஜி சுபாஷ் சந்திர போஸுக்கு மாநகராட்சி சார்பில் அதிகாரபூர்வ வரவேற்பும் பாராட்டும் அளிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை மாநகராட்சிக் கூட்டத்தில் முன்மொழிந்தார் சக்கரை செட்டியார்.

உள்கட்சி அரசியல் சூழலின் காரணமாக காங்கிரஸ் கட்சி கவுன்சிலர்கள்கூட செட்டியாரின் முன்மொழிவை ஏற்கவில்லை. பிற கவுன்சிலர்களும் வெவ்வேறு காரணங்களைக் குறிப்பிட்டு அத்தீர்மானத்தை எதிர்த்தனர். அனைத்து கவுன்சிலர்களும் உள்ளடங்கிய மாநகராட்சிக் கூட்டத்தில் நேதாஜியின் தியாகத்தையும், சேவையையும் தனது ஆற்றல்மிக்க உரையின் மூலம் உணரவைத்து தான் முன்மொழிந்த தீர்மானத்தை ஏகமனதாக ஏற்க வைத்தார். மாநகராட்சியின் சார்பில் எழுச்சிமிக்க வரவேற்பு அளிக்கப்பட்டது.

1907–இல் தமிழ் மாகாணத்திலிருந்து சூரத் காங்கிரஸுக்கு பிரதிநிதியாகச் சென்றவர்களில் சக்கரை செட்டியாரும் ஒருவர். வ.உ.சி., பாரதி ஆகியோரின் அணுக்கத் தோழராக விளங்கிய சக்கரை செட்டியார், அவர்களைப்போலவே திலகரின் தீவிர ஆதரவாளராகவும் திகழ்ந்தார்.

சென்னையில் பல்லாயிரம் தொழிலாளர்களை உள்ளடக்கிய பல தொழிற்சங்கங்களுக்குத் தலைவராக விளங்கிய சக்கரை செட்டியார், தொழிலாளர்களிடையே விடுதலை வேட்கையை வேரூன்றச்செய்யும் வேள்வியில் இடையறாது தம்மை ஈடுபடுத்திக்கொண்டார்.

தமிழ்நாடு தொழிற்சங்க காங்கிரஸ் சார்பில் நடத்தப்பட்ட செட்டியாரின் 76–ஆவது பிறந்த நாள் விழாவில் பங்கேற்ற ராஜாஜி, 'சக்கரை செட்டியார் தொழிலாளர்களின் தலைவர் மட்டுமல்ல, தேசிய இயக்கத்தின் தலைவருமாவார். தேசிய இயக்கத்திலும் அவர் தீவிரவாதி. காங்கிரஸ்காரர்கள் 1929–ஆம் ஆண்டில்தான் ஜவாஹர்லால் நேருவின் தலைமையில் இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம் கேட்டார்கள். சக்கரை செட்டியாரோ 1906–ஆம் ஆண்டிலேயே பூரண சுதந்திரம் வேண்டுமென்று கேட்டார். அத்தகைய தேசபக்தரைப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்' என்று பேசியுள்ளார்.

பாரதியின் உற்ற நண்பரான செட்டியார், பாரதியின் உடல் தகனம் செய்யப்பட்ட இடத்தில் இரங்கல் உரையாற்றிய நால்வரில் ஒருவர். பாரதியின் மறைவுக்குப் பிறகு அவரது மனைவி செல்லம்மா பாரதி 'ஸ்வதேச கீதங்கள்' என்ற தலைப்பில் பாரதியின் கவிதைகள் அடங்கிய தொகுப்பு நூலொன்றைப் பதிப்பித்தபோது அவர் சக்கரை செட்டியாரிடம்தான் முன்னுரை பெற்றுள்ளார்.

ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத் தொழிலாளர்களைத் தட்டியெழுப்பிக் களமிறங்க வைத்ததில் சக்கரை செட்டியாருக்குத் தனித்த இடமுண்டு.

–த. ஸ்டாலின் குணசேகரன்

## நூல் வெளியீடு...



ஆழ்வார்பேட்டையில் உள்ள சி.பி.ராமசாமி அய்யர் அறக்கட்டளையின் சார்பில் சென்னையின் புராதன கட்டடக் கலை பதிவுகள் குறித்த நூலை வியாழக்கிழமை வெளியிட்ட ஆளுநர் பன்வாரிலால் புரோஹித். உடன் (இடமிருந்து) சென்னை வெலிங்டன் கார்ப்பரேட் அறக்கட்டளை இயக்குநர் வி.ஸ்ரீராம், சி.பி.ராமசாமி அய்யர் அறக்கட்டளை தலைவர் நந்திதா கிருஷ்ணா, ஆற்காடு இளவரசர் நவாப் முகமது அப்துல் அலி, நூலாசிரியர்களும் கட்டடக் கலைஞர்களுமான சுஜாதா சங்கர், மனோகர் தேவதாஸ், சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி பிரபா ஸ்ரீதேவன்.

## 'தடுப்பூசி ஒதுக்கீட்டில் பாகுபாடு இல்லை'

**சென்னை, ஆக. 19:** மாநிலங்களுக்கு தடுப்பூசி ஒதுக்கீடு செய்வதில் மத்திய அரசு எந்தவிதமான பாகுபாடும் காட்டுவதில்லை என்று மத்திய செய்தி ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் எல்.முருகன் தெரிவித்தார்.

மத்திய செய்தி மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சகத்தின் சார்பில் நாட்டின் 75–ஆவது சுதந்திர தின புகைப்படக் கண்காட்சி மற்றும் கரோனா விழிப்புணர்வு வாகனத் தொடக்க நிகழ்ச்சியில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மத்திய இணைஅமைச்சர் எல். முருகன், தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் கண்காட்சியை தொடக்கி வைத்து 'கரோனா பெருந்தொற்று–வரலாறு, அறிவியல், சமூகத்தின் தாக்கம்' என்ற தலைப்பிலான புத்தகத்தை வெளியிட்டனர்.

## நீதிபதி கிருபாகரனுக்கு பிரிவுபசார விழா



**சென்னை, ஆக.19:** சென்னை உயர்நீதிமன்ற மூத்த நீதிபதி என். கிருபாகரன் வெள்ளிக்கிழமை ஓய்வு பெறுகிறார். அன்றைய நாள் அரசு விடுமுறை என்பதால் அவருக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் வியாழக்கிழமை பிரிவுபசார விழா நடத்தப்பட்டது.

இதில் நீதிபதி என்.கிருபாகரன் பேசியதாவது: 125 வயது கொண்ட உயர்நீதிமன்ற கட்டடத்தில் நீதிபதியாகப் பணியாற்றியதில் பெருமை கொள்கிறேன். நான் வழக்குகளை மனசாட்சிப் படி விசாரித்து தீர்ப்பளித்தேன். நீதிபதியாக பணி ஓய்வு பெறுவது திருப்தியாக இருந்தாலும், வழக்குரைஞர் தொழிலை முறைப்படுத்த முடியாதது, தமிழகத்தில் டாஸ்மாக் கடைகளை மூட முடியாமல் போனது நிறைவை அளிக்கவில்லை என்றார் நீதிபதி என்.கிருபாகரன்.

இந்த நிகழ்வில், உயர்நீதிமன்ற நீதிபதிகள், ஓய்வு பெற்ற நீதிபதிகள், மாவட்ட நீதிபதிகள், அரசு தலைமை வழக்குரைஞர் ஆர். சண்முகசுந்தரம், மாநில அரசு தலைமை குற்றவியல் வழக்குரைஞர் அசன் முகமது ஜின்னா, பார் கவுன்சில் தலைவர் பி.எஸ். அமல்ராஜ், வழக்குரைஞர் சங்கப் பிரதிநிதிகள் உள்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

# பெண்ணின் வயிற்றில் 22 கிலோ புற்றுநோய்க் கட்டி

## மறுவாழ்வு அளித்த அரசு மருத்துவர்கள்

**சென்னை, ஆக. 19:** பெண்ணின் வயிற்றில் இருந்த 22 கிலோ எடையுடைய புற்றுநோய் கட்டியை அறுவை சிகிச்சை மூலம் அகற்றி சென்னை, எழும்பூர் மகப்பேறு மருத்துவர்கள் மறுவாழ்வு அளித்துள்ளனர்.

திருப்பத்தூர் மாவட்டத்தை சேர்ந்த தனவந்தி (45), கூலித் தொழிலாளி. கடந்த ஓராண்டாக கடும் வயிற்று வலி, பசியின்மையால் அவதிப்பட்டு வந்தார். சென்னை எழும்பூர் அரசு மகப்பேறு மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் வயிற்றில் புற்றுநோய்க் கட்டி இருப்பது தெரியவந்தது.

புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் கவிதா தலைமையில், மருத்துவர்கள் ஆனந்தி, சுஜாதா ஆகியோர் அடங்கிய குழுவினர் அறுவை சிகிச்சை மேற்கொண்டு, 22 கிலோ எடை கொண்ட புற்றுநோய் கட்டியை அகற்றினர்.

இதுகுறித்து, மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் விஜயா கூறியதாவது:

தனவந்தி வயிற்றில் இருந்து 22 கிலோ எடையுள்ள புற்றுநோய் கட்டி அகற்றப்பட்டதால், ஆறு மாதம் வரை தொடர் மருத்துவ கண்காணிப்பில் வைத்து, நரம்பு வழியாக அவருக்கு மருந்து செலுத்தப்பட வேண்டியுள்ளது. அப்பெண்ணை மருத்துவமனையில் அனுமதிக்கும்போது, 65 கிலோ எடையுடன் இருந்தார். கட்டி அகற்றப்பட்டதால் தற்போது 43 கிலோ எடையுடன் இருக்கிறார். இந்த அளவு பெரிய கட்டி நோயாளிக்கு எந்தவித பிரச்னையும் இல்லாமல், பாதுகாப்பான முறையில் அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது இதுவே முதன்முறை. தற்போது, அவர் நலமுடன் உள்ளார் என்றார் அவர்.

### ரயிலில் வந்த ரத்தம்!

எழும்பூர் மகப்பேறு மருத்துவமனையில் கர்ப்பிணி ஒருவரின் பிரசவத்துக்காக அரிதான 'பாம்பே' வகை ரத்தம் பெங்களூரிலிருந்து சென்னைக்கு ரயில் மூலம் தருவிக்கப்பட்டது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தை சேர்ந்தவர் மீனா (29), பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். அவருடையது அரிதான 'பாம்பே' வகை ரத்தம் எனத் தெரியவந்தது. இதையடுத்து, பெங்களூரைச் சேர்ந்த ஆதித்யா என்பவரிடமிருந்து ரத்தம் பெறப்பட்டு, சங்கமித்ரா எக்ஸ்பிரஸ் ரயிலில் சென்னை கொண்டு வரப்பட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அப்பெண்ணுக்கு ஆண் குழந்தை பிறந்தது.

https://t.me/Tamil_epaper2

## கட்செவி அஞ்சலில் இலவசமாக டிஎன்பிஎஸ்சி பாடநூல்

**சென்னை, ஆக.19:** அரசுப் பணித் தேர்வுக்கு தயாராவோருக்கு கட்செவி அஞ்சலில் இலவசமாக டிஎன்பிஎஸ்சி பாடநூல் அனுப்பப்படும் என ஆட்சித் தமிழ் ஐ.ஏ.எஸ் அகாதெமி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அகாதெமியின் இயக்குநர் ச.வீரபாபு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

ஆட்சித் தமிழ் ஐ.ஏ.எஸ் அகாதெமி சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணயம் நடத்தும் குரூப் 1, குரூப் 2, குரூப் 2 ஏ மற்றும் குரூப் 4, வி.ஏ.ஓ உள்ளிட்ட போட்டித் தேர்வுகளின் வெற்றிக்குப் பயன்படும் வகையில் டிஎன்பிஎஸ்சி புதிய பாடத் திட்டத்தின்படி, சமச்சீர் பாடப் புத்தகங்களை தேர்வு நோக்கில் தொகுத்து, இந்த டிஎன்பிஎஸ்சி பாடநூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதைப் பெற விரும்புவோர், TNPSC TEXT BOOKS என டைப் செய்து, உடன் தங்களது முழு முகவரியை 91760 84468 என்ற எண்ணுக்கு கட்செவி அஞ்சல் வாயிலாக அனுப்பி முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

முன்பதிவு செய்த அனைவருக்கும் பிடிஎப் வடிவில் பாடநூல் அனுப்பப்படும்.

மேலும் விவரங்களுக்கு, சென்னைகுரோம்பேட்டையில் உள்ள அகாதெமியை நேரிலோ, 91763 92791, 99439 46464 ஆகிய எண்களையோ அணுகலாம் என அதில் கூறப்பட்டுள்ளது.

## பொன்னேரி ரயில் நிலையத்தில் சென்னை மண்டல மேலாளர் ஆய்வு

**பொன்னேரி, ஆக. 19:** சென்னை சென்ட்ரல்–கும்மிடிப்பூண்டி புறநகர் மின்சார ரயில் மார்க்கத்தில் உள்ள பொன்னேரி ரயில் நிலையத்தில், தெற்கு ரயில்வே கோட்ட சென்னை மண்டல மேலாளர் கணேஷ் ஆய்வு செய்து பயணிகளிடம் குறைகளை கேட்டறிந்தார்.

அவருடன் கூடுதல் மண்டல மேலாளர் ஆனந்தன், வணிக மேலாளர் செல்வம் உள்ளிட்ட ரயில்வே அதிகாரிகள் குழுவினர் வந்திருந்தனர்.

சென்னை சென்ட்ரல்– கும்மிடிபூண்டி மார்க்க ரயில் பயணிகள் சங்கம் சார்பில் அத்திப்பட்டு ரயில் நிலையத்தில் இருந்து கும்மிடிபூண்டி ரயில் நிலையம் வரை இருப்பு பாதையை நான்கு வழிப்பாதையாக மாற்றுவது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை வழங்கினர் .

# தேர்தலின்போது இடையூறு: அமைச்சர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்

**சென்னை, ஆக.19:** தேர்தலின்போது இடையூறு செய்யப்பட்டதாக தொடரப்பட்ட வழக்கில், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், தா.மோ.அன்பரசன் ஆகியோர் சிறப்பு நீதிமன்றத்தில் வியாழக்கிழமை ஆஜராகினர்.

கடந்த 2005–ஆம் ஆண்டு உள்ளாட்சி தேர்தலின்போது சென்னை 131–ஆவது வார்டுக்கு உள்பட்ட கே.கே.நகர் பள்ளி ஒன்றில் ரகளையில் ஈடுபட்டு, வாக்குச்சீட்டுகளையும், முத்திரைகளையும் எடுத்துச் சென்றதாகவும், சந்தோஷ் என்பவரது காரை சேதப்படுத்தியதாகவும் தற்போதைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் மீது கே.கே.நகர் போலீஸார் வழக்குப் பதிவு செய்திருந்தனர்.

இந்த வழக்கு விசாரணை சென்னை எம்.பி., எம்.எல்.ஏ–க்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது.

இந்த வழக்கில் ஏற்கெனவே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், குற்றச்சாட்டுப் பதிவுக்காக அமைச்சர்கள் இருவரும் நேரில் ஆஜராக உத்தரவிடப்பட்டு இருந்தது.

இந்நிலையில் இந்த வழக்கு வியாழக்கிழமை காலை நீதிபதி என்.அலிசியா முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் நடைபெற்று வருவதால் அமைச்சர்கள் ஆஜராகவில்லை என தெரிவிக்கப்பட்டது.

இதையேற்க மறுத்த நீதிபதி, பிற்பகலில் அமைச்சர்கள் இருவரும் ஆஜராகாவிட்டால் பிடியாணை பிறப்பிக்கப்படும் என எச்சரித்தார்.

அதன்படி வியாழக்கிழமை பிற்பகலில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், தா.மோ.அன்பரசன் ஆகியோர் ஆஜராகினர். இதைத்தொடர்ந்து குற்றச்சாட்டுப்பதிவு செய்யப்பட்டது. அதையடுத்து நீதிபதி, இந்த வழக்கை சாட்சி விசாரணைக்காக வரும் செப்.24–க்கு தள்ளி வைத்துள்ளார்.

# ஏழை மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றாத நிதிநிலை அறிக்கை

## ஓ.பன்னீர்செல்வம்

**சென்னை, ஆக. 19:** தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை ஏழை, எளிய, நடுத்தர மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றவில்லை என்று அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கை: தமிழக சட்டப்பேரவை நடவடிக்கைகளை இரண்டு நாள்களுக்கு அதிமுக புறக்கணித்துள்ளதால் தமிழக அரசால் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கை மற்றும் 2021–2022–ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கை மீதான எனது கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை ஏழை, எளிய, நடுத்தர மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றவில்லை. வெள்ளை அறிக்கை வெளியிட்டு அதிமுகவைக் குறை கூறுவதை விடுத்து, ஆக்கப்பூர்வ பணிகளில் திமுக அரசு ஈடுபட வேண்டும். வெள்ளை அறிக்கையின் முக்கிய பிரச்னைகளுக்கு நாடாளுமன்றத்தில் விரைந்து தீர்வு காண திமுக முயற்சிக்க வேண்டும். திமுகவின் பல அறிவிப்புகள் நிறைவேற்ற சாத்தியமில்லை என்பதுதான் உண்மை. உண்மைக்கு மாறான தோற்றத்தை மக்கள் மனதில் பதிய வைக்கும் முயற்சியாக வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

சாமானிய மக்களை யார் வேண்டுமானாலும் ஏய்த்து விடமுடியும் என்று நினைத்து விடாதீர்கள். வாக்குறுதிகளை நம்பி மக்கள் வாக்களித்துள்ளதால் வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள் என்பதுதான் எங்கள் கோரிக்கை. கடினமான பொருளாதார சூழலிலும் மக்களின் தலையில் சுமையை ஏற்றாமல் அதிமுக அரசு செயல்பட்டது.

# நுரையீரல் செயலிழந்த கரோனா நோயாளிக்கு மறுவாழ்வு

**தாம்பரம், ஆக.19:** நுரையீரல் முழுவதும் கரோனா தீநுண்மி தொற்றால் பாதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற வந்த நோயாளிக்கு நவீன மருத்துவ சிகிச்சை மூலம் மறுவாழ்வு அளித்துள்ளனர் குரோம்பேட்டை ரேலா மருத்துவமனை மருத்துவர்கள்.

இது குறித்து மருத்துவமனைத் தலைவரும் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மருத்துவருமான பேராசிரியர் டாக்டர் முகமது ரேலா செய்தியாளர்களிடம் கூறியது: திருச்சி தொழிலதிபர் எம்.முகமது முதீஜ்ஜா(56) நுரையீரல் முழுவதும் கரோனா தீநுண்மி தொற்றால் பாதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் ரேலா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கு முன்பு 50 நாள் எக்மோ சிகிச்சை மூலம் அவருடைய நுரையீரல் மற்றும் உடல்நலன் செயல்பாட்டில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டது.

இதையடுத்து எக்மோ சிகிச்சையைப் படிப்படியாகக் குறைக்கத் தொடங்கினோம். சுமார் 30 நாள்கள் எக்மோ சிகிச்சையில் உயிர் பிழைப்பது அரிது என்ற நிலையில் 62 நாள் எக்மோ சிகிச்சையில் இருந்து அவர் மீண்டது எங்களை வியப்பில் ஆழ்த்தியது. எக்மோ சிகிச்சை தேவையில்லை என்ற அளவில் குணமடைந்த அவருக்கு எக்மோ சிகிச்சையை முழுமையாக நிறுத்தப்பட்டது. பின்னர் வென்டிலேட்டர் செயற்கை நுரையீரல் கருவி மூலம் சுவாசித்து வந்த அவர் 109 நாள் நவீன மருத்துவச் சிகிச்சை மூலம் முழுமையாக குணமடைந்துள்ளார். அதிக நாள்கள் செயற்கை நுரையீரல் மூலம் உயிர் பிழைத்து, நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சையின்றி முதீஜ்ஜா குணமடைந்துள்ளார் என்றார் அவர்.

நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை மருத்துவர் சி.ஆறுமுகம், நுரையீரல் சிகிச்சை மருத்துவர் ஐஸ்வர்யா வினோத், மருத்துவமனை தலைமை செயல் அதிகாரி டாக்டர் இளங்குமரன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# தண்ணீரில் மிதக்கும் அதிசய கல்

**காஞ்சிபுரம், ஆக. 19:** காஞ்சிபுரத்தில் கோயில் குளத்தில் தண்ணீரில் மிதக்கும் அதிசய கல் கண்டெடுக்கப்பட்டது.



காஞ்சிபுரம் ஒக்கப்பிறந்தான் கோயில் குளத்தில் மிதக்கும் தன்மை கொண்ட அதிசயக் கல் ஒன்றை , பல்லவர் மேட்டைச் சேர்ந்த சுமை தூக்கும் தொழிலாளி செல்வராஜ் கண்டு பிடித்துள்ளார். பின்னர், அவர் காஞ்சிபுரம் அரசு அருங்காட்சியகத்தில் அதை ஒப்படைத்தார்.

## உறுதிமொழி ஏற்பு...



தேசிய நல்லிணக்க நாளையொட்டி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.மேனுவேல் ராஜ் தலைமையில் வியாழக்கிழமை உறுதிமொழி ஏற்ற அலுவலர்கள்.

# ரூ.10,000 லஞ்சம்: நில அளவையர் கைது


**காஞ்சிபுரம், ஆக. 19:** காஞ்சிபுரம் அருகே வாலாஜாபாத் வட்டாட்சியர் அலுவலகத்தில் ரூ.10,000 லஞ்சம் பெற்றதாக நில அளவையரை லஞ்ச ஒழிப்பு போலீஸார் வியாழக்கிழமை கைது செய்தனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் வேடல் கிராமத்தை சேர்ந்தவர் தேவராஜன் மகன் சரவணன்(40)இவர் தனது நிலத்தை அளவீடு செய்ய வாலாஜாபாத் வட்டாட்சியர் அலுவலகத்துக்கு இணையம் வழியாக கடந்த 2019–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் விண்ணப்பித்திருந்தார்.இவர் பாஜக மாவட்ட விவசாய அணித் தலைவராகவும் இருந்து வருகிறார்.

இந்நிலையில் சரவணன் வட்டாட்சியர் அலுவலகத்தில் நில அளவையராக பணியாற்றி வரும் இந்துமதியை சந்தித்து பலமுறை கேட்டபோதெல்லாம் ஏதேனும் ஒரு காரணத்தை கூறி தவிர்த்து வந்துள்ளார்.பின்னர் சரவணன் தனது நண்பர் மூலமாக இந்துமதியை அணுகிய போது அவர் ரூ.20,000 லஞ்சமாக கேட்டதுடன் அதை தனது உதவியாளரிடம் வழங்குமாறும் கூறியிருக்கிறார்.

இதனையடுத்து சரவணன் காஞ்சிபுரம் லஞ்ச ஒழிப்பு போலீஸாரிடம் இத்தகவலை தெரிவித்து விட்டு இந்துமதியை சந்தித்து முதல் தவணையாக ரூ.10 ஆயிரம் மட்டும் தருவதாகக் கூறி ரசாயனம் தடவிய ரூபாய் நோட்டுகளை கொடுத்துள்ளார்.அப்போது அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு டி.எஸ்.பி. வே.கலைச்செல்வன் தலைமையிலான போலீஸார் இந்துமதியை கைது செய்து அவரிடமிருந்த ரூ.10 ஆயிரத்தையும் பறிமுதல் செய்தனர்.


## காலமானார் அதிமுக முன்னாள் எம்.பி.பா.செங்குட்டுவன்



**வேலூர், ஆக. 19:** வேலூர் மக்களவைத் தொகுதி முன்னாள் அதிமுக உறுப்பினர் பா.செங்குட்டுவன் (65), உடல்நலக் குறைவால் வியாழக்கிழமை அதிகாலை காலமானார்.

காட்பாடி திருநகரைச் சேர்ந்த இவர், கட்சியில் பல்வேறு பதவிகளை வகித்துவந்தார். 2014–ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் வேலூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று, 2019 –ஆம் ஆண்டு வரை பதவியில் இருந்தார். ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு, சசிகலா அணிக்குச் சென்ற இவர் அமமுகவில் இணைந்தார். இறுதி அஞ்சலிக்குப் பின்னர், அவரது உடல் தகனம் வியாழக்கிழமை மாலையில் நடைபெற்றது. இவருக்கு மனைவி, மகன், மகள் உள்ளனர்.

# அதிமுக உறுப்பினர்களை வெளியேற்றவில்லை



**சென்னை, ஆக. 19:** சட்டப்பேரவையில் இருந்து அதிமுக உறுப்பினர்களை தான் வெளியேற்றவில்லை என்று அவைத் தலைவர் மு.அப்பாவு விளக்கம் அளித்தார்.

சட்டப் பேரவை வியாழக்கிழமை காலை தொடங்கியதும், அவை முன்னவர் துரைமுருகன் பேசுகையில், சில செய்தித்தாள்கள், ஊடகங்களில் அதிமுக உறுப்பினர்கள் வெளியேற்றம் என வந்துள்ளது. சில பத்திரிகைகளில் வெளிநடப்பு என வந்திருக்கிறது. வெளியேற்றம் என்ற செய்தியைப் படிப்போர் மத்தியில் அது குழப்பத்தை ஏற்படுத்தும். எனவே, அதுகுறித்த செய்திகளில் பத்திரிகைகள் மிகுந்த கவனமாக இருக்க வேண்டும். அதற்குரிய அறிவுறுத்தல்களை பேரவைத் தலைவர் அளித்திட வேண்டும் என்றார்.

**இதற்கு, அவைத் தலைவர் மு.அப்பாவு அளித்த விளக்கம்:**

எதிர்க்கட்சித் தலைவர் முதல்வராகவும், அமைச்சராகவும் இருந்தவர், நல்ல அனுபவம் வாய்ந்தவர். பேரவை நடைமுறைகள் தெரிந்தவர். அதனால், அவருக்குப் பேச வாய்ப்புத் தந்தேன். மக்களுக்கான பிரச்னைகளைப் பேசுவார் என நினைத்தே அனுமதி தந்தேன். தனிப்பட்ட பிரச்னைகளைப் பேசினார். அவருக்குப் பின்னால் இருந்த உறுப்பினர்கள் கையில் இருந்த பதாகையை அவையில் காண்பித்தனர். காட்சிப் பொருளாக எதைக் காண்பிக்க வேண்டுமானாலும் எனது அனுமதி பெற வேண்டும். ஆனால் என்னிடம் அனுமதி பெறவில்லை.

முதல்வர் விளக்கம் அளித்த போது, அவர்களாகவே வெளியேறினர். நான் வெளியேற்றவில்லை. எனவே, ஊடகங்கள் கவனமுடன் செய்தியை வெளியிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

# கற்றலை மேம்படுத்த ரூ.200 கோடியில் தனி இயக்கம்

## நிதியமைச்சர் அறிவிப்பு

**சென்னை, ஆக. 19:** கரோனா நோய்த்தொற்றால் 15 மாதங்கள் குழந்தைகள் பள்ளி செல்லாத நிலையில், அவர்களது கற்றல், வாசிப்புத் திறனை மேம்படுத்த ரூ.200 கோடியில் தனி இயக்கம் நடைமுறைப்படுத்தப்படும் என்று நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் அறிவித்தார்.

சட்டப் பேரவையில் திருத்திய நிதிநிலை, வேளாண் நிதிநிலை அறிக்கைகள் மீது நடந்த விவாதங்களுக்குப் பதிலளித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்ட முக்கிய அறிவிப்பு: கரோனா நோய்த்தொற்று காரணமாக, பள்ளிகளைத் திறக்க முடியாத சூழ்நிலையில் குழந்தைகள் முறையாகக் கல்வி கற்றுக் கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் குக்கிராமங்களில்கூட நோய்த்தொற்று காலத்தில் கற்றல், கற்பித்தல் செயல்பாடுகளை உரிய முறையில் கொண்டு சேர்ப்பது மாபெரும் சவாலாக உள்ளது. கல்வித் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், இணைய வழிக் கல்வி என தொடர் முயற்சிகளை எடுத்தாலும் கடைக் கோடி கிராமங்களில் வசிக்கும் ஏழை, எளிய குழந்தைகளின் கல்விச் செயல்பாடுகளை மேம்படுத்துவது இயலாமல் உள்ளது.

இதை உணர்ந்து, கடந்த 13-ஆம் தேதி நிதிநிலை அறிக்கையில் கரோனா நோய்த்தொற்றால் ஏற்படுத்தியிருக்கும் கற்றல் இழப்புகளைச் சரி செய்ய வகுப்பறைகளிலும், பள்ளி வளாகங்களுக்கு வெளியேயும் ஒரு தனித் திட்டம் வகுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

**தனி இயக்கம் உருவாக்கம்: கடந்த** 15 மாதங்களாக பள்ளி வளாகங்களை விட்டு குழந்தைகள் விலகி இருக்கும் சூழ்நிலையில், மன உளைச்சல், இதர வாழ்வியல் மாற்றங்கள் குறித்துச் சிந்திக்க வேண்டுமென கல்வியாளர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். இதைக் கவனமாக ஆராய்ந்து, கரோனா பெருந்தொற்றால் கற்றல் இழப்புகள், உளவியல் சிக்கல்களைச் சரி செய்ய மாபெரும் கற்பித்தல், வாசிப்பு இயக்கம் தமிழகம் எங்கும் செயல்படுத்தப்படும்.



ஆசிரியர்கள், பட்டதாரி மாணவர்கள், தன்னார்வ மாணவர்கள், அரசு சாரா நிறுவனங்களின் உதவியுடனும் கல்வியாளர்களின் வழிகாட்டுதலுடனும் பள்ளிக் கல்வித் துறை இந்த இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும். வீதிகள் தோறும் வகுப்பறைகள், மாலை நேரங்களில் நிலவொளிப் பள்ளிகள் என கடைக்கோடி கிராமங்களில் வசிக்கும் குழந்தைகளின் இல்லம் தேடி கற்பித்தல், வாசிப்பு இயக்கம் அடுத்த ஆறு மாதங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும். இந்த நிதியாண்டில் ரூ.200 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என்று நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்தார்.

**முன்மாதிரித் திட்டம்:** கடந்த 1997 முதல் 1999-ஆம் ஆண்டு வரையில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியராக இப்போதைய தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு செயல்பட்டார்.

அப்போது, அந்த மாவட்டத்தில் பிள்ளையார்பாளையம் என்ற இடத்தில் நிலவொளிப் பள்ளியை அவர் தொடங்கினார். பள்ளிக்குச் சென்று கற்க இயலாத நெசவுத் தறி தொழிலாளர்களைச் சேர்ந்த குழந்தைகள் நிலவொளிப் பள்ளியில் படித்தனர். அவர்களது கல்வித் தரத்திற்கேற்ப வகைப்படுத்தி ஐந்தாம் வகுப்பு, எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு எனப் பிரித்து பாடங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன. தேர்வு எழுத சிறப்பு அனுமதியை கல்வித்துறை வழங்கியது. அந்தப் பள்ளிகள் காஞ்சிபுரம் மட்டுமல்லாது பல இடங்களில் செயல்பட்டு வருகின்றன. அதுபோன்ற திட்டத்தை, கரோனாவால் பள்ளிகள் திறக்காத சூழ்நிலையில் ஒரு இயக்கமாக தமிழ்நாடு அரசு முன்னெடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# திமுக அரசின் 100 நாள்கள் மக்களுக்கு சோதனையும் வேதனையும்தான்

## எடப்பாடி கே.பழனிசாமி

**சென்னை, ஆக.19:** திமுக அரசு பொறுப்பேற்று 100 நாள்களில் மக்கள் சோதனையும் வேதனையும் தான் அடைந்திருக்கிறார்கள் என அதிமுக இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி கே.பழனிசாமி தெரிவித்தார்.



தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்தை ஆளுநர் மாளிகையில் வியாழக்கிழமை சந்தித்து மனு அளித்த அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி கே. பழனிசாமி. உடன் துணை ஒருங்கிணைப்பாளர்கள் கே.பி.முனுசாமி, ஆர்.வைத்திலிங்கம், முன்னாள் அமைச்சர்கள் பி.தங்கமணி, சி.வி.சண்முகம், எஸ்.பி.வேலுமணி, டி.ஜெயக்குமார் உள்ளிட்டோர்.

சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்தை நேரில் சந்தித்த அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி கே.பழனிசாமி உள்ளிட்டோர் திமுக அரசு மீதான குற்றச்சாட்டு மனுவை அளித்தனர்.

பின்னர் எடப்பாடி கே.பழனிசாமி செய்தியாளர்களிடம் கூறியது: தற்போது திமுக அரசு அனைத்துத் துறைகளிலும் தோல்வி அடைந்துள்ளது.

கரோனா தொற்று நோயைக் கட்டுப்படுத்த முடியாமல் அதை மறைக்க எங்களில் தொடங்கி அதிமுக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் வரை, பொய்யான வழக்கு போடுவதை திமுக அரசு வாடிக்கையாக வைத்திருக்கிறது. அவர்களுடைய குறிக்கோளே ஊழல், வசூல் செய்தல், பழி வாங்குதல்தான். அரசு உயரதிகாரிகளில் இருந்து கடைநிலை ஊழியர்கள் வரை பணியிடமாற்றம் செய்ததே அவர்களது 100 நாள் சாதனை.

**கொடநாடு கொள்ளை வழக்கு:** கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு நீதிமன்றத்தில் முடியும் தறுவாயில் உள்ளது. ஆனால் மீண்டும் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என முதல்வர் கூறுகிறார். இது தொடர்பாக தேர்தல் அறிக்கைகளில் குறிப்பிட்டுள்ளோம் என்கிறார். தேர்தல் அறிக்கைக்கும் வழக்குக்கும் சம்பந்தமில்லை. அது சட்ட ரீதியாக நடைபெறும் ஒரு சம்பவம். இந்த வழக்கு விசாரணையின்போதெல்லாம் திமுகவைச் சேர்ந்த வழக்குரைஞர்களே ஆஜராகி குற்றவாளிகளுக்கு ஆதரவாக வாதாடுகின்றனர். வேண்டுமென்றே திட்டமிட்டு அரசின் காழ்ப்புணர்ச்சி காரணமாக இந்த வழக்கை திசை திருப்பப் பார்க்கின்றனர்.

நீட் தேர்வு விவகாரத்தில் மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்தது திமுக. இன்று வரை அதில் ஒரு முடிவு எட்டப்படவில்லை. பத்திரிகை சுதந்திரத்தில் தலையிடும் விதமாக 'நமது அம்மா' நாளிதழ் அலுவலகத்தில் சட்டவிரோதமாக சோதனை நடத்தினர். மூன்றாவது அலை அச்சத்துக்கு இடையே இவ்வாறு நடந்து கொள்கின்றனர். கரோனாவால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களையும் இணை நோய்களால் இறந்தார்கள் என கூறுகின்றனர். இவ்வாறு இந்த 100 நாள்களில் எந்த சாதனையும் இல்லை. சோதனையும், வேதனையும் தான் மக்கள் அடைந்திருக்கின்றனர் என்றார் எடப்பாடி கே.பழனிசாமி.

https://t.me/Tamil_epaper2

# கரும்பு விவசாயிகளுக்கு வழங்க சர்க்கரை ஆலைகளுக்கு ரூ.182 கோடி வழிவகைக் கடன்

**சென்னை, ஆக. 19:** கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு நிலுவைத் தொகைகளை வழங்க ரூ.182 கோடி கடனாக வழங்க உத்தரவிடப்பட்டிருப்பதாக வேளாண்மைத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.



சட்டப்பேரவையில் வேளாண் நிதிநிலை அறிக்கை மீது நடந்த விவாதங்களுக்குப் பதிலளித்து அவர் வியாழக்கிழமை அளித்த பதில்:

வேளாண் நிதிநிலை அறிக்கையில் வாழையை ஊக்குவிக்க திட்டங்கள் அறிவிக்கவில்லை எனக் கூறினார்கள். வாழை சாகுபடியை ஊக்குவிக்க ரூ.3 கோடி ஊக்கத் தொகையும், திசு வளர்ப்புக் கூடம், வாழையைப் பதப்படுத்தும் தொழிற்கல்விக்கான மையம் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**5 ஆண்டுகளில் பசுமை:** ஐந்து ஆண்டுகளில் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ஒட்டுமொத்த வேளாண் வளர்ச்சியை உருவாக்க கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், அடுத்த 5 ஆண்டுகளில் பசுமை நிறைந்த மாநிலமாக தமிழகம் திகழும். இதன்படி, முதலாண்டில் 2,500 கிராமங்களில் திட்டம் செயல்பாட்டுக்கு வரும்.

இயற்கை விவசாயத்துக்கு ஊக்கம், புதிய வேளாண் கல்லூரிகள், படிப்புகள் என ரூ.340 கோடியில் 3 லட்சம் இளைஞர்களுக்கான வேளாண் திட்டங்கள் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளன. வேளாண் தொழிலில் ஈடுபடுவோரை வேலை தேடுவோராக இல்லாமல் வேலை அளிப்போராக மாற்றுவதே நிதிநிலை அறிக்கையின் நோக்கம்.

**சர்க்கரை ஆலைகள்:** கரும்பு வழங்கிய வகையில் நிலுவைத் தொகைகள் வழங்கிட சர்க்கரை ஆலைகளுக்கு அரசு உத்தரவு வியாழக்கிழமை பிறப்பித்தது. அதன்படி, 10 கூட்டுறவு, 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு நிதிகள் வழங்கிடும் வகையில் ரூ.182.13 கோடி வழிவகைக் கடன்களாக அளித்திடும் உத்தரவை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ளார்.

## 1 லட்சம் பனை விதைகள் அளிக்கிறேன்: பேரவைத் தலைவர்

வேளாண் நிதிநிலை அறிக்கை மீதான விவாதங்களுக்கு பதிலளித்து அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேசிக் கொண்டிருந்தார். அப்போது, நிதிநிலை அறிக்கையில் பனை மரங்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளதாகவும், அது நீர் ஆதாரத்தைக் காக்கும் மரம் எனவும், வெட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அப்போது பேசிய பேரவைத் தலைவர் மு.அப்பாவு, ஒரு லட்சம் பனை விதைகளை ஆண்டுதோறும் வேளாண்மைத் துறைக்கு அளிக்கிறேன். அதனை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார். இதற்கு அமைச்சர் பன்னீர்செல்வம் நன்றி கூறினார்.


**Marriage Anniversary Greetings to**

Dr. K. Balakumaravelu
S/o Late Sri. Kulandaivel
Sankara Dhanvantari Hos.
Kodavasal (Manjakudi)
94433 62163

Mrs. Ashala Balakumaravelu
D/o Late K. Ramanathan
Advocate
25, Sait Colony, Egmore

**Sons :**

Dr. B. Guru Maharaj
Govt. Tribal Speciality
Hospital, Kerala
94869 12725

Dr. B. Deepan
Asst. Professor,
Govt. Medical College and
Hospital, Thiruvarur
94425 62163

**Grand Parents :**

Dr. K. Pragatheeswaran
Dr. Mrs. Malliga Pragatheeswaran
Chennai
044 - 25320142

**Date : 20-08-2021**


# வழிபாட்டு முறைகளில் அரசு தலையீடு கூடாது

## தென் தமிழ்நாடு விசுவ ஹிந்து பரிஷத் மாநில துணைத் தலைவர்

**மயிலாடுதுறை, ஆக. 19:** இந்து ஆலய நிர்வாகத்திலும் வழிபாட்டு முறைகளிலும் தலையிடுவதை தி.மு.க. அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும் என தென் தமிழ்நாடு விசுவ ஹிந்து பரிஷத் மாநில துணைத் தலைவர் எஸ். வாஞ்சிநாதன் தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறையில் வியாழக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகலாம் என்று சட்டம் இயற்றி அதைச் செயல்படுத்தியிருப்பது தவறு.

சிவன் கோயில்களில் அர்ச்சகராக உள்ளவர்கள் ஆதி சிவாச்சாரியர்கள். அவர்கள் உண்மையிலேயே ஆதி தமிழர்கள்.

தமிழகத்தை ஆண்ட மன்னர்கள், ஆங்கிலேயர்கள் ஆட்சியிலும் அவர்களுக்கு பின்னால் வந்த ஆட்சியாளர்கள் வரை மத நம்பிக்கைகளில் தலையிடுவதை தவிர்த்தே வந்துள்ளனர்.

கோயில்களில் அர்ச்சகர்கள் பொறுப்பு என்பது அரசு வேலை அல்ல, காலை 10 மணிக்கு போய் மாலையில் 5 மணிக்கு வருவதற்கு. உள்ள சுத்தியோடு வருமானம் கிடைக்கிறதோ இல்லையோ பரம்பரையாக அந்த இறைப்பணியை செய்து வருபவர்கள் ஆதி சிவாச்சாரியர்கள்.

அடுத்ததாக சைவ, வைணவ மடங்களிலும் மாற்றம் கொண்டு வர அரசு நிர்பந்திக்கலாம். எனவே, இந்து ஆலய நிர்வாகத்திலும் வழிபாட்டு முறையிலும் தலையிடுவதை தி.மு.க. அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும் என அந்த அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

# சொத்துக் குவிப்பு வழக்கு விவகாரம்: ராஜேந்திர பாலாஜி மேல்முறையீடு

நமது நிருபர்

**சென்னை / புது தில்லி, ஆக. 19:** தன் மீதான சொத்துக்குவிப்பு வழக்கை மூன்றாவது நீதிபதி அமர்வுக்கு மாற்ற பரிந்துரைக்கப்பட்ட உத்தரவுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் அதிமுக முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்துள்ளார்.

அதிமுக முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி, வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததால் நடவடிக்கை எடுக்க கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் ஆர்.மகேந்திரன் மனு தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு விசாரணையின் போது, லஞ்ச ஒழிப்புத் துறை சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில் புகாருக்கு முகாந்திரம் இல்லாததால் விசாரணையைத் தொடர வேண்டியதில்லை என்று தெரிவித்திருந்தது.

இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் எம்.சத்யநாராயணன், ஆர். ஹேமலதா ஆகியோர் அடங்கிய இரு நீதிபதிகள் கடந்த ஏப்ரலில் இரு மாறுபட்ட தீர்ப்பை அளித்திருந்தனர்.

இதனால் இந்த வழக்கை விசாரிக்கும் மூன்றாவது நீதிபதியாக எம்.நிர்மல்குமார் கடந்த ஜூன் மாத இறுதியில் நியமிக்கப்பட்டார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், விசாரணைக்கு தடை கோரியும் முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி சார்பில் உச்சநீதிமன்றத்தில் கடந்த ஆகஸ்ட் 16-ஆம் தேதி மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**சென்னை உயர்நீதிமன்றம் கண்டனம்:** இந்த வழக்கு நீதிபதி எம்.நிர்மல்குமார் முன் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளதால், விசாரணையை ஒத்தி வைக்க வேண்டும் என்று ராஜேந்திர பாலாஜி தரப்பு வழக்குரைஞர் கோரிக்கை விடுத்தார். இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தார் மாநில அரசு தலைமை குற்றவியல் வழக்குரைஞர் அசன் முகமது ஜின்னா.

இதையடுத்து, ராஜேந்திர பாலாஜிக்கு கடும் கண்டனம் தெரிவித்த நீதிபதி, இந்த வழக்கில் மேற்கொண்டு வாய்தா கேட்கக் கூடாது என்று கூறினார். மேலும், மேல்முறையீட்டு மனுவை உச்சநீதிமன்றம் விசாரணைக்கு எடுக்காவிட்டால், இந்த வழக்குத் தொடர்ந்து விசாரிக்கப்படும் எனக் கூறி வழக்கு விசாரணையை வரும் 1-ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தார்.


**சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்** (CUB)

கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை

நிர்வாக அலுவலகம் : எண் 24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612 001. மின்னஞ்சல் : crmd@cityunionbank.in

போன் : 0435-2432322, ஃபேக்ஸ் : 0435-2431746

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ. 50,00,000/-

இடம் : கும்பகோணம், தேதி : 19-08-2021

பதிவு அலுவலகம் : எண் 149, T.S.R. (பெரிய) தெரு, கும்பகோணம், CIN - L65110TN1904PLC001287, போன் : 0435-2402322, ஃபேக்ஸ் : 0435-2431746, இணையதளம் : www.cityunionbank.com



இந்தியன் வங்கி — ALLAHABAD

அபிராமபுரம் கிளை : எண் 83, டி C P ராமசாமி ரோடு, அபிராமபுரம், சென்னை - 600 018. தொலைபேசி : 044 - 24998373, 24996555. மின்னஞ்சல் : abiramapuram@indianbank.co.in

**கோரிக்கை அறிவிப்பு வெளியீடு**

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டப்பிரிவு 13(2)ன் கீழ் ...

"SARFAESI சட்டம் பிரிவு 13(8)..."

OCC கடன் கணக்கு எண்.6183800414, 13.07.2021 தேதி வரை உள்ள நிலுவைத்தொகை : ரூ.5,99,794/-

அடமானக் கடன் கணக்கு எண்.6183625769, 13.07.2021 தேதி வரை உள்ள நிலுவைத்தொகை : ரூ.1,63,820/-

தேதி : 20.08.2021
இடம் : சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, இந்தியன் வங்கி.


வெள்ளி மணி


**பொது அறிவிப்பு**

காஞ்சிபுரம் மாவட்டம், கிரோம்பேட் வட்டம், நாகல்கேணி கிரோம்பேட் தாலுகா, அர்கீஸ்வரர் காலனி, மூன்றாவது குறுக்கு தெரு, 18/19, என்ற விலாசத்தில் வசிக்கும் திரு. தயாநிதி த/பெ. குமாரசாமி ஆகிய எனது கட்சிக்காரர் சார்பாக நான் அளிக்கும் பொது அறிவிப்பு என்னவென்றால் திரு. பவன் த/பெ. சந்துரு வயது 27, இவர் போலியாக எனது கட்சிக்காரரை ஏமாற்றி பணம் மற்றும் இதர கோப்புகளை எடுத்துகொண்டு தலைமறைவாகிவிட்டார். மேலும் திரு. பவன் அவர்கள் மீது தமிழ்நாடு காவல் துறையில் online புகார் மனு பதிவு செய்துள்ளார். மேலும், திரு. பவன் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க உள்ளார். இதனால் சகலமானவர்க்கும் தெரிவிப்பது என்னவென்றால் திரு. பவன் அவர்களிடம் யாரும் பண பரிவர்த்தனை செய்ய வேண்டாம் என்றும் மீறி செய்தால் அது என் கட்சிக்காரரை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்று இப்பொது அறிவிப்பின் மூலம் தெரிவித்து கொள்கிறோம்.

இங்கனம்:
**JP LAW ASSOCIATES**
சே. புகழேந்தி, LL.B
செ. சுகுணா, B.A., B.L
MOBILE: 7339138145 / 9894511837



**SHRIRAM City** — MONEY WHEN YOU NEED IT MOST

**POSSESSION NOTICE**
(For Immovable Property)

Whereas
The undersigned being the Authorised Officer & Asst.Vice President of the M/S SHRIRAM CITY UNION FINANCE COMPANY LTD., Under the Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 (54 of 2002) and in exercise of Powers conferred under Section 13(12) read with Rule 3 of the Security Interest (Enforcement) Rules, 2002 issued a demand notice dated 19.04.2021 To (i) Mrs. S. Revathy, Proprietrix of M/S. Sri Vari Filling Station, Bharat Petroleum Corporation Ltd. Bazaar Street, PeriyaPalayam, Near Temple, Uthukottai Taluk, Thiruvellore, Thiruvallur-601 102- Borrower, (ii) Mr. K. N. Sudhakar, S/o. Mr. Nagabooshanam, Plot No.1320, 18th Street Main Road, 3rd Floor E-3A, Door No.27, Anna Nagar West, West Bus Depot, Chennai- 600 040- Guarantor/Mortgagor, calling upon them to repay the amount of Rs.58,22,738/- (Rupees Fifty Eight Lakhs Twenty Two Thousand Seven Hundred and Thirty Eight Only) as on 19.04.2021 with further interest from 20.04.2021 on Enterprise Finance Loan Agreement TFHO1TF1712010001 dated 24.11.2017 within 60 days from the date of receipt of the said notice.

The guarantor/mortgagor and borrower having failed to repay the amount, notice is hereby given to the mortgagor/guarantor/borrower and the public in general that the under signed has taken possession of the property described herein below in exercise of powers conferred on him/her under Section 13(4) of the said Act read with Rule 8 of the said Rules on this 18th Day of August 2021.

The guarantor/mortgagor and borrower in particular and the public in general is hereby cautioned NOT to deal with the property and any dealings with the property will be subject to the charge of the M/s. Shriram City Union Finance Ltd., for an amount of Rs.58,22,738/- (Rupees Fifty Eight Lakhs Twenty Two Thousand Seven Hundred and Thirty Eight only) with further interest from 19.04.2021 on Enterprise Finance Account.

The borrower's attention is invited to provisions of sub section (8) of section 13 of the Act, in respect of time available to redeem the secured assets.

**SCHEDULE OF THE PROPERTY**

**Owned by K.N. Sudhakar, he having acquired the same vide Document No.4651/2005 dated 13.12.2005 on the file of the SRO, Villivakkam.**

All that piece and parcel of the land measuring an extent of 722 Sq.ft with constructed shops and residences now existing and to be put up thereon, comprised in S.No.53/1, Part of Padi Village and the land being on the:

Boundaries:

| | |
|---|---|
| North by | Plot No.1(ICC) |
| South by | 16 Feet Road |
| East by | 20 Feet Road |
| West by | Private Land |

Measuring:

| | |
|---|---|
| North by | 13 Feet 0 Inches |
| South by | 13 Feet 0 Inches |
| East by | 54 Feet 0 Inches |
| West by | 57 Feet 0 Inches |

And lying within the Registration Sub District of Villivakkam and Registration District of Chennai Central.

Drawn before me

Date 18.08.2021
Time 2:35 P.M.

AUTHORISED OFFICER & ASST. VICE PRESIDENT
SHRIRAM CITY UNION FINANCE LTD.
SECURED CREDITOR

SHRIRAM CITY UNION FINANCE LIMITED
Legal Department: No.12, Ramaswamy Street, T.Nagr, Chennai- 17. Ph : 44 46068200
Regd. Office : 123, Angappa Naicken Street, Chennai - 1. Ph:44 2534 1431
E-mail : shriramcity@shriramcity.in Website : www.shriramcity.in

தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்
வெள்ளிக்கிழமை 20-8-2021
பிலவ ஆவணி 4 ஹிஜ்ரி 1443 முஹர்ரம் 10

# ஏறுமுகத்தில் ஏற்றுமதி!

கொள்ளை நோய்த்தொற்று காரணமாகப் பொருளாதாரம் இதுவரை எதிர்கொண்ட வீழ்ச்சியிலிருந்து மீண்டெழுவதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கி இருக்கின்றன. ஏற்றுமதிகள் அதிகரித்து வருவதும் நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. கடந்த ஆண்டைவிட 48% அதிகரித்திருக்கிறது பொருள்களின் ஏற்றுமதி. அதாவது, 35.2 பில்லியன் டாலர் (சுமார் ரூ.2.61 லட்சம் கோடி) அளவிலான ஜூலை மாத ஏற்றுமதி என்பது ஒரு சாதனை என்றே கூறவேண்டும்.

இந்த ஆண்டு தொடக்கத்திலிருந்தே நம்பிக்கை அளிக்கும் விதத்தில் ஏற்றுமதிகள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. பொருள்களுக்கான சர்வதேச அளவிலான தேவையும், குறிப்பாக இந்திய உற்பத்திக்கான கேட்பும் அதிகரித்திருப்பது முக்கியமான காரணம். இதே நிலைமை தொடருமானால், இந்தியப் பொருளாதாரம் விரைவிலேயே சுறுசுறுப்படைந்து பழைய நிலையை எட்டக் கூடும் என்று வல்லுநர்கள் கருதுகின்றனர்.

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது ஏற்றுமதி அதிகரித்திருக்கிறது என்றாலும்கூட, தரம் வாரியாகப் பிரித்துப் பார்த்தால் சில துறைகளில் சுணக்கம் மாறாமல் இருப்பதும், பலவீனங்கள் காணப்படுவதும் வெளிப்படுகின்றன. பொதுவாகவே இந்திய ஏற்றுமதியில் பெரும் பங்கு வகிப்பது பெட்ரோலியப் பொருள்கள்தான். 2014-இல் நமது மொத்த ஏற்றுமதியில் 21%-ஆக இருந்த பெட்ரோலியப் பொருள்களின் ஏற்றுமதி, கடந்த 2020-21 நிதியாண்டில் 9%-ஆகக் குறைந்திருக்கிறது. சர்வதேச கச்சா எண்ணெயின் விலை குறைந்தது அதற்கு ஒரு காரணமாக இருக்கக்கூடும்.

நிலக்கரி, கச்சா எண்ணெய் போன்ற நிலத்திலிருந்து தோண்டி எடுக்கப்படும் பொருள்கள் புதைபடிவ எரிபொருள்கள் என்று அழைக்கப்படுகின்றன. பெரும்பாலான நாடுகள் புதைபடிவ எரிபொருள்களை (ஃபாஸில் ஃபூயல்ஸ்) தவிர்த்து மாற்று எரிசக்தியைப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கின்றன. அதனால், வருங்காலத்தில் பெட்ரோலியப் பொருள்களின் ஏற்றுமதியை நம்பியிருக்கும் நிலை மாற வேண்டும்.

அதேபோல இயந்திரங்கள், இயந்திர உதிரி பாகங்கள் ஆகியவற்றின் ஏற்றுமதி ஏப்ரல், மே, ஜூன், ஜூலை மாதங்களில் கணிசமாக அதிகரித்தன. சொல்லப்போனால், நமது ஏற்றுமதியில் மிக அதிகமாகப் பங்கு வகித்தன என்று கூறலாம். ஆனாலும்கூட, பழைய நிலையை எட்டவில்லை. இப்போதைய நிலைமை தொடருமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

மூன்றாவது மிகப் பெரிய பங்கு வகிப்பது ஆபரண ஏற்றுமதித் துறை. ரத்தினங்கள், வைரம் உள்ளிட்ட கற்கள் ஆகியவற்றின் ஏற்றுமதியும் ஓரளவுக்கு அதிகரித்திருக்கிறது என்றாலும், கொள்ளை நோய்த் தொற்றுக்கு முந்தைய நிலையை எட்டுவதற்கு இன்னும் வெகு தொலைவு இருக்கிறது. குறிப்பாக, பட்டை தீட்டப்பட்ட வைரங்களின் ஏற்றுமதி இன்னும் பழைய விறுவிறுப்பை எட்டவில்லை.

கொள்ளை நோய்த்தொற்று காலத்தில் நமது ஏற்றுமதியின் பெரும்பகுதி வேளாண் பொருள்களும், அதைச் சார்ந்தவையுமாகத்தான் கணிசமாக இருந்தன. நோய்த்தொற்று காலத்தில் வேளாண் உற்பத்தி அதிகமாக இருந்ததால், மொத்த ஏற்றுமதியில் அவை கணிசமான பங்கு வகித்தன. நோய்த்தொற்றிலிருந்து உலகின் பல பகுதிகள் மீண்டெழத் தொடங்கியிருக்கும் நிலையில், வேளாண் பொருள் ஏற்றுமதியின் பங்கும் அதிகரிக்கத் தொடங்கியிருப்பதில் வியப்பொன்றும் இல்லை.

இதைக் கருத்தில் கொண்டுதான் வேளாண் விற்பனை சீர்திருத்தத்தை மூன்று வேளாண் சட்டங்களின் மூலம் அறிமுகப்படுத்த மத்திய அரசு முயற்சிக்கிறது. அதன் முக்கிய நோக்கமே, இந்தியாவை வேளாண் பொருள்கள் ஏற்றுமதிக் கேந்திரமாக மாற்ற வேண்டும் என்பதுதான். கடந்த அரை நூற்றாண்டு காலமாக, உள்நாட்டு உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் கவனம் செலுத்தி வெற்றி அடைந்துவிட்ட நிலையில், இப்போது வேளாண் பொருள்கள் ஏற்றுமதியில் முனைப்புக் காட்டுவது என்பது புத்திசாலித்தனமான முடிவும்கூட.

இந்தியாவின் வேளாண் பொருள்கள் ஏற்றுமதி 2019-20-துடன் ஒப்பிடும்போது, கடந்த நிதியாண்டில் சுமார் 25% அதிகரித்திருக்கிறது. ஒட்டுமொத்த ஏற்றுமதி 7% -க்கும் அதிகமாக வீழ்ச்சி அடைந்த நிலையில், கடந்த நிதியாண்டில் வேளாண் பொருள்கள் ஏற்றுமதி அதிகரித்திருப்பது ஒரு வரப்பிரசாதம். இந்தியாவின் உச்சபட்ச வேளாண் பொருள்கள் ஏற்றுமதி 2012-13-இல் 32.7 பில்லியன் டாலர் (சுமார் ரூ.2.43 லட்சம் கோடி) அளவை எட்டியது. அந்த அளவை எட்டாவிட்டாலும்கூட, 2020-21-இல் 32.5 பில்லியன் டாலர் (சுமார் ரூ.2.41 லட்சம் கோடி) வேளாண் பொருள்களின் ஏற்றுமதி என்பது சாதாரணமானதல்ல.

வேளாண் பொருள்கள், கால்நடை வளர்ப்புப் பொருள்கள், மூலிகைப் பொருள்கள் ஆகியவற்றின் அதிகரித்த ஏற்றுமதியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய நேரம் இது. வேளாண் பொருள்கள் சார்ந்த உற்பத்தியிலும், ஏற்றுமதியிலும் கூடுதல் கவனம் செலுத்துவதன் மூலம் கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்தி, ஊரகப்புற வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும் என்கிற மத்திய அரசின் கண்ணோட்டம் வரவேற்புக்குரியது. வேளாண் சீர்திருத்தச் சட்டங்களின் அடிப்படை நோக்கமான கூடுதல் முதலீடும், வேலைவாய்ப்பும் சாத்தியப்படுமானால், அது ஊரகப்புற மேம்பாட்டுக்கு வழிகோலும்.

ஏற்றுமதி, இறக்குமதி விகிதத்தின் அடிப்படையில்தான் நாணய மதிப்பு, விலைவாசி, வட்டிவிகிதம் எல்லாமே அமைகின்றன. உள்நாட்டுப் பொருளாதாரம் மேம்படுவதுடன் நமது ஏற்றுமதிகள் அதிகரித்தால் மட்டுமே பொருளாதார வளர்ச்சி உறுதிப்படும்.

**துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி**
**இன்பம் பயக்கும் வினை.**
(முடிவில்) இன்பம் கொடுக்கும் தொழிலைச் செய்யும்போது துன்பம் மிக வந்தபோதிலும் துணிவு மேற்கொண்டு செய்து முடிக்க வேண்டும்.
**திருக்குறள் (எண்: 669) *அதிகாரம்: வினைத்திட்பம்***

# தொழில்துறையும் பொருளாதார மேம்பாடும்


முனைவர் வைகைச்செல்வன்

புதிய பொருளாதாரக் கொள்கை தொண்ணூறுகளின் தொடக்கத்தில் அறிமுகமானபோது, பல புதிய மாற்றங்கள் உருவாகத் தொடங்கின. ஏறக்குறைய, அப்போதுதான் ஒவ்வொரு மாநிலமும் தன்னிச்சையாக செயல்பட முடிந்தது என்றே கூறலாம். ஆனால், இவற்றை சில மாநிலங்கள் சரியாகப் பயன்படுத்திக் கொண்டன; பல மாநிலங்கள் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளாமல் தவற விட்டன. சரியாகப் பயன்படுத்திக்கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

அக்காலகட்டத்தில், தமிழ்நாட்டினுடைய தொழிற்சந்தையின் முகம் ஒரு புதிய வடிவில் மாறி இருந்தது. அதற்குக் காரணம், தொழில் வளர்ச்சி என்பது மாத்திரமல்ல. புதிய பொருளாதாரக் கொள்கையின் வரவால் மட்டுமே அது தொடங்கிவிடவில்லை. நீண்ட காலமாகவே மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் ஒரு மேம்பட்ட மாநிலமாகத்தான் இருந்து வந்தது. உதாரணமாக, இந்தியாவின் முதல் சைக்கிள், முதல் மோட்டார் வாகனம் போன்றவை அப்போதைய மெட்ராஸ் மாகாணத்தில்தான் உருவாக்கப்பட்டன. பின்னர் அவை இந்தியா முழுவதும் அறிமுகமாயின.

ஸ்டாண்டர்டு மோட்டார், அசோக் லேலண்ட் போன்ற வாகன உற்பத்தி நிறுவனங்கள், தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் பெரிதும் துணை புரிந்த காலகட்டம் அது. இன்றைய காலகட்டத்தில் ஹூண்டாய் போன்ற பல கார் தொழிற்சாலைகள் உருவாகியுள்ளன. ஆனால், அப்போதே ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் நிறுவனம் சென்னைக்கு அருகிலேயே தனது தொழிற்சாலையை நிறுவி கார்களைத் தயாரித்து சாதனை படைத்தது. குறிப்பிட வேண்டிய ஒரு செய்தி, இந்தியாவின் முதல் சொகுசு காரான 'ஸ்டாண்டர்டு 2000' இங்குதான் தயாரிக்கப்பட்டது.

அதே போல டி.டி.கே. குழுமம், டி.வி. சுந்தரம் ஐயங்கார் அண்ட் சன்ஸ், அமால்கமேஷன்ஸ், ரானே மெட்ராஸ் போன்ற நிறுவனங்களும் தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயல்பட்டன. தாராளமயமாக்கத்திற்கு முன்பாகவே டி.வி.எஸ்., ரானே மெட்ராஸ் போன்ற நிறுவனங்கள் வாகன உதிரிபாக உற்பத்தியின் மூலம் மிகச்சிறந்த பங்களிப்பை ஆற்றி தமிழ்நாட்டுக்குப் பெருமையைத் தேடித் தந்து கொண்டிருந்தன. பின்னர், 1965 காலகட்டத்தில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ) தொடங்கப்பட்டது. இதன் பலனாக ஸ்பிக், டைட்டன் போன்ற பல நிறுவனங்கள் ஒவ்வொன்றாகத் தொடங்கப்பட்டன.

1980-களில் டாடா கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனம் சென்னையில் தனது விரிவாக்கத்தை பெரிய அளவில் நிகழ்த்திக் காட்டியது. 1980-களின் பிற்பகுதியில் இந்தியா முழுவதும் தொழிற்சாலைகள் உருவாயின. மிகப்பெரிய தொழிலதிபர்கள் உருவாகிக் கொண்டிருந்த அந்தக் காலகட்டத்தில் தமிழ்நாடு ஒரு பெரிய மாற்றத்தை நோக்கி அடியெடுத்து வைத்தது. அதாவது, பொருளாதாரம் மாற்றத்திற்குரியதாக அறிவிக்கப்பட்டபோது அதை தமிழ்நாடு பெருமளவு நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டது.

80-களில் தனியார் பொறியியல் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டதால், பல பொறியியல் பட்டதாரிகள் 90-களின் தொடக்கத்தில் படிப்பை முடித்து வேலைக்குத் தயாராக இருந்தனர். தொழில்நுட்பக் கல்லூரிகளும், ஐ.ஐ.டி.யும், பாலிடெக்னிக்குகளும், தமிழகத்தில் மிகச்சிறந்த பங்களிப்பை ஆற்றி இருந்தன. ஆக, தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கும், நாட்டின் பொருளாதாரம் மேம்பாடு அடைவதற்கும் அடிப்படையில் மனித சக்தியே காரணமாக உள்ளது. எனவே, படிப்பை முடித்து வேலைவாய்ப்புகளுக்காகக் காத்துக் கொண்டிருந்த பொறியியல் அறிஞர்கள் தமிழக மண்ணில் அக்காலகட்டத்தில் அதிக அளவில் இருந்தனர்.

கிராமம், நகரம் ஆகிய இரு பகுதிகளுக்கும் இடையில் இருந்த இடைவெளி குறைந்து பொறியியல் பட்டதாரிகள் வேலைவாய்ப்புகளைப் பெற்றதனால் அடிப்படைப் பொருளாதாரம் வளரத் தொடங்கியது.

புதிய பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட 90-களுக்கும் தற்போது உள்ள 2021-க்கும் இடையில் இந்த உற்பத்திக்கான வளர்ச்சி அதிக பங்களிப்பைத் தந்திருக்கிறது. ஆட்டோமொபைல், உதிரிபாகங்கள், ஜவுளி, தோல் பொருள்கள், மருந்துப் பொருள்கள் இவற்றில் நாட்டிலேயே முதன்மையான மாநிலமாக தமிழ்நாடு உருவெடுக்கத் தொடங்கியது. ஹூண்டாய், ஃபோர்டு, பி.எம்.டபிள்யூ போன்ற முன்னணி கார் தயாரிப்பு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்கள் தொழிற்சாலைகளை தொடங்கியதும் பொருளாதார மாற்றத்திற்கு அடிகோலின எனலாம்.

ஆகவேதான் தொழில் வளர்ச்சியை நிர்ணயிப்பதிலும், தனியார் முதலீடுகளை ஈர்ப்பதிலும் மாநிலங்களுக்கிடையில் போட்டி உருவான 1992-ஆம் ஆண்டிலேயே தொழில் கொள்கை ஒன்றை வெளியிட்டு, ஒரு நல்ல முன்முயற்சியைத் தமிழகம் தொடங்கி வைத்தது. அக்காலகட்டத்தில்தான் தகவல் தொழில்நுட்பக் கொள்கை வெளியிடப்பட்டது. 340 கோடி ரூபாய் செலவில் பழைய மகாபலிபுரம் சாலையில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு என 'டைடல் பார்க்' என்ற தொழில்நுட்பப் பூங்கா உருவாக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து மற்றொரு தகவல் தொழில்நுட்பப் பூங்காவும் உருவானது. மாநிலம் முழுவதும் ஏராளமான தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களும், 57 சிறப்புப் பொருளாதார மண்டலங்களும் உருவாக்கப்பட்டன.

அதிக நேரடி அந்நிய முதலீட்டைப் பெறும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து வந்தது. ஃபோர்ட், ஷெல் போன்ற பெரிய நிறுவனங்களின் பி.பி.ஓ.-க்கள் தமிழ்நாட்டில்தான் இயங்குகின்றன. அவை தாராளமயமாக்கத்தையும், தமிழ்நாட்டின் சமூக நீதி திட்டங்களையும் பிரித்துவிட முடியாது என்கிற அளவிற்கு தமிழகத்தோடு பின்னிப் பிணைந்திருக்கின்றன. இக்காலகட்டத்தில்தான் வேலைவாய்ப்பு உருவாவதற்கான பல்வேறு சூழல்கள் உருவாகின. ஆக, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி என்பது மனிதவள மேம்பாட்டோடும் இணைந்திருக்கிறது.

**1992-ஆம் ஆண்டிலேயே தொழில் கொள்கை ஒன்றை வெளியிட்டு, ஒரு நல்ல முன்முயற்சியைத் தமிழகம் தொடங்கி வைத்தது. அக்காலகட்டத்தில்தான் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு என சென்னை தரமணியில் 'டைடல் பார்க்' என்ற தொழில்நுட்பப் பூங்கா உருவாக்கப்பட்டது.**

மக்கள்தொகையில் ஆறாவது இடத்தில் உள்ள தமிழ்நாடு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் இருப்பது ஒரு மகிழ்வான செய்தியாக இருக்கிறது.

இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பொருள்களில் 10-இல் ஒரு பங்கு தமிழ்நாட்டிலிருந்துதான் ஏற்றுமதியாகிறது. இத்தகைய வருமானம்தான் சமூக பாதுகாப்புத் திட்டங்களில் முதலீடு செய்யப்பட்டு மாநிலத்தின் சுகாதார வளர்ச்சி, உற்பத்தி ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு அடித்தளமாக இருந்தது. விவசாயத்தைச் சார்ந்திருப்போரின் எண்ணிக்கை குறைந்து வருவதும், மாநிலத்திலுள்ள பெரும்பாலான கிராமங்கள் நகரமயமாகிக் கொண்டிருப்பதும் பின்னடைவுகள்தான்.

மேலும், தமிழ்நாட்டில் இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்புகள் குறைந்து போய், வெளிமாநிலங்களில் இருந்து வருபவர்கள் இங்கு வேலைக்காகக் குவியத் தொடங்கியிருக்கிறார்கள். இது திருப்பூர் போன்ற மாவட்டங்களில் அதிகமாக நிகழ்கிறது. இவை நாளடைவில் சமூக ரீதியான முரண்பாடுகளை ஏற்படுத்தக் கூடும். தமிழக அரசின் தற்போதைய கடன் ரூ.5,70,189 கோடியாக உயர்ந்திருப்பதாக வெள்ளை அறிக்கையில் தமிழக நிதியமைச்சர் குறிப்பிடுகிறார். தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.2,63,976 கடன் உள்ளது. ஆந்திரம், பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களின் வெள்ளை அறிக்கையை ஒப்பிட்டுப் பார்த்தும், ஆராய்ந்து பார்த்தும் தமிழக அரசின் வெள்ளை அறிக்கை தயார் செய்யப்பட்டதாக நிதியமைச்சகம் கருத்து தெரிவித்திருக்கிறது.

2020-21 நிதியாண்டில் தமிழகத்தின் வருவாய்பற்றாக்குறை ரூபாய் 61,320 கோடியாக இருக்கிறது. தமிழகத்தில் ஒரு குடும்பத்தின் மீதான கடன் தொகை ரூ.2,63,976 ஆக உள்ளது என்று தற்போதைய அரசு குறிப்பிட்டிருக்கிறது. வரியே இல்லாத நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து, மின்கட்டண உயர்வோ, பேருந்து கட்டண உயர்வோ, சொத்து வரி உயர்வோ இன்றி பத்து ஆண்டுகளாக அ.தி.மு.க அரசு செயல்பட்டதை எவ்வாறு தவறென்று நாம் குற்றம் சாட்ட முடியும்? அரசு ஊழியர்களின் ஊதியம், ஓய்வூதியம், அரசாங்க அலுவலகங்களைப் பராமரிப்பது, மின்கட்டணம் ஆகியவற்றுக்கே தமிழகத்தினுடைய பெரும்பகுதியான நிதி செலவிடப்பட்டு வருகிறது.

தற்போதைய ஆட்சியில் பொருளாதார நிபுணர்கள் கொண்ட ஒரு குழு உருவாக்கப்பட்டிருக்கிறது. பொருளாதாரக் கொள்கை உருவாக்கப்பட்டபோதும், தாராளமயமாக்கல் கொள்கை தொடங்கிய காலகட்டத்திலும், பொருளாதார அறிஞர்களுடைய தேவை மிகவும் இன்றியமையாததாக இருந்தது. இவையெல்லாம் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான தாக்கத்தை ஏற்படுத்துமா என்பதை போகப் போகத்தான் பார்க்க வேண்டும். தற்போதைய கரோனா தீநுண்மி காலகட்டத்தில் நம்முடைய பெரும் வருவாய் நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்தவே செலவிடப்பட்டு வருகிறது. அதுதான் பொருளாதார நெருக்கடிக்கு மிக முக்கிய காரணமாகும்.

ஏற்கெனவே ஜி.எஸ்.டி வரியில் தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய பங்குத்தொகை வராமல் இருக்கிறது. தமிழக அரசு பெரும் துறைகளில் இருந்தும், பொது நிறுவனங்களிடம் இருந்தும் பெரும் வருவாயை ஈட்டுவதற்கு முனைந்தால், அது ஏழை, எளிய மக்களின் மீதான வரிச்சுமையாகவே போய் முடியும். பொருளாதார வளர்ச்சிக்கு விவசாயம் சார்ந்த தொழில்களையும், நீர் மேலாண்மையையும் சரியாகத் திட்டமிடுவது இன்றியமையாதது. அவையே, நிதிச்சுமையில் இருந்து தமிழகத்தைக் காப்பாற்றுவதற்கு உதவும்.

கட்டுரையாளர்:
**முன்னாள் அமைச்சர்.**

https://t.me/Tamil_epaper2

# கைவிடப்பட்ட தேசம்

**எஸ். ஸ்ரீதுரை**

அண்மையில் ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டுள்ள அதிரடி நிகழ்வுகள் அனைத்து நாடுகளையுமே கவலை கொள்ள வைத்திருக்கின்றன. அமெரிக்கப் படைகள் பெருமளவு விலகிக்கொண்ட நிலையில், ஒவ்வொரு மாகாணமாகக் கைப்பற்றிக் கொண்டே வந்த தலிபான்கள் கடந்த ஞாயிறு அன்று ஆப்கன் தலைநகர் காபூலையும் கைப்பற்றிவிட்டனர்.

தலிபான் படைகள் ஒவ்வொரு மாகாணமாகக் கைப்பற்றி இறுதியில் தலைநகர் காபூலை நெருங்குகையில் 'அதிகாரப் பகிர்வு தொடர்பாகவும் அவர்களுடன் பேசத் தயார்' என்று கூறி ஆப்கன் அரசு இறங்கி வந்தது.

ஆனால், யாரும் எதிர்பாராத விதமாக, ஆப்கன் ராணுவம் ஏறக்குறைய தலிபான் படைகளிடம் சரணடைந்துவிட, அந்நாட்டு அதிபர் அஷ்ரஃப் கனியோ நாட்டை விட்டே தப்பிச் சென்றிருக்கின்றார்.

மன்னராட்சி, இடதுசாரிகளின் ஆதிக்கம், தீவிரவாதிகளின் எழுச்சி, ஜனநாயகத்தின் மலர்ச்சி என்று நீண்ட காலமாகவே ஆப்கானிஸ்தானில் ஒருவித ஸ்திரமற்ற தன்மை நீடித்து வந்திருக்கிறது.

அமெரிக்கா - ரஷியா இடையிலான பனிப்போர் காரணமாக இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் ஆப்கானிஸ்தானில் ஓயாத போர்ச்சூழல் நிலவியது. ஆப்கனிலிருந்த இடதுசாரி ஆதரவாளர்களுக்கு ரஷியாவும், அவர்களை எதிர்த்த முஜாஹிதீன்களுக்கு அமெரிக்காவும் ஆதரவாக இருந்தன.

1989-ஆம் ஆண்டில் ஒருவழியாக ரஷியப்படைகள் ஆப்கானிஸ்தானில் இருந்து விலகி, அதன் ஆதரவு பெற்ற இடதுசாரி அரசு வீழ்ந்தபிறகு நிலைமை மோசமாகி, தலிபான்கள் தலையெடுக்கத் தொடங்கினர். வடக்கு முன்னணி என்ற பெயரில் மற்றொரு குழுவினர் தலிபான்களை எதிர்த்தாலும் அதனால் குறிப்பிடத்தக்க விளைவு ஏதுமில்லை.

2001 செப்டம்பர் 11-ஆம் தேதி அமெரிக்காவில் நிகழ்த்தப்பட்ட இரட்டைக் கோபுரத் தாக்குதல்களுக்குப் பிறகு வீறுகொண்டு எழுந்த அமெரிக்கா, தலிபானையும், தலிபானால் ஆதரிக்கப்பட்ட அல்-காய்தா இயக்கத்தையும் அழிப்பதற்காக தன்னுடைய படைகளைப் பெருமளவில் ஆப்கானிஸ்தானில் குவிக்கத் தொடங்கியது. வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் படைகளும் அமெரிக்கப் படைகளுடன் இணைந்து கொண்டன.

அந்நேரத்தில் இடைக்கால ஏற்பாடாக ஆப்கனின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட ஹமீத் கர்சாய் பின்னர் ஜனநாயக முறையில் நடைபெற்ற தேர்தலிலும் வெற்றி பெற்று அதிபர் பதவியில் தொடர்ந்தார். ஹமீத் கர்சாய் தலைமையிலான ஆட்சிக் காலத்தில் ஆப்கானிஸ்தானில் குறிப்பிடத்தக்க அளவுக்கு ஜனநாயகம் மலர்ந்ததுடன், அவருடைய அரசு உலக நாடுகள் பலவற்றாலும் அங்கீகரிக்கப்பட்டது. பெண்கள் கல்வி கற்கவும், தேர்தலில் வாக்களிக்கவும் அனுமதிக்கப்பட்டது மிகப் பெரிய முன்னேற்றமாகப் பார்க்கப்பட்டது.

2011-ஆம் ஆண்டு அல்-காய்தாவின் ஒசாமா பின் லேடன் கொல்லப்பட்ட பின்பு ஆப்கானிஸ்தானிலிருந்து தனது படைகளைத் திரும்பப் பெறுவது குறித்து அமெரிக்கா தீவிரமாக யோசிக்கத் தொடங்கியது. கூடவே, ஆப்கனில் அமைதி நிலவுவதற்காக தலிபான் மற்றும் ஆப்கானிஸ்தான் அரசு பிரதிநிதிகள் இடையே பேச்சுவார்த்தை நடைபெறவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

2014- ஆம் ஆண்டு ஆப்கன் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு சமீப காலம் வரையில் அப்பதவியில் தொடர்ந்த அஷ்ரஃப் கனி சற்று பலவீனமான அதிபராகவே காணப்பட்டார். அம்மண்ணில் நீண்ட காலமாகத் தன்னுடைய துருப்புகளை நிறுத்தி வைத்து தீவிரவாதிகளுடன் சண்டையிட்ட அமெரிக்க அரசு, அப்படைகளுக்காகப் பெருமளவில் பணம் செலவழித்ததுடன் தன்னுடைய படைவீரர்கள் பலரையும் பலிகொடுத்தது. அப் படைவீரர்களைத் திரும்ப அழைத்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை அமெரிக்காவில் வலுப்பெறத் தொடங்கியது.

ஆப்கானிஸ்தானின் ஸ்திரத்தன்மைக்கு அந்நாட்டு அரசே பொறுப்பேற்க வேண்டும் என்று கூறிவிட்ட அமெரிக்க நிர்வாகம் தற்போது சுமார் ஆறாயிரம் அமெரிக்கப் படைவீரர்களை மட்டுமே ஆப்கானிஸ்தானில் நிறுத்தி வைத்துள்ளது.

இதற்காகவே காத்திருந்தது போன்று, தலிபான்கள் அந்நாட்டு அரசைக் கைப்பற்றியுள்ளனர். தலிபான்களை எதிர்த்து ஆப்கன் அரசுப் படைகள் தீவிரமாகப் போராடாததால் பெரும் ரத்தக்களரி தவிர்க்கப்பட்டிருப்பது மட்டுமே சற்று ஆறுதலைத் தருகிறது.

ஆனால், தலிபான்களின் தலைமையில் நடக்கவிருக்கும் ஆட்சி அவர்களுடைய பழைய வழிமுறைகளின்படியே தொடருமா, பெண்களின் கல்வி உரிமையும் ஜனநாயகமும் மதிக்கப்படுமா, உலக நாடுகளின் அங்கீகாரம் இப்புதிய அரசுக்குக் கிடைக்குமா என்பவை போன்ற கேள்விகளுக்கு எதிர்காலம்தான் விடை கூற வேண்டும்.

பிரிட்டன், ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் ஆப்கானிஸ்தான் நிர்வாகத்தைக் கைப்பற்றிய தலிபான்களுக்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றன. ஆப்கனிலிருந்து அகதிகளாக வருபவர்களுக்கு ஆதரவு தரவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையும் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

அம்மண்ணில் சிக்கியுள்ள இந்தியர்கள் அனைவரும் இந்தியாவுக்குத் திருப்பி அழைத்துவரப்படுவதே தற்போதைய அவசர அவசியத் தேவையாகும். அதேசமயம், ஆப்கனில் நடைபெற்ற ஆட்சி மாற்றத்தை பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் வரவேற்றிருப்பதும், தலிபான்களுடன் நட்புணர்வுடன் செயல்படப் போவதாக சீனா அறிவித்திருப்பதும் இந்தியாவிற்குக் கவலையளிக்கக்கூடிய விஷயங்களே.

லடாக் பகுதியில் தனது துருப்புகளைக் குவித்து வைத்து நமது நாட்டிற்கு பதற்றத்தைக் கொடுக்கும் சீனா, தலிபான்களுடன் தோழமை கொள்வது நிச்சயம் நமக்குத் தலைவலியைத் தருவதாகவே இருக்கும். எனவே, நமது ராணுவம் கூடுதல் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியது அவசியம்.

2001-ஆம் ஆண்டுக்குப் பிறகு சற்றே ஜனநாயகக் காற்றை சுவாசிக்கத் தொடங்கிய ஆப்கானிஸ்தான் தற்போது அனைவராலும் கைவிடப்பட்ட தேசமாகி, கடும் நெருக்கடியில் சிக்கிக் கொண்டிருக்கிறது.

தற்போதைய நிலையில் நம்மால் ஆப்கன் மக்களின் நலனுக்காக பிரார்த்திக்க மட்டுமே முடியும்.

## அன்புள்ள ஆசிரியருக்கு...
edit.dinamani@gmail.com

### வரப்பிரசாதம்

இந்திய கடற்படைக்காக இந்தியாவிலேயே போர்க்கப்பல் உருவாக்கப்பட வேண்டும் என்கிற இந்தியாவின் நாற்பதாண்டு கால கனவு, இப்போது நனவாகி இருக்கிறது ('கடற்படைக்கு வரலாற்றுத் தருணம்!' தலையங்கம் 12-8-2021). இந்தப் போர்க்கப்பலை வடிவமைத்ததிலும், கட்டுமானம் செய்ததிலும் பெரும்பங்கு வகித்த இந்தியக் கடற்படை வடிவமைப்பு இயக்ககமும், கொச்சி கப்பல் கட்டுமானத் தளமும் மிகவும் பாராட்டுக்குரியவை. 18 கடல் மைல் வேகத்தில் 7500 கடல் மைல் பயணிக்கும் திறன் கொண்ட ஐஎன்எஸ் விக்ராந்த் போர்க்கப்பல் இந்தியத் தொழில்துறைக்கே ஒரு வரப்பிரசாதம். நாட்டின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு விரைவில் அடுத்தடுத்த போர்க்கப்பல்களை இந்தியா உருவாக்க வேண்டும்.

**ஆ. மரகதம்,** செங்கம்.

### பாராட்டத்தக்கது

மருத்துவம், பல் மருத்துவப் படிப்புகளில் அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கும், பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கும் இட ஒதுக்கீட்டை பிரதமர் அறிவித்திருப்பது பாராட்டத்தக்கதாகும் ('சமூக நீதியின் பாதுகாவலர்!' 12-8-2021). தமிழக கட்சிகள் மத்திய அரசில் அங்கம் வகித்தபோது கேட்டுப் பெற்றிருக்க வேண்டிய இட ஒதுக்கீட்டை பாஜக இப்போது தானே முன்வந்து நடைமுறைப்படுத்தியிருக்கிறது. குடியரசுத் தலைவரில் தொடங்கி, மத்திய அமைச்சரவையில் பட்டியலினத்தவர், பழங்குடியினர், பெண்கள் ஆகியோருக்கு பிரதிநிதித்துவம் அளித்திருக்கும் பிரதமர் நரேந்திர மோடியே உண்மையான சமூக நீதியின் பாதுகாவலர் ஆவார்.

**வை. சந்திரசேகரன்,** கடலூர்.

### களங்கம்

பதினேழாவது நாடாளுமன்றத்தின் ஆறாவது கூட்டத்தொடர், எதிர்க்கட்சிகளின் தொடர் அமளி ஜனநாயகத்திற்கு ஏற்பட்ட களங்கம் என்றுதான் கூறவேண்டும் ('இது வல்ல பிரதிநிதித்துவம்!' தலையங்கம் (13-8-2021). இதனால் குடியரசுத் துணைத்தலைவரும் மாநிலங்களவைத் தலைவருமான வெங்கையா நாயுடு அவையின் கண்ணியத்தைக் காப்பாற்றும்படி உறுப்பினர்களிடம் மன்றாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தங்களின் செயல்பாடுகளை மக்கள் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அவை உறுப்பினர்கள் மறந்துவிடக் கூடாது.

**கு. முருகபூபதி,** திருப்பூர்.

### முதலும் மூலமும்

இந்த உலகம் தழுவிய நிலப்பரப்பில் திராவிட நாடு எங்கே இருக்கிறது? தமிழ் மொழியிலிருந்துதான் ஏனைய திராவிட மொழிகளான தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகள் தோன்றின என்பது வரலாறு. எனவே, தமிழே முதலும் மூலமும் ஆகும் ('தமிழ் தேசியத்தை உள்ளடக்கியதே திராவிட தேசியம்!' கே.எஸ். இராதாகிருஷ்ணன் 12-8-2021). தமிழர்களின் வாழ்வியலையும், பெருமையையும் எடுத்துரைப்பவை சங்க நூல்களே.

அவற்றில் எங்கும் 'திராவிடம்' என்ற சொல் காணப்படவில்லை. ஆரிய வேதங்களும் புராணங்களும் கட்டுக்கதை எனக் கூறும் திராவிட ஆய்வாளர்கள் தங்கள் கருத்துக்கு வலு சேர்க்க மனு ஸ்மிருதியில் தொடங்கி வேத புராணங்கள் வரை அனைத்தையும் சாட்சிக்கு இழுப்பது என்ன நியாயம்? தமிழின் பழைமையையும், பெருமையையும் மறைப்பதற்காக கண்டுபிடிக்கப்பட்ட சொல்லே 'திராவிடம்'.

**ச. கணபதி,** மதுரை.

### சிறப்பு எழுத்து

நமது பாரத நாட்டுக்கு மட்டுமே தமிழ், சம்ஸ்கிருதம் ஆகிய இரு செம்மொழிகள் உள்ளன. இரண்டிலும் அறக்கோட்பாடுகளும், வாழ்வியலுக்கான நன்னெறிகளும் நிறைந்திருக்கின்றன ('தமிழுக்கான சம்ஸ்கிருத சொல்லே திராவிடம்!' கோதை ஜோதிலட்சுமி 13-8-2021). இன்று பலரும் திராவிடம் என்று எதையெதையோ கூறிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் தங்கள் வாதத்துக்கு சாட்சியாக சம்ஸ்கிருத நூல்களையே மேற்கோள் காட்டுகின்றனர். சங்க இலக்கிய நூல் எதிலும் 'திராவிடம்' என்ற சொல் இடம்பெறவில்லை. தமிழ் மொழிக்கே உரிய சிறப்பு எழுத்தான 'ழ' எழுத்தை உச்சரிக்க இயலாதவர்கள் தமிழைக் குறிக்க தமது மொழியில் 'திராவிடம்' என்ற சொல்லைப் பயன்படுத்தினர் என்பதே உண்மை.

**ந. பானு,** தெள்ளாறு.

### வணிக நோக்கம்

இன்று முதியோர் இல்லங்கள் என்பவை மிகப்பெரும் வணிக நோக்கோடு பிரமாண்டமாக அமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் சேவை என்பது பின்னுக்குத் தள்ளப்பட்டு, வருமானம் மட்டுமே முதல் நோக்கமாக இருக்கிறது ('உறவுகளின் உன்னதம்' 13-8-2021). முதியோருக்கு அந்த இல்லங்களில் எத்தனை வசதிகள் கொடுக்கப்பட்டாலும், அவையெல்லாம் அவர்கள் தங்கள் வீட்டில் உறவுகளுடனும் குழந்தைகளுடனும் இருப்பதற்கு ஈடாகாது. இன்றைய இளைய தலைமுறையினர் பெற்றோருக்காக பணம் செலவு செய்யத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், அவர்களைத் தங்களுடன் வைத்துக் கொள்ள விரும்புவதில்லை. முதியவர்கள் விரும்புவது சுகமான வாழ்க்கையை அல்ல, சொந்தங்களுடன் சேர்ந்து வாழும் வாழ்க்கையையே.

**ந. சண்முகம்,** திருவண்ணாமலை.

# கர்நாடக உயர்நீதிமன்றத்தில் 6 பேர் நிரந்தர நீதிபதிகளாக நியமனம்

## தெலங்கானாவில் 6 பேருக்கு நீதிபதிகளாக பதவி உயர்வு

**புது தில்லி, ஆக.19:** கர்நாடக உயர்நீதிமன்றத்தின் 6 கூடுதல் நீதிபதிகளை நிரந்தர நீதிபதிகளாக நியமனம் செய்வதற்கான பரிந்துரைக்கு உச்சநீதிமன்ற கொலீஜியம் ஒப்புதல் அளித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா தலைமையிலான கொலீஜியம் கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான அறிக்கை உச்சநீதிமன்ற வலைதளத்தில் வியாழக்கிழமை பதிவேற்றம் செய்யப்பட்டது.

அதன்மூலம், கர்நாடக உயர்நீதிமன்றத்தில் கூடுதல் நீதிபதிகளாகப் பணியாற்றிவந்த நீதிபதிகள் நேரனஹள்ளி ஸ்ரீநிவாசன் சஞ்சய் கௌடா, ஜோதி முளிமணி, நடராஜ் ரங்கசுவாமி, ஹேமந்த் சந்தன கௌடர், பிரதீப் சிங் யெரூர், மகேசன் நாகபிரசன்னா ஆகியோர் உயர்நீதிமன்ற நிரந்தர நீதிபதிகளாகியுள்ளனர்.

அதுபோல, தெலங்கானா நீதித் துறை அதிகாரிகள் பி.ஸ்ரீசுதா, சி.சுமலதா, ஜி.ராதா ராணி, எம்.லட்சுமண், என்.துகாராம்ஜி, ஏ.வெங்கடேஸ்வர ரெட்டி ஆகியோருக்கு தெலங்கானா உயர்நீதிமன்ற நீதிபதிகளாக பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தவிர, வருமான வரி மேல்முறையீட்டு தீர்ப்பாய நீதித்துறை உறுப்பினர் பி.மாதவி தேவுக்கு தெலங்கானா உயர்நீதிமன்ற நீதிபதியாகப் பதவி உயர்வு அளிப்பதற்கான பரிந்துரைக்கும் கொலீஜியம் ஒப்புதல் அளித்துள்ளது.

மேலும், கொல்கத்தா உயர்நீதிமன்ற கூடுதல் நீதிபதி கௌசிக் சந்தாவை உயர்நீதிமன்ற நிரந்தர நீதிபதியாக நியமனம் செய்வதற்கான பரிந்துரைக்கும் கொலீஜியம் ஒப்புதல் அளித்துள்ளது.

தலைமை நீதிபதி என்.வி.ரமணா, நீதிபதிகள் யு.யு.லலித், ஏ.எம்.கான்வில்கர் ஆகிய 3 பேரைக் கொண்ட உச்சநீதிமன்ற கொலீஜியம், உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் தொடர்பான முடிவுகளை எடுத்து வருகிறது.

# சங்கர் தயாள் சர்மா பிறந்த நாள்: குடியரசுத் தலைவர் மரியாதை



குடியரசு முன்னாள் தலைவர் சங்கர் தயாள் சர்மாவின் பிறந்த நாளை முன்னிட்டு வியாழக்கிழமை அவருக்கு மரியாதை செலுத்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த்.

**புது தில்லி, ஆக.19:** குடியரசு முன்னாள் தலைவர் சங்கர் தயாள் சர்மாவின் பிறந்தநாளை முன்னிட்டு, குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவருக்கு மரியாதை செலுத்தினார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் வியாழக்கிழமை, சங்கர் தயாள் சர்மாவின் உருவப்படத்துக்கு குடியரசுத் தலைவர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில், குடியரசுத் தலைவர் மாளிகையின் அலுவலர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

1992-97 காலகட்டத்தில் குடியரசுத் தலைவராக இருந்த சங்கர் தயாள் சர்மா, 1999-ஆம் ஆண்டு காலமானார்.

இளம் வயதில் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்ற அவர், பின்னர் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார்.

# புதிய வேளாண் சட்டங்கள்: விவசாயிகளுடன் பேசத் தயார்

## பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்

**பஞ்ச்குலா (ஹரியாணா), ஆக.19:** 'மத்திய அரசு கொண்டுவந்துள்ள புதிய 3 வேளாண் சட்டங்களில் விவசாயிகளின் நலனைப் பாதிக்கும் வகையிலான பிரிவுகள் இடம்பெற்றிருப்பதாக யாராவது எண்ணினால், அதுதொடர்பாக விவசாய சகோதரர்களுடன் அமர்ந்து பேச மத்திய அரசு தயாராக உள்ளது' என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறினார்.

ஹரியாணாவில் வியாழக்கிழமை நடைபெற்ற முதியோர்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் மத்திய அரசின் அன்னபூர்ணா திட்டம் தொடக்க நிகழ்ச்சியில் காணொலி வழியில் பங்கேற்ற பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பேசியதாவது:

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு விவசாயிகளின் நலனுக்காக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அவர்களின் நலனுக்காகவும் வருவாயைப் பெருக்கும் வகையிலும் புதிய 3 வேளாண் சட்டங்களை மத்திய அரசு கொண்டுவந்தது. ஆனால், அந்த 3 சட்டங்களையும் முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. இந்தச் சட்டங்களுக்கு எதிரான சூழல் திட்டமிட்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. அதனை, விவசாய சகோதரர்கள் புரிந்துகொள்ள வேண்டும். விவசாயிகளுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குறித்த தகவல் மூலம் குழப்பம் பரப்பப்பட்டிருக்கிறது.

இருந்தபோதிலும், விவசாயிகள் இப்போது உண்மையை உணரத் தொடங்கியிருக்கின்றனர். இப்போது தங்களின் லாபம் மற்றும் நஷ்டத்தை விவசாயிகளே கணக்கிடத் தொடங்கிவிட்டனர்.

இந்த 3 வேளாண் சட்டங்களையும் முழுமையாகப் படிப்பதன் மூலம், அதில் எந்தவொரு பிரிவும் விவசாயிகளின் நலனுக்கு எதிராக இல்லை என்பது நன்கு தெரிய வரும். இந்தச் சட்டங்கள் விவசாயிகளின் நலனுக்கு எதிராக இருப்பதாக யாராவது எண்ணினால், விவசாய சகோதரர்களுடன் அதுகுறித்து அமர்ந்து பேச மத்திய அரசு தயாராக உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை ஒன்றரை மடங்கு உயர்வு, சிறு விவசாயிகளுக்கு மிகக் குறைந்த வட்டியில் கடன் வசதி, விவசாயிகளின் வங்கிக் கணக்கில் ரூ.1.50 லட்சம் கோடி வரவு வைப்பு என நமது விவசாயிகளைப் பலப்படுத்தும் வகையிலான பல்வேறு திட்டங்களை மோடி தலைமையிலான அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது என்றார் அவர்.

# தீண்டாமை சம்பவங்களால் ஆத்திரம்-கோபம் ஏற்படுகிறது

## முதல்வர் மு.க.ஸ்டாலின்



தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம்.

**சென்னை, ஆக. 19:** தீண்டாமைச் சம்பவங்களால் ஆத்திரமும், கோபமும் ஏற்படுவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வேதனைபடத் தெரிவித்தார்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையால் மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்கு தலைமையேற்று, முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆற்றிய உரை:

கல்வி,வேலைவாய்ப்பில்பட்டியலின மக்கள் உரிய இடங்களைப் பெற வேண்டும். சமூக அமைப்பில் அவர்கள் எந்தச் சூழலிலும் புறக்கணிக்கப்படக் கூடாது. ஜாதியைக் காரணம் காட்டி அவர்களது வளர்ச்சி தடுக்கப்படக் கூடாது. அரசியல், பொருளாதாரம், கல்வி ஆகிய அனைத்து நிலைகளிலும் அவர்கள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அனைவருக்கும் அனைத்தும் கிடைத்திட வேண்டும் என்ற சிந்தனைகளைக் கொண்ட அரசுதான் திமுக அரசு.

இத்தகைய சூழ்நிலையில் அங்கொன்றும், இங்கொன்றுமாக நடக்கக் கூடிய தீண்டாமைச் சம்பவங்களைக் கேள்விப்படும் போது வருத்தம் ஒருபுறம் இருக்கிறது. மற்றொரு புறம் கோபமும், ஆத்திரமும் வருகிறது. அதை யாரும் மறுக்க முடியாது. கல்வி, பொருளாதாரம், நாகரிகம் வளர்ந்தாலும், ஜாதி, தீண்டாமை, ஏற்றத்தாழ்வு என்பது அப்படியே இருக்கின்றன. அதில் மாற்றம் செய்ய இன்னும் பல ஆண்டுகள் கடக்க வேண்டும் என்றே தெரிகிறது. இதனைச் சட்டத்தின் மூலமாக ஓரளவு சரிசெய்ய முடியும். அத்தகைய சட்டங்கள் முறையாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

தீண்டாமை வன்கொடுமைகளைத் தடுக்க தனி சட்டம் உருவாக்கப்பட்டது. ஆனாலும், தீண்டாமை பாகுபாட்டைக் காட்டுவது, சட்டப்படி தவறானது என்ற எண்ணம் சிலருக்கு இல்லை. அதை தைரியமாகவே செய்கிறார்கள். இத்தகைய சட்டமீறல்கள் தடுக்கப்பட வேண்டும். தண்டிக்கப்பட வேண்டும். தீண்டாமை குற்றம் இழைத்தவர் தப்பிவிடக் கூடாது. அதே நேரத்தில் அந்தச் சட்டத்தை யாரும் தவறாகப் பயன்படுத்தி விடக் கூடாது.

https://t.me/Tamil_epaper2

ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.123 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அங்குள்ள காலிப் பணியிடங்கள் கணக்கிடப்பட்டு நிரப்பப்படும்.

தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம், தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலக் குழு ஆகியவற்றை திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆதிதிராவிட, பழங்குடியின மக்களின் வாழ்வியல் பொருளாதார முன்னேற்றத்துக்கு அரசு எப்போதும் துணையாக இருக்கும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

இந்தக் கூட்டத்தில், அமைச்சர்கள், சட்டப் பேரவை, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.

# இரண்டாம் தவணை தடுப்பூசி: 3.86 கோடி பேர் தவிர்ப்பு

**புது தில்லி, ஆக. 19:** கரோனா தடுப்பூசி இரண்டாம் தவணையை உரிய நேரத்தில் செலுத்தாமல் 3.86 கோடி பேர் தவிர்த்திருப்பதாக மத்திய அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 'கோவின்' வலைதளத்தில் பதிவாகியுள்ள தகவல்களின் அடிப்படையில் வியாழக்கிழமை பிற்பகல் வரை 44,22,85,854 பேர் முதல் தவணை தடுப்பூசி செலுத்திக்கொண்டுள்ளனர். அவர்களில் 12,59,07,443 பேர் இரண்டாம் தவணை தடுப்பூசியும் செலுத்திக் கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரமண் சர்மா என்பவர் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (ஆர்டிஐ) கீழ் இதுதொடர்பாக எழுப்பிய கேள்விக்கு, மத்திய சுகாதாரத் துறை அமைச்சகத்தின் நிர்வாகப் பிரிவு அளித்த பதிலில் கூறியிருப்பதாவது:

கோவிஷீல்ட் தடுப்பூசியை முதல் தவணைக்குப் பிறகு 84 முதல் 112 நாள்கள் இடைவெளியில் இரண்டாம் தவணை தடுப்பூசி செலுத்திக் கொள்ளவும், கோவேக்ஸின் தடுப்பூசியின் இரண்டாம் தவணையை, முதல் தவணை தடுப்பூசி செலுத்திய 28 முதல் 42 நாள்களுக்குப் பிறகும் செலுத்திக்கொள்ள வேண்டும் என மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் பரிந்துரைத்துள்ளது.

அந்த வகையில், கோவிஷீல்ட் தடுப்பூசி முதல் தவணை செலுத்தியவர்களில், 3,40,72,993 பேர் உரிய நேரத்தில் இரண்டாம் தவணை செலுத்தாமல் தவிர்த்துள்ளனர். கோவேக்ஸின் முதல் தவணை செலுத்தியவர்களில் 46,78,406 பேர் உரிய நேரத்தில் இரண்டாம் தவணை தடுப்பூசி செலுத்திக் கொள்ளாமல் தவிர்த்துள்ளனர்.

முதல் தவணை தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் உரிய நேரத்தில் இரண்டாம் தவணையை செலுத்திக் கொள்ள வேண்டும் என்று மட்டுமே மத்திய அரசு பரிந்துரைத்துள்ளது. மாறாக, உரிய இடைவெளியில் இரண்டாம் தவணை தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்கள் மீண்டும் முதல் தவணை தடுப்பூசியை செலுத்திக் கொள்ள வேண்டும் என்ற வகையிலான பரிந்துரை எதையும் அரசு வெளியிடவில்லை. 'தடுப்பூசியின் முழு பலனை அடைய இரண்டு தவணைகளையும் உரிய நேரத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இரண்டு தவணையிலும் ஒரே வகை தடுப்பூசியையே செலுத்திக் கொள்ள வேண்டும்' என்றும் மத்திய அரசு பரிந்துரைத்துள்ளது என்று பதிலளிக்கப்பட்டுள்ளது.

# மத மாற்றத் தடை சட்டப் பிரிவுகள்

## குஜராத் உயர்நீதிமன்றம் தடை

**ஆமதாபாத், ஆக. 19:** குஜராத் மாநிலத்தில் புதிய மத மாற்றத் தடைச் சட்டத்தில் உள்ள ஜாதி மறுப்புத் திருமணம் தொடர்பான சில பிரிவுகளை அமல்படுத்துவதற்கு அந்த மாநில உயர்நீதிமன்றம் வியாழக்கிழமை இடைக்காலத் தடை விதித்துள்ளது.

திருமணம் என்ற பெயரில் கட்டாய மதமாற்றத்தில் ஈடுபடுவோருக்குத் தண்டனை விதிக்க வகை செய்யும் குஜராத் மத சுதந்திர திருத்தச் சட்டத்தை குஜராத் அரசு கடந்த ஜூன் மாதம் 15-ஆம் தேதி அமல்படுத்தியது. இதுபோன்ற சட்டங்களை பாஜக ஆளும் மத்திய பிரதேசம், உத்தர பிரதேசம் ஆகிய மாநிலங்களும் அமல்படுத்தின.

இந்தச் சட்டத்தில் உள்ள சில பிரிவுகள், அரசமைப்புச் சட்டத்துக்கு எதிராக இருப்பதாகக் கூறி ஜாமியத் உலேமா-ஏ-ஹிந்த் அமைப்பின் குஜராத் கிளை, குஜராத் உயர்நீதிமன்றத்தில் கடந்த மாதம் ஒரு மனுவை தாக்கல் செய்தது. இந்த மனு, தலைமை நீதிபதி விக்ரம்நாத், நீதிபதி பிரேன் வைஷ்ணவ் ஆகியோர் அடங்கி அமர்வு முன் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது தலைமை நீதிபதி விக்ரம் நாத் கூறியதாவது:

வெவ்வேறு ஜாதி, மதத்தைச் சேர்ந்த ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் கட்டாயப்படுத்தாமல், பணத்துக்காக மோசடி செய்யாமல் திருமணம் செய்துகொண்டால் அதைக் குற்றமாகக் கருத முடியாது. சட்ட விரோத மதமாற்றத்துக்காக அந்த திருமணம் நடைபெற்றது என்றும் கூற முடியாது.

எனவே, வெவ்வேறு ஜாதி, மதத்தைச் சேர்ந்தவர்கள் திருமணம் செய்தால், அவர்களுக்குத் தண்டனை விதிக்க வகை செய்யும் குஜராத் மதமாற்றத் தடைச் சட்டத்தில் உள்ள 3, 4, 4ஏ முதல் 4சி வரை, 5, 6, 6ஏ ஆகிய பிரிவுகள் தொடர்பாக விரிவாக விசாரணை நடத்த வேண்டியுள்ளது.

அதுவரை அந்த சட்டப் பிரிவுகளை அமல்படுத்துவதற்குத் தடை விதிக்கப்படுகிறது. ஜாதி மறுப்புத் திருமணம் செய்பவர்கள், தேவையின்றி துன்புறுத்தப்படுவதைத் தடுக்கவே இடைக்காலத் தடை விதிக்கப்படுகிறது என்று தலைமை நீதிபதி கூறினார்.

உயர்நீதிமன்றத்தின் இந்த உத்தரவு, குஜராத் அரசுக்குபின்னடைவாகக்கருதப்படுகிறது. இதுதொடர்பாகமாநில அரசுகருத்து எதுவும் தெரிவிக்கவில்லை. அதேசமயம் சட்ட நிபுணர்களும் சமூக ஆர்வலர்களும் இந்த உத்தரவை வரவேற்றுள்ளனர்.

# இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு சிக்கல் நிறைந்ததாக மாறி வருகிறது

**புது தில்லி, ஆக. 19:** இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு, சிக்கல் நிறைந்ததாக மாறி வருவதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

பாதுகாப்புத் துறையில் தொழில்நுட்ப வளர்ச்சியை மேம்படுத்தும் 'ஐடெக்ஸ்' அமைப்பின் சார்பில் பாதுகாப்புத் துறை தொழில்முனைவுத் திட்டம் ஒன்றைத் தொடக்கி வைத்து அவர் பேசியது:

இன்று ஒட்டுமொத்த உலகிலும் பாதுகாப்புச் சூழல் மிக வேகமாக மாறி வருகிறது. இதன் காரணமாக நமது தேசியப் பாதுகாப்புக்கான சவால்கள் அதிகரித்து வருவதுடன் சிக்கல் நிறைந்தவையாகவும் மாறி வருகின்றன. உலக அளவில் அரசியல் சூழலில் தொடர்ந்து மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

வேகமாக மாறி வரும் பாதுகாப்பு சவால்களைக் கருத்தில் கொண்டு முப்படைகளின் தேவைகளை சமாளிக்கும் வகையில் வலுவான, திறன் வாய்ந்த, தன்னிறைவடைந்த பாதுகாப்புத் தொழில்துறையைப் பெறுவதில் இந்தியா கவனம் செலுத்த வேண்டும்.

ராணுவத் தளவாட உற்பத்தித் துறையை வலுப்படுத்துவதில் தனியார் துறை பங்களிக்க வேண்டும். இதற்கு அரசு முழு ஒத்துழைப்பையும் வழங்கும்.

நமது நாட்டில் திறமைகளுக்கு குறைபாடு இல்லை. திறமைகளுக்கான தேவைகளுக்கும் பஞ்சம் இல்லை. இவற்றை இணைக்கும் பொதுவான அமைப்பு இல்லாத பட்சத்தில் இவற்றை இணைக்க முடியாமல் போகலாம். ஆனால் ஐடெக்ஸ் அமைப்பு இந்த இடைவெளியை நிரப்புவதில் பெருமளவில் வெற்றி கண்டுள்ளது என்றார்.

ஆப்கானிஸ்தானில் அரசு கவிழ்ந்து, தலிபான் பயங்கரவாதிகள் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள நிலையில் அது தொடர்பாக இந்தியாவிலும் மற்ற நாடுகளிலும் கவலை தோன்றியுள்ள சூழலில் ராஜ்நாத் சிங்கின் மேற்கண்ட கருத்து வெளியாகியுள்ளது.



கடந்த சில ஆண்டுகளில் ராணுவத் தளவாட உற்பத்தி மையமாக இந்தியாவை மாற்றுவதற்கு மத்திய அரசு பல்வேறு சீர்திருத்தங்களை அமல்படுத்தியுள்ளது.

போக்குவரத்து விமானங்கள், இலகு ரக ஹெலிகாப்டர்கள், பாரம்பரிய நீர்மூழ்கிக் கப்பல்கள் உள்ளிட்ட 101 ஆயுதங்களையும் தளவாடங்களையும் இறக்குமதி செய்வதை இந்தியா நிறுத்தி விடும் என்று ராஜ்நாத் சிங் கடந்த ஆகஸ்ட் மாதம் தெரிவித்தார்.

இதற்கு அடுத்தபடியாக அடுத்த தலைமுறை போர்க் கப்பல்கள் உள்ளிட்ட மேலும் 108 ராணுவத் தளவாடங்களை இறக்குமதி செய்வதை நிறுத்துவதற்கான பட்டியல் அண்மையில் வெளியிடப்பட்டது.

கடந்த ஆண்டு மே மாதத்தில், பாதுகாப்புத் துறையில் அன்னிய நேரடி முதலீட்டை 49 சதவீதத்தில் இருந்து 74 சதவீதமாக அதிகரிப்பதாக அரசு அறிவித்தது. இறக்குமதி செய்யப்படும் ராணுவத் தளவாடங்களை சார்ந்திருப்பதைக் குறைப்பதில் கவனம் செலுத்தவும் உள்நாட்டில் ராணுவத் தளவாடங்களை உற்பத்தி செய்வதற்கு ஆதரவளிக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

வரும் 2025-ஆம் ஆண்டுக்குள் ரூ.1.75 லட்சம் கோடி ராணுவத் தளவாட உற்பத்திக்கான விற்றுமுதலை எட்ட பாதுகாப்புத் துறை இலக்கு நிர்ணயித்துள்ளது. இதில் ரூ.35,000 கோடி ராணுவத் தளவாடங்களை ஏற்றுமதி செய்வதும் அடங்கும்.

## ஜாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு

# பிரதமரைச் சந்திக்கிறது பிகார் அனைத்துக் கட்சிக் குழு

**பாட்னா, ஆக. 19:** ஜாதிவாரியாக மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என்று கோரி பிகார் மாநிலத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சியினரும் கூட்டாக பிரதமர் நரேந்திர மோடியை ஆகஸ்ட் 23-ஆம் தேதி சந்தித்து வலியுறுத்தவுள்ளனர். இதனை அந்த மாநில முதல்வரும், ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் தலைவருமான நிதீஷ் குமார் பாட்னாவில் வியாழக்கிழமை தெரிவித்தார்.

நாட்டில் ஜாதிவாரியாக மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என்று நிதீஷ் குமார் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். இது தொடர்பாக கடந்த 3-ஆம் தேதி பிரதமருக்கு அவர் கடிதம் எழுதினார். அப்போது இந்த விஷயம் தொடர்பாக நேரில் சந்தித்து விவாதிக்க நேரம் ஒதுக்க வேண்டும் என்று அவர் கோரிக்கையும் விடுத்தார்.

பிகாரில் ராஷ்ட்ரீய ஜனதா தளம் தலைவர் தேஜஸ்வி யாதவ் தலைமையில் 5 எதிர்க்கட்சிகள் அடங்கிய மகா கூட்டணி தலைவர்களும் இது தொடர்பாக நிதீஷ் குமாரை அண்மையில் நேரில் சந்தித்துப் பேசினர். அப்போது, பிகாரைச் சேர்ந்த அனைத்துக் கட்சியினரும் இணைந்து இந்த விஷயத்தை பிரதமரிடம் நேரில் எடுத்துச் செல்ல முடிவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

எனினும், 'தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின மக்களின் கணக்கெடுப்பு தவிர இதர ஜாதி மக்களின்கணக்கெடுப்பைநடத்த வேண்டாம்' என்று மத்திய அரசு கொள்கைரீதியாக முடிவு எடுத்துள்ளதாக கடந்த மாதம் 20-ஆம் தேதி உள்துறை இணையமைச்சர் நித்யானந்த் ராய் மக்களவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில் தெரிவித்தார்.

இந்நிலையில், இது தொடர்பாக பாட்னாவில் செய்தியாளர்களிடம் நிதீஷ் குமார் கூறியதாவது:

ஜாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு விஷயத்தில் பிகாரில் கூட்டணியில் உள்ள ஐக்கிய ஜனதா தளத்துக்கும், பாஜகவுக்கும் வெவ்வேறு கருத்துகள் உள்ளன. எனினும், இது கூட்டணியை எவ்விதத்திலும் பாதிக்காது. இது தொடர்பாக பிரதமர் மோடியை நேரில் சந்தித்து விவாதிக்க நேரம் கேட்டோம். அதன்படி எங்களுக்கு வரும் திங்கள்கிழமை காலை 11 மணிக்கு பிரதமர் நேரம் ஒதுக்கியுள்ளார். பிரதமரை நேரில் சந்திக்கச் செல்லும் பிகார் மாநில அனைத்துக் கட்சிக் குழுவில் ராஷ்ட்ரீய ஜனதா தளம் தலைவர் தேஜஸ்வி யாதவும் இடம் பெறுவார்.

அனைத்து ஜாதியையும் மக்கள்தொகை வாரியாக கணக்கெடுத்தால் சமூகத்தில் பதற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது என்ற அச்சம் மத்திய அரசுக்கு இருக்கலாம். ஆனால், இந்தக் கணக்கெடுப்பு சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பயனளிக்கும். அரசு நிர்வாகத்தை மேம்படுத்தவும் உதவும். ஜாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு கோரி பிகார் பேரவையில் இருமுறை ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம். இந்தக் கணக்கெடுப்பை நடத்த அனைத்து மதத்தினரும், ஜாதியினரும் ஒப்புக் கொண்டனர். எனவே, எந்தப் பிரச்னையும் ஏற்படாது என்றார்.

1931-ஆம் ஆண்டுக்குப் பிறகு நாட்டில் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் தவிர பிற ஜாதியினர் எண்ணிக்கை தொடர்பாகக் கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை.

# குடியரசுத் தலைவருக்கு கண்புரை அறுவை சிகிச்சை

**புது தில்லி, ஆக. 19:** குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்துக்கு வியாழக்கிழமை கண்புரை அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இதுகுறித்து குடியரசுத் தலைவர் மாளிகை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்துக்கு தில்லியில் உள்ள ராணுவ ஆராய்ச்சி மருத்துவமனையில் வியாழக்கிழமை காலை கண்புரை அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடந்து முடிந்ததை அடுத்து, மருத்துவமனையில் இருந்து அவர் வீடு திரும்பினார் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மத்திய நிதியமைச்சருடன் ஃபிளிப்கார்ட் தலைமைச் செயல் அதிகாரி சந்திப்பு

**புது தில்லி, ஆக. 19:** மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை ஃபிளிப்கார்ட் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி கல்யாண் கிருஷ்ணமூர்த்தி வியாழக்கிழமை சந்தித்துப் பேசினார்.

நிர்மலா சீதாராமனை கிருஷ்ணமூர்த்தி சந்தித்துப் பேசிய புகைப்படத்தை சுட்டுரையில் வெளியிட்டுள்ள நிதியமைச்சக அலுவலகம் அதுகுறித்த எந்த விவரங்களையும் வெளிப்படையாக அறிவிக்கவில்லை.

இதுகுறித்து நிதியமைச்சக வட்டாரங்கள் கூறியதாவது:

இந்த சந்திப்பின்போது ஃபிளிப்கார்ட் நிறுவனம் விற்பனையாளர்களுடன் கொண்டுள்ள உறவுகள் குறித்து நிதியமைச்சருக்கு தெரிவிக்கப்பட்டது. குறிப்பாக, குறு,சிறு, நடுத்தர நிறுவனங்களுடன் (எம்எஸ்எம்இ) ஃபிளிப்கார்ட் நிறுவனத்துக்கு உள்ள வர்த்தகத் தொடர்புகள் குறித்து விவாதிக்கப்பட்டன.

கைவினை கலைஞர்கள் மற்றும் நெசவாளர்கள் டிஜிட்டல் தளத்தின் மூலமாக அதிகளவிலான நுகர்வோரை எளிதாக சென்றடைய உதவிடும் வகையில் ஃபிளிப்கார்ட் எடுத்த நடவடிக்கைகள் குறித்து நிதியமைச்சரிடம் கல்யாண் கிருஷ்ணமூர்த்தி விளக்கியதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையே ஆர்சிலர் மிட்டல் நிறுவனத்தின் நிர்வாக தலைவர் லக்ஷ்மி என்.மிட்டலும் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை வியாழக்கிழமை சந்தித்துப் பேசியதாக நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ள சுட்டுரை செய்தியில் தெரிவித்துள்ளது. எனினும் அது தொடர்பான விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

## ‘புலிக்கும்’ தடுப்பூசி...!



கேரள மாநிலம் திருச்சூரில் வியாழக்கிழமை நடைபெற்ற கரோனா தடுப்பூசி முகாமில் தடுப்பூசி செலுத்திக் கொண்ட புலி வேடமணிந்த கலைஞர். கேரளத்தில் ஓணம் பண்டிகையின்போது நாட்டுப்புறக் கலையான ‘புலிக்களி’ நடனம் இடம்பெறும்.

## இந்தியாவில் கரோனா பாதிப்பு

வியாழக்கிழமை காலை 8 மணி நிலவரம்

24 மணி நேரத்தில் புதிய பாதிப்பு
**36,401**

மொத்த பாதிப்பு எண்ணிக்கை
**3,23,22,258**

மொத்த உயிரிழப்பு
**4,33,049**

கடந்த 24 மணி நேரத்தில் பதிவு செய்யப்பட்ட உயிரிழப்பு
**530**

அதிக உயிரிழப்புகள்

| | |
|---|---|
| கேரளம் | 179 |
| மகாராஷ்டிரம் | 158 |
| ஒடிஸா | 65 |

தேசிய அளவில் இறப்பு விகிதம்
**1.34%**



இதுவரை குணமடைந்தோர்
**3,15,25,080**

சிகிச்சையில் இருப்போர்
**3,64,129**

ஆகஸ்ட் 18-ஆம் தேதி வரை கரோனா பரிசோதனைகள்
**50,03,00,840**

# டீசல் விலை 2-ஆவது நாளாகக் குறைப்பு; பெட்ரோல் விலையில் மாற்றமில்லை

**புது தில்லி, ஆக.19:** நாடு முழுவதும் டீசல் விலை தொடர்ந்து இரண்டாவது நாளாக வியாழக்கிழமை லிட்டருக்கு 20 காசுகள் குறைக்கப்பட்டது. பெட்ரோல் விலையில் மாற்றமில்லை.

தில்லியில் ரூ.89.87-ஆக இருந்த டீசல் விலை புதன்கிழமை ரூ.20 காசுகள் குறைக்கப்பட்டு ரூ.89.67-க்கு விற்பனை செய்யப்பட்டது. வியாழக்கிழமை மேலும் 20 காசுகள் குறைந்து ரூ.89.47-க்கு விற்பனை ஆனது. சென்னையில் ரூ.94.39-க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு லிட்டர் டீசல், புதன்கிழமை 20 காசுகள் குறைக்கப்பட்டு ரூ.94.20-க்கு விற்பனை ஆனது. வியாழக்கிழமை மேலும் 18 காசுகள் குறைக்கப்பட்டு ரூ.94.02-க்கு விற்பனை ஆனது. பெட்ரோல் விலை தொடர்ந்து 6-ஆவது நாளாக ரூ.99.47-ஆக உள்ளது.

கடந்த மே மாதத்துக்குப் பிறகு சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை குறைந்ததை அடுத்து, இந்தியாவின் டீசல் விலை குறைக்கப்பட்டுள்ளது. நாட்டின் எரிபொருள் தேவையில் 85 சதவீதம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்படுகிறது. அதன் விளைவாக, சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலையில் மாற்றம் ஏற்படும்போது, இந்தியாவில் எரிபொருள் விலையில் அதன் தாக்கம் இருக்கும்.

தற்போது டீசல் விலை, 33 நாள்களுக்கு முன்பிருந்த விலையை எட்டியுள்ளது. இதற்கு முன்பு கடந்த ஜூலை 17-ஆம் தேதி பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்பட்டன. அதற்கு முன்பு, மே மாதம் 4-ஆம் தேதியில் இருந்து ஜூலை 17-ஆம் தேதிக்குள் பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.11.44 வரை உயர்த்தப்பட்டது. இதே போல் டீசல் விலை லிட்டருக்கு ரூ.9.14 வரை உயர்த்தப்பட்டது. இந்த விலை உயர்வால், நாட்டின் பெரும்பாலான மாநிலங்களில் ஒரு லிட்டர் பெட்ரோல் விலை ரூ.100-ஐத் தாண்டியது. 3 மாநிலங்களில் டீசல் விலை ரூ.100-ஐ தொட்டது குறிப்பிடத்தக்கது.







**Chola**

**சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்**

பெருநிறுவன அலுவலகம்: முதல் தளம், டேர் ஹவுஸ், எண்.2, என்.எஸ்.சி. போஸ் ரோடு, சென்னை-600 001.
கிளை அலுவலகம்: 3வது தளம், ஆதர்ஷ் டவர்ஸ், 719, பாரதி சாலை, அண்ணா சாலை அருகில், சென்னை-600002.

**2002 ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம், பிரிவு 13(2)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு**

[illegible]

| கடன்தாரர் / இணை கடன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி | கடன் தொகை | கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவை தொகை | கடனுக்கு ஈடான சொத்து விவரம் |
|---|---|---|---|
| கடன் கணக்கு எண் : X0HECHE00001577001 கடன்தாரர் & இணைகடன்தாரர்கள்: 1.செந்தில்நாதன் L 2. உஷா S N [illegible] | ரூ. 82,00,000/- | 19.07.2021 & 16.07.2021 அன்று வரை உள்ள ரூ. 79,35,176.01 மேலும் பின் வட்டி உட்பட | [illegible] |
| கடன் கணக்கு எண் :X0HECHE00002066719 கடன்தாரர் & இணைகடன்தாரர்கள் : [illegible] | ரூ. 70,00,000/- | 19.07.2021 & 16.07.2021 அன்று வரை உள்ள ரூ. 66,64,793.48 மேலும் பின் வட்டி உட்பட | [illegible] |
| கடன் கணக்கு எண் : X0HECHE00003266801 கடன்தாரர் & இணைகடன்தாரர்கள்: [illegible] | ரூ. 22,00,000/- | 19.07.2021 & 16.07.2021 அன்று வரை உள்ள ரூ. 23,92,261.93 மேலும் பின் வட்டி உட்பட | [illegible] |
| கடன் கணக்கு எண் : X0HECHE00001372888 கடன்தாரர் & இணைகடன்தாரர்கள்: [illegible] | ரூ. 23,00,000/- | 19.07.2021 & 16.07.2021 அன்று வரை உள்ள ரூ. 20,94,214.96 மேலும் பின் வட்டி உட்பட | [illegible] |
| கடன் கணக்கு எண் : X0HECHE00001320225 கடன்தாரர் & இணைகடன்தாரர்கள்: [illegible] | ரூ. 31,00,000/- | 19.07.2021 & 16.07.2021 அன்று வரை உள்ள ரூ. 24,11,341.83 மேலும் பின் வட்டி உட்பட | [illegible] |

தேதி : 19.08.2021
இடம் : சென்னை
சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிட். அதிகாரப்பூர்வ அதிகாரி



**BEFORE THE DEBTS RECOVERY TRIBUNAL -II AT CHENNAI**
Desa Tower, 4th Floor, No.77A-A, Anna Salai, Chennai-600002
DRC No. 446/2019 in O.A. No. 389 of 2017

In The matter of
Corporation Bank,
George Town Branch,
Assistant General Manager,
No.101, Armenian Street,
Chennai-600 001
...Certificate Holder
Vs
Mrs.S.Sathya Ruban and 3 others
...Certificate Debtors

To
1. Mrs.S.Sathya Ruban S/o S.Srinivasan, No.32/6, A.P.Road, First Lane, Choolai, Chennai-600 112
2. Mr.S.Srinivasan, S/o.M.Singaravelu, No.32/6, A.P.Road, First Lane, Choolai, Chennai-600 112. Also at Mr.S.Srinivasan, S/o.M.Singaravelu, No.2, Kuluthan Kulam East, Thiruvarur
3. Mrs.Jaylakshmi Srinivasan, W/o. S.Srinivasan, No.32/6 A.P.Road, First Lane, Choolai, Chennai-600 112. Also at Mrs.Jaylakshmi Srinivasan, No.2, Kuluthan Kulam East, Thiruvarur
4. S.Rathinavel S/o. Sabapathy, No.72, V.V. koil Street, Kosapet, Chennai-600 012
...Certificate Debtors

**DEMAND NOTICE**

In terms of the Recovery Certificate dated 13.11.2019 (Copy enclosed together with schedule) issued in Original Application No.389 of 2017 by the Hon'ble Presiding Officer, Debts Recovery Tribunal No.2, Chennai an amount of Rs.22,70,470.21 (Rupees Twenty Two Lakhs, Seventy thousand Four hundred and Seventy and paise Twenty One only) with interest @ 6% p.a. (simple) in respect of Education loan and @ 9% p.a. (simple) in respect of Over Draft facility along with cost expenses from the date of filing of OA i.e. 18.07.2017 till the date of realization, is due against you, jointly and severally.
2. You are hereby called up on to deposit the above sum, within 15 days from the date of receipt of notice, failing which recovery shall be made as per rules.
3. You are further put on notice that in terms of Rule 16 of the Second Schedule to the Income Tax Act, 1961 read with Section 29 of the Recovery of Debts and Bankruptcy Act, 1993, you/your representatives in interest shall not be competent to mortgage, charge lease or otherwise deal with any property belonging to you, except with the permission of the Recovery Officer.
4. You are also directed to appear before this Forum on **23.09.2021 (Thursday) at 11.30 am** and report compliance of payment.
5. **This demand notice is now published in this news paper since the demand notice dated 04.06.2019 sent to you (Certificate Debtors 1 & 4) have been unserved.**
Given under my hand and seal of this Tribunal at Chennai this 06th day of August 2021.
**SOFIN ROSE**
Recovery Officer


# பணத்தைத் தராத போட்டித் தேர்வு பயிற்சி மையம்: இழப்பீடு வழங்க நுகர்வோர் தீர்ப்பாயம் உத்தரவு

**தாணே, ஆக. 19:** மகாராஷ்ரத்தில் மாணவர் ஒருவரின் பெற்றோரிடம் வாங்கிய பணத்தை முறையாகத் திரும்பத் தர மறுத்த போட்டித் தேர்வு பயிற்சி மையம் இழப்பீடாக ரூ.10,000 வழங்க வேண்டும் எனவும், ஏற்கெனவே வாங்கிய ரூ.40,000-ஐ வட்டியுடன் திரும்ப வழங்க தாணே மாவட்ட நுகர்வோர் தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக மாணவரின் பெற்றோர் அளித்த புகாரில் கூறியிருந்ததாவது: கடந்த 2017-ஆம் ஆண்டு கல்யாணில் உள்ள போட்டித் தேர்வு பயிற்சி மையத்தில் எங்கள் மகனைச் சேர்த்தோம். அப்போது, முதல்கட்டமாக ரூ.40,000 காசோலையாக அளித்தோம். அங்கு சேர்ந்த பிறகு வேறு பாடப் பிரிவுக்கு மாற எங்கள் மகன் விரும்பினார். ஆனால், அதனை ஏற்றுக் கொள்ள அந்தப் பயிற்சி மையம் மறுத்தது. இதையடுத்து, அப்பயிற்சி மையத்தில் இருந்து சில நாள்களிலேயே எனது மகன் விலகிவிட்டார். அவர் அங்கு பயிற்சி பெறவில்லை என்பதால் முதல்கட்டமாக செலுத்திய கட்டணம் ரூ.40,000-ஐ திரும்பத் தருமாறு கோரினோம். ஆனால், அந்த நிறுவனம் பணத்தைத் திரும்பத் தரவில்லை. உரிய பதிலும் அளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை விசாரித்த மாவட்ட நுகர்வோர் தீர்ப்பாயம், ‘ஒப்புக்கொள்ளப்பட்டபடி சேவை அளிக்காத அந்தப் போட்டித் தேர்வு பயிற்சி மையம் பணத்தைத் திருப்பி அளித்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு செய்யாமல் சில ஆண்டுகளைக்கடத்தியுள்ளது. எனவே, 2017 ஜூலை 18-ஆம் தேதியில் இருந்து ரூ. 40,000-க்கு 10 சதவீத வட்டியும் சேர்த்துத் தர வேண்டும். மேலும், அந்த மாணவரின் பெற்றோருக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியதற்காக ரூ.3,000, அவர்களை அலைக்கழித்ததற்காக ரூ.7,000 இழப்பீடாக அந்தப் பயிற்சி மையம் தர வேண்டும்’ என்று உத்தரவிட்டது.

https://t.me/Tamil_epaper2

# பிஜு ஜனதா தளம் எம்.பி., மனைவி, மகன் மீது வரதட்சிணைக் கொடுமை வழக்கு

**போபால், ஆக. 19:** ஒடிஸாவை சேர்ந்த பிஜு ஜனதா தளம் எம்.பி. பருத்ருஹரி மஹதாப், அவரின் மனைவி, மகன் மீது மத்திய பிரதேச மாநில காவல் துறையினர் வரதட்சிணைக் கொடுமை வழக்குப் பதிவு செய்துள்ளனர். எம்.பி.யின் மருமகள் அளித்த புகாரின் அடிப்படையில் போலீஸார் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

பருத்ரஹரி மஹதாப், ஒடிஸாவின் கட்டக் மக்களவைத் தொகுதி எம்.பி.யாக உள்ளார். அவருடைய மகனுக்கும் மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணுக்கும் கடந்த 2016-ஆம் ஆண்டு டிசம்பரில் திருமணம் நடைபெற்றது. இந்நிலையில், மத்திய பிரதேசம் வந்த அந்தப் பெண் போபாலில் உள்ள மகளிர் காவல் நிலையத்தில் தனது கணவர், மாமனார், மாமியார் மீது வரதட்சிணைக் கொடுமை புகார் அளித்தார். அதில், திருமணத்தின்போதே எனது பெற்றோர் அதிக அளவில் வரதட்சிணை கொடுத்துவிட்டனர்.

ஆனால், இப்போது பெற்றோரிடம் இருந்து மேலும் பணத்தைப் பெற்று வருமாறு கணவரும் அவரது பெற்றோரும் துன்புறுத்துகின்றனர் என்று கூறியுள்ளார். இதையடுத்து, வரதட்சிணைக் கொடுமைத் தடுப்புச் சட்டம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் பருத்ருஹரி எம்.பி., அவருடைய மனைவி, மகன் மீது காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

# மக்களின் தலைமேல் தொங்கும் கத்தி கரோனா

## உத்தவ் தாக்கரே எச்சரிக்கை

**பால்கர், ஆக.19:** கரோனா நோய்த்தொற்று பொது மக்களின் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கும் கத்தி போல் இன்னும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருவதாக மகாராஷ்டிர முதல்வர் உத்தவ் தாக்கரே எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து அந்த மாநிலத்தின் பால்கர் மாவட்ட தலைமையக வளாகத்தை காணொலி மூலம் வியாழக்கிழமை திறந்துவைத்து அவர் பேசியதாவது: கரோனா என்பது பொதுமக்களின் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கும் கத்திய போல் அவர்களது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தி வருகிறது. அந்த நோய்த்தொற்று அபாயத்திலிருந்து அனைவரும் விடுபடுவதற்கு இன்னும் நீண்ட காலம் ஆகும். இந்தச் சூழலில், கரோனாவால் மேலும் மரணங்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்காக புதிய ஆக்சிஜன் ஆலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், கரோனா மருத்துவமனைகளும் கூடுதலாக அமைக்கப்பட்டுள்ளன என்றார் அவர்.

பால்கர் மாவட்ட தலைமையகம் மட்டுமன்றி, விரார் மற்றும் வசாய் பகுதிகளில் பொது சுகாதார மையங்களையும் காணொலி மூலம் உத்தவ் தாக்கரே திறந்துவைத்தார்.


**ADITYA BIRLA CAPITAL**
PROTECTING INVESTING FINANCE ADVISING

**ஆதித்ய பிர்லா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்.**

பதிவு அலுவலகம்: இந்தியன் ரேயான் காம்பௌண்டு, வேரவல், குஜராத்-362266.
கிளை அலுவலகம்: சாய் சதன், தரைத்தளம், TS 125 (வடக்குப் பகுதி), சிட்கோ தொழிற்பேட்டை, ஈக்காடுதாங்கல், சென்னை-600032.

**கோரிக்கை அறிவிப்பு - 13(2)-இன் கீழ்**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரரான நீங்கள் அட்டவணையில் உள்ள சொத்தை அடமானம் வைத்துக் கடன் பெற்றுள்ளீர்கள். அத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிறர் கடன் ஒப்பந்தத்துக்குக் கடன்தாரராகவும் / கூட்டுக்-கடன்தாரராகவும் ஜாமீன்தாரராகவும் இருந்துள்ளீர்கள். நீங்கள் செய்த தவறுகளின் காரணமாகக் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (சுருக்கமாக SARFAESI சட்டம்) கீழ் உங்கள் கடன் கணக்கு செயல்படாச் சொத்தாக வகைப்படுத்தப்பட்டது. ஆதித்ய பிர்லா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெடான நாங்கள் இது குறித்து SARFAESI சட்டப் பிரிவு 13(13) அதனுடன் பிரிவு 13(2) ஆகியவற்றின் கீழ் நீங்கள் கொடுத்திருந்த முகவரிக்குக் கோரிக்கை அறிவிப்பு அனுப்பியிருந்தோம். உங்களுக்கு வழங்க உத்தரவாதமளிக்கப்பட்ட பல்வேறு கடன்களைத் திருப்பிச் செலுத்த நீங்கள் தவறி விட்டீர்கள் என்பது மேற்படி அறிவிப்பின் உள்ளடக்கம். அதனால் SARFAESI சட்டப் பிரிவு 13(2) அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002-இன் கீழான விதி 3(1) ஆகியவற்றின்படி அந்த அறிவிப்பை உங்களுக்குச் சார்பு செய்யும் பொருட்டு இந்த வெளியீடு மேற்கொள்ளப்படுகிறது.

| கணக்கு எண் / கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) பெயர் மற்றும் முகவரி | அமலாக்கம் செய்யப்படவுள்ள கடனீட்டுச் சொத்தின் விவரங்கள் | கோரிக்கை அறிவிப்பு நாள் | கோரிக்கை அறிவிப்பின்படி நிலுவைத் தொகை |
|---|---|---|---|
| வகை – சிறு-குறு நிறுவனக் (SME) கடன் கடன் கணக்கு எண்: LNCHN0HL-03180005053, LNCHN0HL-03180005054 & LNCHN0HL-06190052117 01. திரு.K.ராஜசேகர், பழைய எண். 13, புதிய எண். 22, 6ஆவது தெரு, ராஜாஜி நகர், வில்லிவாக்கம், சென்னை-600049. 02. திருமதி R.பிரியதர்ஷினி, பழைய எண். 13, புதிய எண். 22, 6ஆவது தெரு, ராஜாஜி நகர், வில்லிவாக்கம், சென்னை-600049. 03. திரு.K.ராஜசேகர், கவுண்ட்டர் மேனேஜர், அரவிந்த் ஏர் டிராவல்ஸ், பழைய எண். 22, புதிய எண். 43, B2 ரியல் என்கிளேவ், ஜோசியர் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-600034. | இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய சொத்து. அடுக்குமாடிக் குடியிருப்பு எண் 2404, பயன்பாட்டுப் பரப்பு 411 சதுரடி (மேல்கட்டுமானப் பரப்பு 615 சதுரடி), நான்காவது தளம், பிளாக் எண் 2. இது “காம்பாக்ட் ஹோம்ஸ் - சங்கரா” எனும் அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகத்தில் அடங்கியது. இதன் பிரிபடாப் பங்கு நிலம் 316 சதுரடி மொத்தப் பரப்பளவான 85,577.98 சதுரடியில் அடங்கியுள்ளது. சர்வே எண்கள் 39/1 பாகம், 39/2 பாகம், 40 பாகம், 401/1A11 பாகம், 401/1A12, 401/1A13, 401/1A14 பாகம், 401/1A18 பாகம், 401/1A18B, 401/1A19A & 401/1A19B, கொளத்தூர் கிராமம், திருப்போரூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம். இது செங்கல்பட்டு பதிவு மாவட்டத்துக்கும் மற்றும் திருப்போரூர் சார்பதிவு மாவட்டத்துக்கும் உட்பட்டது. | 26.07.2021 | 17.07.2021 வரையில் நிலுவையிலுள்ள அசல், பாக்கிகள் (சேர்ந்துள்ள தாமதக் கட்டணங்கள் உட்பட) வகையில் ரூ.24,16,068.11 (ரூபாய் இருபத்து நான்கு இலட்சத்துப் பதினாறாயிரத்து அறுபத்தெட்டு மற்றும் பைசா பதினொன்று மட்டும்) |

ஆகவே இந்த அறிவிப்பு வெளியாகும் நாளிலிருந்து 60 நாட்களுக்குள் மேற்கண்ட தொகையை வட்டி மற்றும் செலவினங்களுடன் ஆதித்ய பிர்லா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிட்டெட் நிறுவனத்துக்குச் செலுத்துமாறு நீங்கள் இதன் மூலம் அழைக்கப்படுகிறீர்கள். தவறினால் மேற்கூறிய சட்டத்தின் கீழான உரிமைகளைப் பயன்படுத்தி அனைத்துக் கடனீட்டுச் சொத்துக்கள் அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றின் மீது ஆதித்ய பிர்லா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிட்டெட் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். கடன்தாரர்கள், அடமானதாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள் ஆகியோரின் கடனீட்டுச் சொத்துக்களை சுவாதீனம் செய்தல் முதலானவை இதில் அடங்கும். மேற்கூறிய சட்டத்தின் கீழான ஆதித்ய பிர்லா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் அதிகாரங்கள் பின்வருமாறு: (1) கடனீட்டுச் சொத்துக்களிலிருந்து உரிய தொகையை மீட்கும் பொருட்டு கடன்தாரர்களின் / ஜாமீன்தாரர்களின் கடனீட்டுச் சொத்துக்களைக் குத்தகை, ஒதுக்கீடு அல்லது விற்பனை மூலம் பெயர் மாற்றம் செய்வதற்கான உரிமையுடன் சேர்த்து சுவாதீனம் செய்தல் (2) கடனீட்டுச் சொத்துக்களிலிருந்து உரிய தொகையை மீட்கும் பொருட்டு அவற்றின் நிர்வாகத்தைக் குத்தகை, ஒதுக்கீடு அல்லது விற்பனை மூலம் பெயர் மாற்றம் செய்வதற்கான உரிமையுடன் சேர்த்துக் கையகப்படுத்துதல். மேலும் ஆதித்ய பிர்லா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிட்டெட் இவ்வாறு கடனீட்டுச் சொத்துக்களைப் பெயர் மாற்றம் செய்தால் அது நீங்கள் அந்தப் பெயர் மாற்றத்தை மேற்கொண்டதற்கு இணையானதும் கடனீட்டுச் சொத்தினுள் அடங்கிய மற்றும் அதனுடனான அனைத்து உரிமைகளையும் சேர்த்துப் பெயர் மாற்றுவதுமாகும்.

மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(13)-இன்படி, மேலே குறிப்பிடப்பட்டுள்ளவையும் ஆதித்ய பிர்லா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிட்டெட் நிறுவனத்திடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளவையுமான கடனீட்டுச் சொத்துக்களில் எதையும் ஆதித்ய பிர்லா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் முன் ஒப்புதல் இன்றி விற்பனை, குத்தகை அல்லது இதர எவ்வழியிலும் (வழக்கமான வணிக நடைமுறைகள் தவிர்த்து) பெயர் மாற்றம் செய்ய நீங்கள் இதன் மூலம் தடை செய்யப்படுகிறீர்கள்.

இடம்: சென்னை
நாள்: 20.08.2021

அதிகாரப்பூர்வ அலுவலரால் கையொப்பமிடப்பட்டது,
ஆதித்ய பிர்லா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிட்டெட்


# இத்தாலி வீரர்களால் மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட விவகாரம்: இழப்பீட்டுத் தொகையை விநியோகிக்க உச்சநீதிமன்றம் தடை

**புது தில்லி, ஆக. 19:** இத்தாலி கடற்படை வீரர்களால் கேரள மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட விவகாரத்தில் படகு உரிமையாளருக்கான இழப்பீட்டுத் தொகையை விநியோகிப்பதற்கு உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

கேரள கடற்கரைப் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இரு மீனவர்களைக் கடந்த 2012-ஆம் ஆண்டு இத்தாலி கடற்படை வீரர்கள் சுட்டுக் கொன்றனர். மீனவர்களைக் கடல் கொள்ளையர்கள் என நினைத்து தவறுதலாகச் சுட்டதாக விசாரணையில் அவர்கள் தெரிவித்தனர்.

அதையடுத்து கைது செய்யப்பட்ட அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. எனினும், இந்த விவகாரத்தை சர்வதேச நீதிமன்றம் விசாரித்தது. அதில், உயிரிழந்த மீனவர்களுக்கு ரூ.10 கோடி இழப்பீடு வழங்கத் தயாராக உள்ளதாகவும், கடற்படை வீரர்கள் மீதான விசாரணையைத் தாங்களே மேற்கொள்வதாகவும் இத்தாலி அரசு உறுதியளித்தது.

அதை மத்திய அரசு ஏற்றுக் கொண்டது. இழப்பீட்டுத் தொகையை முறையாகப் பெற்றுத் தரக் கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. அதை விசாரித்த உச்சநீதிமன்றம், மொத்த இழப்பீட்டுத் தொகையில், உயிரிழந்த மீனவர்களின் வாரிசுகளுக்கு தலா ரூ.4 கோடியும், அவர்கள் பயணித்த படகின் உரிமையாளருக்கு ரூ.2 கோடியும் வழங்க உத்தரவிட்டது.

இழப்பீட்டுத் தொகையை சம்பந்தப்பட்ட நபர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் பொறுப்பை கேரள உயர்நீதிமன்றத்திடம் உச்சநீதிமன்றம் ஒப்படைத்தது. அதையடுத்து, இத்தாலி வீரர்கள் மீது இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் கடந்த ஜூன் மாதம் முடித்து வைக்கப்பட்டன.

இந்நிலையில், இத்தாலி வீரர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்ததால், படகு உரிமையாளருக்கான இழப்பீட்டுத் தொகையில் தங்களுக்கும் ஒரு பங்கை வழங்க வேண்டுமென படகில் இருந்த மற்ற 10 மீனவர்கள் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். அந்த மனு மீதான விசாரணை, நீதிபதிகள் இந்திரா பானர்ஜி, வி.ராமசுப்ரமணியன் ஆகியோரைக் கொண்ட அமர்வு முன் வியாழக்கிழமை நடைபெற்றது.

அப்போது மத்திய அரசு சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, இந்த விவகாரத்தை கேரள உயர்நீதிமன்றத்துக்கு அனுப்பி வைக்கலாம் என்று வாதிட்டார். அதையடுத்து நீதிபதிகள் கூறுகையில், மனு மீது விளக்கமளிக்குமாறு படகு உரிமையாளருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டனர். மேலும், படகு உரிமையாளருக்கான இழப்பீட்டுத் தொகையை தற்போது விநியோகிக்க வேண்டாமென்று கேரள உயர்நீதிமன்றத்துக்கும் அவர்கள் உத்தரவிட்டனர்.

இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட இத்தாலி வீரர்கள் இருவரும் ஜாமீன் பெற்று தாயகம் திரும்பினர். அவ்வீரர்கள் மீது இத்தாலியில் வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது

## ஜம்மு-காஷ்மீரில் அப்னி கட்சித் தலைவர் பயங்கரவாதிகளால் சுட்டுக் கொலை

**ஸ்ரீநகர், ஆக. 19:** ஜம்மு-காஷ்மீரில் அப்னி கட்சியின் மூத்த தலைவர் குலாம் ஹசன் லோன், பயங்கரவாதிகளால் வியாழக்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டார். இதுகுறித்து அதிகாரி ஒருவர் கூறியதாவது:

ஜம்மு-காஷ்மீர் அப்னி கட்சியின் மண்டலத் தலைவராக இருந்தவர் குலாம் ஹசன் லோன். குல்காம் மாவட்டத்தின் தேவ்சர் நகரில் உள்ள அவருடைய வீட்டுக்கு வியாழக்கிழமை மாலை வந்த பயங்கரவாதிகள், அவரை துப்பாக்கியால் சுட்டனர். இதில் அவர் பலத்த காயமடைந்தார். சிகிச்சைக்காக உடனடியாக அவர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோதிலும் வழியிலேயே உயிரிழந்தார் என்று அந்த அதிகாரி கூறினார்.

இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வருவதாக காவல் துறையினர் தெரிவித்தனர்.

குலாம் ஹசன் லோன் படுகொலைக்கு தேசிய மாநாட்டுக் கட்சி, மக்கள் ஜனநாயகக் கட்சி, மக்கள் மாநாட்டுக் கட்சி உள்ளிட்ட அரசியல் கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இரு தினங்களுக்கு முன், அதே மாவட்டத்தில் பாஜக மூத்த தலைவர் ஜாவேத் அகமது தார், பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்துக்கு முன் அனந்த்நாக் மாவட்டத்தில் கடந்த 9-ஆம் தேதி, லஷ்கர்-ஏ-தொய்பா பயங்கரவாதிகள் 2 பேர், அங்குள்ள பாஜக ஊராட்சித் தலைவரின் வீட்டுக்குள் புகுந்து அவரையும் அவருடைய மனைவியையும் சுட்டுக் கொன்றனர்.

## வெறுப்புணர்வைத் தூண்டும் வகையில் வெளியிடப்பட்ட 3 கோடி முகநூல் பதிவுகள் நீக்கம்

**புது தில்லி, ஆக. 19:** கடந்த ஏப்ரல் முதல் ஜூன் வரை வெறுப்புணர்வைத் தூண்டும் வகையில் வெளியிடப்பட்ட 3.15 கோடி முகநூல் பதிவுகளை நீக்கியுள்ளதாக ஃபேஸ்புக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, அந்நிறுவனத்தின் துணைத் தலைவர் கைய் ரோசன் வெளியிட்ட அறிக்கையில், 'கடந்த ஜனவரி முதல் மார்ச் வரை ஃபேஸ்புக் சமூக வலைதளத்தில் வெறுப்புணர்வைத் தூண்டும் நோக்கில் வெளியிடப்பட்ட 2.52 கோடி பதிவுகள் நீக்கப்பட்டன.

இந்த எண்ணிக்கை கடந்த ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலகட்டத்தில் 3.15 கோடியாக அதிகரித்துள்ளது. அதே காலகட்டத்தில் இன்ஸ்டாகிராம் சமூக வலைதளத்தில் வெளியிடப்பட்ட 98 லட்சம் பதிவுகள் நீக்கப்பட்டன. வெறுப்புணர்வைத் தூண்டும் வகையில் வெளியிடப்படும் பதிவுகள் நீக்கப்படுவது சுமார் 15 மடங்கு அதிகரித்துள்ளது.

ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம் ஆகியவற்றில் வெளியிடப்படும் வெறுப்புணர்வைத் தூண்டும் பதிவுகள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் அடிப்படையில் கண்டறியப்பட்டு நீக்கப்படுகின்றன. அத்தொழில்நுட்பம் மென்மேலும் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

கரோனா தொற்று பரவல், தடுப்பூசி உள்ளிட்டவை குறித்து வதந்திகளைப் பரப்பும் நோக்கில் உலகம் முழுவதும் வெளியிடப்பட்ட 2 கோடிக்கும் அதிகமான பதிவுகள் நீக்கப்பட்டன. இந்த விவகாரத்தில் நிறுவனத்தின் விதிகளைத் தொடர்ந்து மீறிய சுமார் 3,000 கணக்குகள் முடக்கப்பட்டன.

கரோனா பரவல் தொடர்பான வதந்திகள் பரப்பப்படுவது குறித்த எச்சரிக்கைகளும் பயனாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. சிறார் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான 2.57 கோடி பதிவுகள் நீக்கப்பட்டுள்ளன' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாஜக தொண்டர் கட்டிய கோயிலில் பிரதமர் மோடி சிலை அகற்றம்

**புணே, ஆக. 19:** புணே அருகே பாஜக தொண்டரால் கட்டப்பட்ட மோடி கோயிலில் வைக்கப்பட்டிருந்த பிரதமர் மோடியின் சிலை கட்சியினரின் கண்டனத்தை அடுத்து அகற்றப்பட்டது.

மகாராஷ்டிர மாநிலம், புணே அருகே உள்ள அவுந்த் என்ற பகுதியில், பிரதமர் நரேந்திர மோடிக்கு பாஜக தொண்டர் மயூர் முண்டே என்பவர் கோயில் கட்டினார். அயோத்தி ராமர் கோயிலுக்கு அடிக்கல் நாட்டியது, காஷ்மீருக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு அந்தஸ்தை நீக்கியது, மோடி அரசின் மக்கள் நலத் திட்டங்கள் ஆகியவற்றால் கவரப்பட்டதால் அவருக்குக் கோயிலைக் கட்டியதாக முண்டே கூறினார்.

இக்கோயிலில் சுமார் ரூ. 1.60 லட்சம் செலவில் சிவப்பு மார்பிள் கல்லால் ஆன மோடி சிலை வைக்கப்பட்டிருந்தது. கடந்த செவ்வாய்க்கிழமை இக்கோயில் திறக்கப்பட்டது. இதற்கு பலதரப்பிலிருந்தும் கண்டனங்கள் குவிந்தன. எதிர்க்கட்சிகள் மட்டுமின்றி பாஜகவும் இதனை ரசிக்கவில்லை.

கட்சித் தொண்டர் ஒருவர் தன்னிச்சையாக இக்கோயிலைக் கட்டியது தவறு என்றும், ஆர்வக்கோளாறால் இச்செயலில் அவர் ஈடுபட்டதாகவும் கூறிய பாஜக நிர்வாகிகள், மயூர் முண்டேவை வரவழைத்து அறிவுறுத்தியதாகத் தெரிகிறது. இதையடுத்து, அந்தச் சிலையை மயூர் முண்டே அகற்றிவிட்டார்.

இதனிடையே, அக்கோயில் முன்பு ஆர்ப்பாட்டம் செய்யப் போவதாக தேசியவாத காங்கிரஸ் கட்சி அறிவித்திருந்தது. அதன்படி வியாழக்கிழமை வந்த அக்கட்சியினர், மோடி சிலை அகற்றப்பட்டிருந்ததைப் பார்த்து திரும்பிச் சென்றனர்.

## 'ஒரு நாள் சிறைக் கைதி' திட்டம்: கர்நாடகத்தில் விரைவில் அறிமுகம்

### சிறை செல்ல ரூ.500 கட்டணம்

**பெங்களூரு, ஆக.19:** சிறை வாழ்வு குறித்து அறிந்துகொள்ள விரும்புபவர்களுக்கு வித்தியாசமான அனுபவத்தை அளிக்கும் வகையில், ஒரு நாள் முழுவதும் சிறையில் கைதியாகத் தங்கும் வகையிலான புதிய திட்டத்தை அறிமுகப்படுத்த கர்நாடக மாநில சிறைத் துறை அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

கர்நாடக மாநிலம் பெலகாவியில் உள்ள ஹிண்டல்கா மத்திய சிறைச்சாலை அதிகாரிகள் இந்த திட்டத்தை அறிமுகம் செய்ய உள்ளனர். இந்த திட்டத்துக்கு ரூ.500 கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சிறை வாழ்வை பொதுமக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இந்த திட்டம் அறிமுகப்படுத்துவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து ஹிண்டல்கா மத்திய சிறைச்சாலை அதிகாரிகள் மேலும் கூறியதாவது:

சிறை வாழ்வு பற்றித் தெரிந்து கொள்ள விரும்புபவர்களுக்காக ரூ.500 கட்டணம் செலுத்தி ஒரு நாள் முழுவதும் சிறையில் கைதியாகத் தங்கும் திட்டத்தை அறிமுகம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை அமல்படுத்த மத்திய அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் சிறையில் தங்க வருபவர்களுக்கு, கைதியின் சீருடை, கைதி எண், கைதிகளுக்கு வழங்கப்படும் உணவு, கைதிகள் செய்யும் வேலைகள் ஆகியவை வழங்கப்படும். குற்றச் செயல்களுக்காக சிறை தண்டனை பெற்ற கைதிகள் போலவே அவர்களும் நடத்தப்படுவர். எந்தச் சலுகையும் அளிக்கப்படாது. குற்றச் சம்பவங்களில் ஈடுபடுவதைத் தடுப்பது, சிறை வாழ்க்கை குறித்து விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதுமே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## 'மக்கள் ஆசி' பேரணி: மத்திய அமைச்சர்கள் பங்கேற்பு

**புவனேசுவரம்/ ஆமதாபாத், ஆக. 19:** மத்திய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் ஒடிஸாவிலும், மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா மற்றும் மத்திய மீன் வளத் துறை அமைச்சர் புருஷோத்தம் ரூபாலா ஆகியோர் குஜராத்திலும் பாஜக நடத்திய மத்திய அரசின் நலத் திட்டங்களை விளக்கும் 'மக்கள் ஆசி பேரணி'யில் (ஜன் ஆசீர்வாத் யாத்ரா) வியாழக்கிழமை பங்கேற்றனர்.



குஜராத் மாநிலம், ராஜ்கோட்டில் மக்கள் ஆசி யாத்திரையை வியாழக்கிழமை தொடக்கி வைத்த மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா.

இதேபோல், மத்திய செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் தாக்குர் ஹிமாசல பிரதேசத்துக்கான பேரணியை சண்டீகரில் இருந்து வியாழக்கிழமை தொடங்கினார்.

ஒடிஸா மாநிலத்தின் 1994-ஆம் ஆண்டு பிரிவு ஐஏஎஸ் அதிகாரியான அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், அந்த மாநிலத்தில் மாவட்ட ஆட்சியராகவும் பின்னர் முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் தனிச் செயலராகவும் பணியாற்றி உள்ளார். அவருக்கு பாஜகவினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதானும் உடனிருந்தார். இருவரும் புரியில் உள்ள பிரசித்தி பெற்ற ஜெகந்நாதர் கோயிலுக்குச் சென்று வழிபட்டனர்.

பின்னர் கட்சித் தொண்டர்கள், பொதுமக்கள் இடையே பேசிய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், 'ஒடிஸா என்றுமே எனக்கு கர்ம பூமியாகத் திகழ்கிறது' என்றார்.

குஜராத், ராஜ்கோட்டில் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா, கட்சித் தொண்டர்கள் மத்தியில் உரையாற்றிய பிறகு ஜன் ஆசீர்வாத் யாத்திரையைத் தொடக்கி வைத்தார். தனது உரையில் பாஜகவுக்கு மக்கள் வாக்களித்ததற்காக நன்றி தெரிவித்தார்.

இந்தப் பேரணி குஜராத்தில் உள்ள அவரது சொந்த ஊரான பாவ்நகரில் 21-ஆம் தேதி நிறைவடையும். அப்போது நடைபெறவுள்ள பிரம்மாண்ட விழாவில் அவர் கலந்துகொள்கிறார்.

இதேபோல், மத்திய மீன் வளத் துறை அமைச்சர் புருஷோத்தம் ரூபாலா குஜராத்தில் உள்ள மெஹசானா மாவட்டத்தில் பேரணியைத் தொடங்கினார். இந்தப் பேரணியை அவரது சொந்த ஊரான செளராஷ்டிரா பகுதியில் உள்ள அம்ரோலியில் 21-ஆம் தேதி நிறைவு செய்கிறார்.

## அமெரிக்காவுடனான வர்த்தக உறவு மேம்படும்



**புது தில்லி, ஆக.19:** அமெரிக்காவுடனான வர்த்தக உறவு மேலும் மேம்படும் என்று மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் நம்பிக்கை தெரிவித்தார்.

இதுதொடர்பாக ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் தலைவர்கள் கூட்டத்தில் அமைச்சர் பியூஷ் கோயல் பேசுகையில், 'புதிய வர்த்தக உடன்பாடுகள் தற்போதைக்கு மேற்கொள்ளப்படாது என அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது. எனினும், இரு நாடுகளின் தரப்பில் வர்த்தக உறவை மேம்படுத்த பல்வேறு வழிகள் கண்டறியப்படும். இது ஏற்றுமதி துறைக்கு புதிய ஊக்குவிப்பாக அமையும். அதேநேரத்தில், இந்தியாவுடன் உடன்பாடுகளை மேற்கொள்ள ஆஸ்திரேலியா விருப்பம் தெரிவித்துள்ளது. பிரிட்டனுடனான தடையில்லா வர்த்தக உடன்பாடு குறித்து பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. 27 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய யூனியனுடனான வர்த்தக உடன்பாடு ஏற்பட நீண்ட காலமாகும். அதற்கான பணிகள் விரைவு செய்யப்பட்டுள்ளன' என்றார்.

தில்லி அரசின் 1,000 தாழ்தளப் பேருந்து கொள்முதல் விவகாரம்

## சிபிஐ பூர்வாங்க விசாரணை நடத்த மத்திய அரசு பரிந்துரை

**புது தில்லி, ஆக. 19:** தில்லி அரசு 1,000 தாழ்தளப் பேருந்து கொள்முதல் செய்த விவகாரம் தொடர்பாக சிபிஐ பூர்வாங்க விசாரணை நடத்த மத்திய உள்துறை அமைச்சகம் பரிந்துரைத்துள்ளதாக அதிகாரிகள் வியாழக்கிழமை தெரிவித்தனர்.



(கோப்புப்படம்)

இதனிடையே தாழ்தள பேருந்துகள் கொள்முதல் விவகாரத்தில் ஊழல் நடந்துள்ளதாகக் கூறப்படுவதை தில்லி அரசு மறுத்துள்ளது. சிபிஐ மூலம் பாஜக தலைமையிலான மத்திய அரசு, தில்லி அரசை அச்சுறுத்த முயல்வதாக குற்றம்சாட்டியுள்ளது.

தில்லி போக்குவரத்து நிறுவனம் பேருந்து கொள்முதல் செய்ததில் வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தத்தில் ஊழல் நடந்துள்ளதாக இந்த ஆண்டு மார்ச் மாதம் தில்லி சட்டப் பேரவையில் பாஜக புகார் எழுப்பியது. கடந்த ஜூன் மாதம் பேருந்துகள் வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தத்தில் விதிகள் மீறப்பட்டுள்ளதாகவும், குறைகள் இருப்பதாகவும் கூறி துணைநிலை ஆளுநர் அனில் பய்ஜால் நியமித்த குழு தெரிவித்ததுடன், ஒப்பந்தத்தை ரத்து செய்யவும் பரிந்துரைத்தது.

இந்த நிலையில் இந்த விவகாரத்தை துணைநிலை ஆளுநர் மத்திய உள்துறை அமைச்சகத்தின் பரிசீலனைக்கு எடுத்துச் சென்றதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விவகாரம் தொடர்பாக சிபிஐ பூர்வாங்க விசாரணை நடத்த மத்திய உள்துறை பரிந்துரைத்துள்ள தகவலை கூடுதல் செயலர் கோவிந்த மோகன் கடந்த 16-ஆம் தேதி கடிதம் மூலம் தில்லி அரசுக்கு தெரிவித்துள்ளார்.

'தில்லி அரசு 1,000 தாழ்தளப் பேருந்துகள் கொள்முதல் செய்தது தொடர்பாக இந்தக் கடிதம் எழுதப்படுகிறது. இதுதொடர்பாக துணைநிலை ஆளுநர் நியமித்த மூவர் குழு, இந்த விவகாரம் தொடர்பாக விரிவான விசாரணை நடத்த வேண்டும் என்று அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது. இதை மத்திய உள்துறை அமைச்சகம் பரிசீலனை செய்து தேவையான நடவடிக்கை எடுக்க, அதாவது சிபிஐ பூர்வாங்க விசாரணை நடத்த கேட்டுக்கொண்டுள்ளது' என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

https://t.me/Tamil_epaper2

## தலிபான்களை திறந்த மனதுடன் இந்தியா அணுக வேண்டும்

### யஷ்வந்த் சின்ஹா

**புது தில்லி, ஆக.19:** ஆப்கானிஸ்தானை கைப்பற்றியுள்ள தலிபான்களை இந்திய அரசு திறந்த மனதுடன் அணுக வேண்டும் என்றும் காபூலில் இந்திய தூதரகத்தை உடனடியாகத் திறக்க வேண்டும் என்றும் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் யஷ்வந்த் சின்ஹா தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் ஆட்சிக் காலத்தில் வெளியுறவு துறை அமைச்சராக இருந்து பின்னர் பிரதமர் மோடி அரசை விமர்சனம் செய்ததற்காக பாஜகவில் இருந்து வெளியேற்றப்பட்டு, தற்போது திரிணமூல் காங்கிரஸின் துணைத் தலைவராக பதவி வகித்து வருகிறார் யஷ்வந்த் சின்ஹா.

இந்நிலையில் ஆப்கனில் மாறி வரும் அரசியல் சூழல்கள் குறித்து பிடிஐ நிறுவனத்துக்கு அவர் அளித்த பேட்டி:

2001-இல் இருந்ததைப் போன்று தற்போது தலிபான்களின் நடவடிக்கை இல்லை. அவர்களிடம் இருந்து முதிர்ந்த அறிவிப்புகள் வெளியாகின்றன. இதை கவனத்தில் எடுத்து கொள்ள வேண்டும். இதை மட்டுமே வைத்தே அவர்களை நாம் முழுமையாக நம்பிவிட முடியாது.



அதேநேரத்தில் அவர்களின் முந்தைய நடவடிக்கைகளை வைத்து மட்டுமே ஒதுக்கிவிடாமல், தற்போதைய மற்றும் வருங்காலத்தை முன் வைத்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாறி வரும் சூழல்களை இந்தியா பொறுமையாக கவனிக்க வேண்டும். அவர்களை உடனடியாக அங்கீகரிக்கவும் கூடாது; நிராகரிக்கவும் கூடாது.

காபூலில் தூதரகத்தை இந்தியா உடனடியாக மூடியிருக்கக் கூடாது. ஆப்கானிஸ்தானை முழுமையாக கைப்பற்றிய தலிபான்கள், முன்னாள் அதிபர் ஹமீத் கர்சாய் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி அப்துல்லா அப்துல்லா ஆகியோரை சந்தித்து ஆலோசனை நடத்துகிறார்கள். இதை யாரும் முன்பு எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். ஆகையால், காபூலில் இந்திய தூதரகத்தை மத்திய அரசு உடனடியாகத் திறக்க வேண்டும். அந்நாட்டுக்கான இந்திய தூதர் ருத்ரேந்திர டாண்டனை உடனடியாக அங்கு அனுப்ப வேண்டும்.

ஆப்கனிஸ்தான் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் சென்றுவிட்டதாக இந்தியா முடிவு செய்துவிடக் கூடாது. பெரிய நாடான இந்தியா தலிபான்களுடன் மன உறுதியுடனும் திறந்த மனதுடனும் அணுக வேண்டும்.

ஆப்கன் மக்கள் இந்தியா மீதுதான் பாசத்தை வைத்துள்ளனர். பாகிஸ்தான் மீது அல்ல. அந்நாட்டில் இந்திய மேற்கொண்ட வளர்ச்சித் திட்டங்களை அந்நாட்டு மக்கள் பாராட்டி உள்ளனர். இதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பயங்கரவாதக் குழுக்கள் மிகப் பெரிய ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு மனம் மாறி உள்ளன என்ற வரலாறு உள்ளது என்று கூறினார்.

## இந்தியாவில் தலிபான் மனநிலையின் முதல் வெளிப்பாடே மாப்ளா புரட்சி

### ஆர்எஸ்எஸ் மூத்த தலைவர் ராம் மாதவ்

**கோழிக்கோடு, ஆக. 19:** தலிபான்களின் பிரிவினைவாத மனநிலையை இந்தியாவில் முதன்முதலாக வெளிப்படுத்தும் வகையில் அமைந்தது மாப்ளா புரட்சிதான் என்று ஆர்எஸ்எஸ் தேசிய செயற்குழு உறுப்பினர் ராம் மாதவ் தெரிவித்துள்ளார்.

கேரளத்தின் வடக்கில் அமைந்துள்ள மலபார் பகுதியில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு எதிராகக் கடந்த 1921 முதல் 1922-ஆம் ஆண்டு வரை மாப்ளா புரட்சி வெடித்தது.

அந்தப் புரட்சியின்போது நிகழ்ந்த வன்முறையில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலான நிகழ்ச்சி கோழிக்கோட்டில் வியாழக்கிழமை நடைபெற்றது. அதில் பங்கேற்ற ராம் மாதவ் கூறியதாவது:

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் நிகழ்த்திய கொடுமைகளை ஊடகங்கள் மக்களுக்கு எடுத்துரைத்து வருகின்றன. இது இந்தியாவுக்குப் புதிதல்ல. தலிபான்களின் முஸ்லிம் அடிப்படைவாதக் கொள்கை மாப்ளா புரட்சியின் வாயிலாக இந்தியாவில் முதன்முதலில் வெளிப்பட்டது.



அப்போது போதிய ஊடக வசதிகள் இல்லாததால், வன்முறை தொடர்பான செய்திகள் மக்களிடம் சென்றடையவில்லை. அந்த உண்மையான வரலாற்றை மக்கள் அறியாததால், மாப்ளா புரட்சி பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான கம்யூனிஸ்ட் இயக்கத்தின் போராட்டம் என்ற சாயத்தைப் பூசுவதற்கு இப்போதைய கேரள அரசு முயன்று வருகிறது.

புரட்சியின்போது வன்முறையில் ஈடுபட்டவர்களை வீரர்களைப் போலக் கொண்டாட இடதுசாரிகள் தலைமையிலான அரசு முயற்சிக்கிறது. பாஜக தலைமையிலான மத்திய அரசுக்குப் புரட்சி தொடர்பான உண்மையான வரலாறு நன்கு தெரியும். கேரளத்திலும் காஷ்மீரிலும் மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தும் முயற்சிகளை மத்திய அரசு அனுமதிக்காது.

மாப்ளா புரட்சியின்போது ஏற்பட்ட தலிபான் மனப்பான்மையே இந்திய பிரிவினைக்குக் காரணம். தலிபான்களின் அடிப்படைவாதக் கொள்கையானது, முஸ்லிம் உள்ளிட்ட அனைத்துப் பிரிவினருக்குமே வினையாக முடியும். தலிபான்களின் கொள்கை தொடர்ந்து வளர்ந்தால், எந்த மதத்தினரையும் விட்டு வைக்காது என்றார் அவர்.

## ஏர் இந்தியா பங்கு விலக்கல் நடவடிக்கைகள் தொடர்கின்றன

### மத்திய அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா

**இந்தூர், ஆக. 19:** பொதுத் துறை விமானப் போக்குவரத்து நிறுவனமான ஏர் இந்தியாவில் மத்திய அரசு வைத்துள்ள பங்குகளை விலக்கிக் கொள்வதற்கான நடவடிக்கைகள் சரியான பாதையில் தொடர்ந்துவருவதாக மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.



ஏர் இந்தியா நிறுவனத்தைத் தனியார்மயமாக்கும் நடவடிக்கைகளை மத்திய அரசு தீவிரப்படுத்தியுள்ளது. இந்நிலையில், மத்திய பிரதேசத்தின் இந்தூரில் அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை கூறுகையில், "ஏர் இந்தியா பங்கு விலக்கல் நடவடிக்கைகள் சரியான பாதையில் தொடர்ந்து வருகின்றன. பங்குகளை வாங்குவதற்கான விருப்ப விண்ணப்பங்களை செப்டம்பர் 15-ஆம் தேதிக்குள் அனுப்பலாம்.

சிறியரக ஆளில்லா விமானங்கள் (ட்ரோன்கள்) மூலமாக பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால், அவற்றை இயக்குவதற்கான விதிகள் பாதுகாப்பு மற்றும் உள்துறை அமைச்சகங்களுடன் இணைந்து தயாரிக்கப்பட்டுள்ளன. அதன்படி, குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே ட்ரோன்களை இயக்குவதற்கு அனுமதி வழங்கப்படும்.

அவ்வாறு ட்ரோன்கள் இயக்கப்படுவது மென்பொருள் வாயிலாகக் கண்காணிக்கப்படும். ட்ரோன்கள் பதிவு செய்யப்படுவது கட்டாயமாக்கப்படுவதுடன், அதை இயக்குபவருக்கு உரிமம் வழங்கப்படும். 'உடான்' திட்டத்தின் கீழ் விமானப் போக்குவரத்து வசதிகள் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன" என்றார்.

## சர்க்கரை ஏற்றுமதி, எத்தனால் உற்பத்தியால் கரும்பு விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் பணப் பட்டுவாடா

### மத்திய அரசு தகவல்

நமது சிறப்பு நிருபர்

**புது தில்லி, ஆக. 19:** சர்க்கரை ஏற்றுமதி, எத்தனால் விற்பனை ஆகியவற்றின் மூலம் பெறப்படும் வருவாய், சர்க்கரை ஆலைகள் விவசாயிகளின் கரும்புக்கான நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு உதவியாக இருக்கிறது. இதன்மூலம் வேளாண் பொருளாதாரம் சீரடைந்து வருகிறது என்று மத்திய அரசு தெரிவித்துளளது.

இதுகுறித்து மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு, பொது விநியோகத் துறை அமைச்சகம் கூறியிருப்பதாவது:

கடந்த சில ஆண்டுகளில் உள்நாட்டுத் தேவையை விட சர்க்கரை உற்பத்தி அதிகரித்துள்ளது. உபரியாகும் சர்க்கரை பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், தேவைக்கு அதிகமாக உள்ள கரும்பை சர்க்கரை ஆலைகள் எத்தனாலாக மாற்றுவதற்கு மத்திய அரசு ஊக்குவித்து வருகிறது. பெட்ரோலுடன் எத்தனாலைக் கலப்பதால் பசுமை எரிவாயு உருவாவதுடன், கச்சா எண்ணெய் இறக்குமதிக்கான அந்நியச் செலாவணியும் சேமிக்கப்படுகிறது. கடந்த 2018-19-ஆம் ஆண்டுகளில் 3.37 லட்சம் மெட்ரிக் டன் கரும்பு எத்தனாலுக்காக திருப்பிவிடப்பட்டது. நடப்பு கரும்பு பருவ காலத்தில் (2021-22) 35 லட்சம் மெட்ரிக் டன் கரும்பு எத்தனால் தயாரிப்புக்காக திருப்பிவிடப்பட்டுள்ளது. மேலும், 2024-25-ஆம் ஆண்டுக்குள் 60 லட்சம் மெட்ரிக் டன் கரும்பை எத்தனாலாக மாற்றுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று பருவ காலங்களில் ரூ. 22,000 கோடி மதிப்புக்கு கரும்பு ஆலைகள் எத்தனால் தயாரித்து எண்ணெய் நிறுவனங்களுக்கு விற்று வருமானம் ஈட்டியுள்ளன. நடப்பு கரும்பு பருவத்தில் ரூ.15,000 கோடி வருமானத்தை கரும்பு ஆலைகள் பெற்றுள்ளன. அடுத்து சர்க்கரை ஏற்றுமதி ஊக்குவிப்படுகிறது. இதற்காக மத்திய அரசு நிதி உதவியையும் வழங்கி வருகிறது.

2020-21 பருவ காலத்தில் ஏற்றுமதிக்கான உதவித் தொகையாக ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ. 6,000 வீதம் ஆலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2017-18 ஆண்டில் 6.2 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த ஏற்றுமதி, 2019-20-இல் 59.60 லட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. நடப்பு ஆண்டில் 70 லட்சம் மெட்ரிக் டன் ஏற்றுமதிக்கு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு கடந்த ஆகஸ்ட் 16-ஆம் தேதி வரை 60 லட்சம் மெட்ரிக் டன் சர்க்கரையை ஆலைகள் ஏற்றுமதி செய்துள்ளன.

சர்க்கரை ஏற்றுமதி, எத்தனால் விற்பனை ஆகியவற்றின் மூலம் பெறப்படும் வருவாய், சர்க்கரை ஆலைகள் விவசாயிகளின் கரும்புக்கான தொகையை செலுத்துவதற்கு உதவியாக இருக்கிறது. இதன்மூலம் கரும்பு விவசாயிகள் உரிய காலத்தில் கரும்புக்கான நிலுவைத் தொகையைப் பெறுவது உறுதி செய்யப்படுகிறது. முந்தைய சர்க்கரைப் பருவமான 2019-20-இல், மொத்தம் ரூ. 75,845 கோடி செலுத்த வேண்டியிருந்தது. இதில் ரூ. 75,703 கோடி செலுத்தப்பட்டுள்ளது. தற்போதைய 2020-21 சர்க்கரை பருவத்தில் ரூ. 90,872 கோடி மதிப்பிலான கரும்புகளை சர்க்கரை ஆலைகள் பெற்றிருக்கின்றன. இதில் ரூ. 81,963 கோடி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆகஸ்ட் 16-ஆம் தேதி வரை ரூ.8,909 கோடி மட்டும் நிலுவையில் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சின்சினாட்டி மாஸ்டர்ஸ்**

# மெத்வதேவ், சிட்சிபாஸ் முன்னேற்றம்

**மேசன், ஆக. 19:** சின்சினாட்டி மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் ரஷியாவின் டேனில் மெத்வதேவ், கிரீஸின் ஸ்டெஃபானோஸ் சிட்சிபாஸ் ஆகியோர் 3-ஆவது சுற்றுக்கு முன்னேறினர்.

போட்டித்தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் மெத்வதேவ் 2-ஆவது சுற்றில் அமெரிக்காவின் மெக்கன்ஸி மெக்டொனால்டை 6-2, 6-2 என்ற செட்களில் வீழ்த்தினார். போட்டித்தரவரிசையில் 2-ஆம் இடத்திலிருக்கும் சிட்சிபாஸ் 7-6 (7/5), 6-3 என்ற செட்களில் மற்றொரு அமெரிக்க வீரரான செபாஸ்டியன் கோர்டாவை தோற்கடித்தார்.

போட்டித்தரவரிசையில் 3-ஆம் இடத்திலிருக்கும் ஜெர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரேவ் 7-6 (7/3), 6-2 என்ற செட்களில் தென் ஆப்பிரிக்காவின் லாய்ட் ஹாரிஸை வென்றார். 10-ஆம் இடத்திலிருக்கும் ஆர்ஜென்டீனாவின் டியேகோ ஷ்வார்ட்ஸ்மேன் 6-1, 4-6, 6-4 என்ற செட்களில் அமெரிக்காவின் ஃப்ரான்சஸ் டியாஃபோவை வீழ்த்தினார்.

பிரான்ஸ் வீரர் கேல் மான்ஃபில்ஸ் 6-3, 7-5 என்ற செட்களில் போட்டித்தரவரிசையில் 14-ஆம் இடத்திலிருந்த ஆஸ்திரேலிய வீரர் அலெக்ஸ் டி மினாரை வெளியேற்றினார். அமெரிக்காவின் ஜான் ஐஸ்னர் 5-7, 7-6 (7/4), 6-4 என்ற செட்களில் இத்தாலியின் ஜானிக் சின்னரை தோற்கடித்தார்.

போட்டித்தரவரிசையில் 4-ஆம் இடத்திலிருக்கும் ரஷியாவின் ஆன்ட்ரே ரூபலேவ் 5-7, 6-3, 6-1 என்ற செட்களில் குரோஷியாவின் மரின் சிலிச்சையும், நார்வே வீரர் காஸ்பர் ரூட் 6-7 (5/7), 6-0, 7-6 (7/4) என்ற செட்களில் அமெரிக்காவின் ரைலி ஒபெல்காவையும், போலந்து வீரர் ஹியூபர்ட் ஹர்காக்ஸ் 7-6 (7/4), 6-3 என்ற செட்களில் இங்கிலாந்தின் ஆன்டி முர்ரேவையும் வீழ்த்தினர்.







## 3-ஆவது சுற்றில் பார்ட்டி, ஒசாகா

மகளிர் பிரிவில் ஆஸ்திரேலியாவின் ஆஷ்லி பார்ட்டி, ஜப்பானின் நவோமி ஒசாகா ஆகியோர் 2-ஆவது சுற்றில் வெற்றி பெற்றனர்.

போட்டித்தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் பார்ட்டி 6-4 , 7-6 (7/3) என்ற செட்களில் இங்கிலாந்தின் ஹீதர் வாட்சனையும், போட்டித்தரவரிசையில் 2-ஆம் இடத்திலிருக்கும் ஒசாகா 4-6, 6-3, 6-4 என்ற செட்களில் அமெரிக்காவின் கோகோ கெளஃபையும் தோற்கடித்தனர்.

போட்டித்தரவரிசையில் 4-ஆம் இடத்திலிருக்கும் உக்ரைனின் எலினா ஸ்விடோலினா, 7-ஆம் இடத்திலிருக்கும் கனடாவின் பியான்கா ஆன்ட்ரிஸ்கு ஆகியோர் முறையே, ஜெர்மனியின் ஏஞ்செலிக் கெர்பரிடமும் (7-5, 2-6, 6-4), செக் குடியரசின் கரோலினா முசோவாவிடமும் (6-4, 6-2) தோல்வி கண்டனர்.

செக் குடியரசின் பெட்ரா குவிட்டோவா - ரஷியாவின் வெரோனிகா குதர்மெடோவாவையும், பெல்ஜியத்தின் எலிஸ் மெர்டன்ஸ் - கஜகஸ்தானின் எலனா ரைபாகினாவையும் வீழ்த்தினர். போட்டித்தரவரிசையில் 5-ஆம் இடத்திலிருக்கும் செக் குடியரசின் கரோலினா பிளிஸ்கோவா 6-3, 6-2 என்ற செட்களில் கஜகஸ்தானின் யுலியா புடின்ட்சேவாவை வெல்ல, போட்டித்தரவரிசையில் 6-ஆம் இடத்திலிருந்த போலந்தின் இகா ஸ்வியாடெக் 3-6, 3-6 என்ற செட்களில் டுனீசியாவின் ஆன்ஸ் ஜாபியுரிடம் தோல்வி கண்டார்.

ஸ்பெயின் வீராங்கனை கார்பின் முகுருஸா 6-4, 6-3 என்ற செட்களில் பிரான்ஸின் கரோலின் கார்சியாவை வென்றார்.

## சானியா ஜோடி தோல்வி

மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்ஸா/டுனீசியாவின் ஆன்ஸ் ஜாபியுர் இணை 2-ஆவது சுற்றில் தோற்று வெளியேறியது. அந்த இணையை ரஷியாவின் வெரோனிகா குதர்மெடோவா/கஜகஸ்தானின் எலனா ரைபாகினா ஜோடி 7-5, 6-2 என்ற செட்களில் தோற்கடித்தது.



ஆன்ஸ்/ சானியா

https://t.me/Tamil_epaper2

**ஜூனியர் மல்யுத்தம்**

## பிபாஷாவுக்கு வெள்ளி

**உஃபா, ஆக. 19:** ரஷியாவில் நடைபெறும் உலக ஜூனியர் மல்யுத்த சாம்பியன்ஷிப்பில் இந்திய வீராங்கனை பிபாஷா வெள்ளி வென்றார். அத்துடன் இரு வெண்கலப் பதக்கங்களும் இந்தியாவுக்கு கிடைத்தது.


பிபாஷா

இதில் பிபாஷா, 76 கிலோ பிரிவு இறுதிச்சுற்றில் அமெரிக்காவின் கைலி ரெனீ வெல்கரிடம் தோற்று வெள்ளி பெற்றார். 62 கிலோ பிரிவு வீராங்கனையான சஞ்சு தேவி, அரையிறுதியில் அஜர்பைஜானின் பிர்குல் சோல்டானோவாவை 8-5 என்ற கணக்கில் வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார். அதில் அவர் ரஷியாவின் அலினா கசாபிவாவை எதிர்கொள்ள இருக்கிறார்.

அதேபோல், 65 கிலோ பிரிவு அரையிறுதியில் இந்திய வீராங்கனை பாதேரி - ருமேனியாவின் அமினா ரோக்ஸானா கபெஸானை வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு தகுதிபெற்றார். அதில் மால்டோவாவின் இரினா ரிகான்சியை அவர் சந்திக்கிறார்.

வெண்லகப் பதக்கத்துக்கான சுற்றுகளில் 50 கிலோ பிரிவில் சிம்ரன் 7-3 என்ற கணக்கில் பெலாரஸின் நடாலியா வராகினாவையும், 55 கிலோ பிரிவில் சிதோ - தொழில்நுட்பப் புள்ளிகள் அடிப்படையில் துருக்கியின் மெல்டா டெரென்க்ஸியையும் வீழ்த்தினர். குசும் (59 கிலோ), ஸ்னேஹா (72 கிலோ) ஆகியோர் அந்தச் சுற்றில் தோல்வி கண்டனர். பிங்கி (53 கிலோ), மான்சி (57 கிலோ) ஆகியோர் காலிறுதியில் தோற்றனர்.

**டி20 உலகக் கோப்பை**

## ஆரோன் ஃபிஞ்ச் தலைமையில் ஆஸ்திரேலிய அணி அறிவிப்பு

**மெல்போர்ன், ஆக. 19:** டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்காக, ஆரோன் ஃபிஞ்ச் தலைமையில் 15 பேர் கொண்ட ஆஸ்திரேலிய அணியை அந்நாட்டு கிரிக்கெட் வாரியம் வியாழக்கிழமை அறிவித்தது.

அந்தப் போட்டி ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறவுள்ளதால் அங்குள்ள மெதுவான, சுழற்பந்துவீச்சுக்கு சாதகமான ஆடுகளங்களுக்கு ஏற்ற வகையில் பௌலர்கள், பேட்ஸ்மேன்களைக் கொண்ட கலவையாக ஆஸ்திரேலிய அணி தேர்வு செய்யப்பட்டுள்ளது. விக்கெட் கீப்பர் மேத்யூ வேடுக்கான 'பேக் அப்' வீரராக, அனுபவமிக்க அலெக்ஸ் கேரி, ஜோஷ் பிலிப் ஆகியோருக்குப் பதிலாக புதுமுகமான ஜோஷ் இங்லிஸை ஆஸ்திரேலியா அணியில் சேர்த்துள்ளது.

ஒருநாள் கிரிக்கெட் உலகக் கோப்பையில் 5 முறை பட்டம் வென்றுள்ள ஆஸ்திரேலியா, டி20-யில் முதல் முறையாக பட்டம் வெல்லும் முனைப்பில் உள்ளது. ஸ்மித், ஃபிஞ்ச் ஆகியோருக்கு காயம் இருக்கும் நிலையிலும், போட்டிக்கு முன்பாக அவர்கள் உடற்தகுதிபெற்றிடுவார்கள் என்ற எதிர்பார்ப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**அணி விவரம்:** ஆரோன் ஃபிஞ்ச் (கேப்டன்), பேட் கம்மின்ஸ் (துணை கேப்டன்), ஆஷ்டன் அகர், ஜோஷ் ஹேஸில்வுட், ஜோஷ் இங்லிஸ், மிட்செல் மார்ஷ், கிளென் மேக்ஸ்வெல், கேன் ரிச்சர்ட்சன், ஸ்டீவ் ஸ்மித், மிட்செல் ஸ்டார்க், மார்கஸ் ஸ்டாய்னிஸ், மிட்செல் ஸ்வெப்சன், மேத்யூ வேட், டேவிட் வார்னர், ஆடம் ஸாம்பா. (ரிசர்வ்) டேன் கிறிஸ்டியன், நேதன் எலிஸ், டேனியல் சாம்ஸ்.

## துளிகள்...

- 20 வயதுக்கு உள்பட்டோருக்கான உலக தடகள சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் ரோஹன் காம்ப்லே, ஆடவருக்கான 400 மீட்டர் தடை தாண்டும் ஓட்டத்தில் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.
- வலது கை மணிக்கட்டுப் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளதால், அமெரிக்க ஓபன் போட்டியிலிருந்து விலகுவதாக நடப்பு சாம்பியனும், ஆஸ்திரிய வீரருமான டொமினிக் தீம் அறிவித்துள்ளார்.
- 2021-22 சீசன் ரஞ்சி கோப்பை கிரிக்கெட் போட்டி வரும் ஜனவரி 5-ஆம் தேதியும், சையது முஷ்டாக் அலி கோப்பை போட்டி வரும் அக்டோபர் 27-ஆம் தேதியும், விஜய் ஹஸாரே கோப்பை போட்டி டிசம்பர் 1-ஆம் தேதியும் தொடங்கவுள்ளன.
- உலக டேபிள் டென்னிஸ் கன்டென்டர்ஸ் போட்டியில் ஒற்றையர் பிரிவில் அரையிறுதிக்கு முன்னேறிய மணிகா பத்ரா, கலப்பு இரட்டையரில் சத்தியனுடன் இணைந்து இறுதிச் சுற்றுக்கு தகுதிபெற்றார்.

**மகளிர் உலகக் கோப்பை**

## குவாலிஃபயர் சுற்றுகளை ஜிம்பாப்வே நடத்துகிறது

**துபை, ஆக. 19:** மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் குவாலிஃபயர் ஆட்டங்கள் ஜிம்பாப்வேயில் வரும் நவம்பர் 21 முதல் டிசம்பர் 5 வரை நடைபெறவுள்ளதாக ஐசிசி தெரிவித்துள்ளது.




உலகக் கோப்பை போட்டியானது நியூஸிலாந்தில் அடுத்த ஆண்டு மார்ச் 4 முதல் ஏப்ரல் 3 வரை நடைபெறவுள்ளது. மொத்தம் 8 அணிகள் மோதவுள்ள அந்தப் போட்டிக்கு ஐசிசி மகளிர் சாம்பியன்ஷிப்பின் அடிப்படையில் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா, தென் ஆப்பிரிக்கா, நியூஸிலாந்து ஆகிய 5 அணிகள் ஏற்கெனவே தகுதிபெற்றுவிட்டன. இந்த குவாலிஃபயர் ஆட்டங்கள் மூலமாக எஞ்சிய 3 அணிகள் தேர்வாக உள்ளன.

குவாலிஃபயர் ஆட்டங்கள் மூலமாக அந்த 3 அணிகளுடன், அடுத்த ஐசிசி மகளிர் சாம்பியன்ஷிப்பில் விளையாட இருக்கும் கூடுதலான 2 அணிகளும் தேர்வாக இருக்கின்றன. ஏனெனில் 3-ஆவது மகளிர் சாம்பியன்ஷிப்புக்கான அணிகளின் எண்ணிக்கை 8-இல் இருந்து 10-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஜிம்பாப்வேயில் நடைபெறவுள்ள குவாலிஃபயர் ஆட்டங்களில் வங்கதேசம், அயர்லாந்து, நெதர்லாந்து, பாகிஸ்தான், பப்புவா நியூ கினி, இலங்கை, தாய்லாந்து, அமெரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், ஜிம்பாப்வே ஆகிய 10 அணிகள் களம் காண இருக்கின்றன.

# தங்கமாக மாறிய தகுந்த நேர உதவி

தடம் மாறிவந்து, தடுமாறி நிற்கையில் கை கொடுத்து உதவிய ஒருவருக்கு, தடகள வீரர் தெரிவிக்கும் அதிகபட்ச நன்றி எதுவாக இருக்கும்? தக்க சமயத்தில் கிடைத்த உதவியால் வென்ற தங்கப் பதக்கத்தை அந்த நபரின் கைகளில் கொடுத்து, 'இது உங்களால் தான் சாத்தியமானது' என்று கூறுவதாக இருக்கும். இதைச் செய்திருப்பவர் ஜமைக்கா தடகள வீரர் ஹான்ஸ்லே பார்ச்மன்ட். அந்தகைய நன்றி கிடைக்கப் பெற்றவர் ஸ்லோவேகிய இளம் பெண் டிரிஜானா ஸ்டோஜ்கோவிச்.


ஹான்ஸ்லே பார்ச்மன்ட்

இது நடந்தது டோக்கியோ ஒலிம்பிக்கில். ஜமைக்க தடகள வீரரான ஹான்ஸ்லே, 110 மீட்டர் தடை தாண்டும் ஓட்ட வீரர் ஆவார். அந்தப் பிரிவு ஹீட்ஸில் தகுதிபெற்று அரையிறுதிப் பந்தயத்துக்கு அவர் முன்னேறியிருந்தார். கடந்த 4-ஆம் தேதி அரையிறுதிப் பந்தயம் நடைபெற்ற நிலையில், அதற்காக தாம் தங்கியிருந்த ஒலிம்பிக் கிராமத்திலிருந்து புறப்பட்டார் ஹான்ஸ்லே. ஒலிம்பிக் கிராமத்தில் போட்டியாளர்கள் தங்கியுள்ள இடத்துக்கும், போட்டி நடைபெறும் இடங்களுக்கும் இடையே பேருந்துகள் இயக்கப்பட்டன.

அந்த வகையில், தடகள போட்டிகள் நடைபெறும் மைதானத்துக்குச் செல்லும் பேருந்துகள் இயக்கப்படும் நிறுத்தத்தில் ஹான்ஸ்லே நிற்க, அங்கு வந்த ஒரு பேருந்தில் அவர் ஏறினார். காதுகளில் இசைக் கருவி மாட்டியிருந்ததால் பேருந்தில் இருந்த ஊழியர்கள் பேச்சும் அவர் காதில் விழவில்லை. சிறிது தூர பயணத்துக்குப் பிறகு அவர் சென்று சேர்ந்ததோ தவறான இடம். தடகள மைதானத்துக்குப் பதிலாக படகுப் போட்டிகள் நடைபெறும் இடத்துக்கு அவர் வந்துள்ளார்.

இடம் மாறி வந்துவிட்டதை அறிந்த ஹான்ஸ்லே, மீண்டும் ஒலிம்பிக் கிராமத்துக்கு பேருந்தில் சென்று, அங்கிருந்து தனது போட்டி நடைபெறும் மைதானத்துக்குச் செல்ல நீண்ட நேரம் ஆகும். அதற்குள்ளாக அவரது விளையாட்டின் அரையிறுதிப் பந்தயம் தொடங்கிவிடும். இதை உணர்ந்த ஹான்ஸ்லே கலங்கிப் போய்விட்டார். செய்வதறியாது திகைத்த நிலையில், அந்த இடத்தில் போட்டி ஒருங்கிணைப்புக்கான பணியிலிருந்த பெண் தன்னார்வலர் (டிரிஜானா) ஒருவரிடம் பேசினார். சூழ்நிலையை கூறி தனக்கு உதவிடுமாறு கோரியுள்ளார். பெரிதாக உதவ முடியாத, சாதாரண பணியில் இருக்கும் அந்தப் பெண்ணும் சற்று திகைக்கத்தான் செய்தார்.


ஜமைக்கா தூதரகத்தில் டிரிஜானாவுக்கு பாராட்டு.

பின்னர் சுதாரித்துக் கொண்டு ஹான்ஸ்லே நிலையை உணர்ந்த டிரிஜானா, போட்டி நடைபெறும் மைதானத்துக்கு டாக்ஸி பிடித்துச் செல்லுமாறு ஹான்ஸ்லேவுக்கு ஆலோசனை வழங்கினார். அப்போது, ஹான்ஸ்லேவிடம் போதிய பணமும் அப்போது இருக்காத நிலையில், தன்னிடம் இருந்த ஒரு குறிப்பிடத்தக்க தொகையை அவருக்கு வழங்கி உதவியுள்ளார்.

அவ்வாறு டாக்ஸி பிடித்துச் சென்ற ஹான்ஸ்லே தகுந்த நேரத்தில் அரையிறுதியில் கலந்துகொண்டு இறுதிச் சுற்றுக்கும் தகுதிபெற்றார். மறுநாள் நடைபெற்ற இறுதிச்சுற்றில் முதலிடமும் பிடித்து அசத்தினார்.

தங்கத்தை சுமந்து நின்ற ஹான்ஸ்லே, தக்க சமயத்தில் தனக்கு உதவிய டிரிஜானாவை அந்த நிமிஷத்தில் நினைத்துப் பார்த்தார். அவருக்கு உரிய நன்றி செலுத்தவும் நினைத்தார். போட்டி நிறைவடைந்த பிறகு, தாம் வழி தவறிச் சென்ற மைதானத்தை மீண்டும் தேடிச் சென்று அங்கிருந்த பல நூறு தன்னார்வலர்களிடையே டிரிஜானாவையும் தேடிக் கண்டுபிடித்தார்.


'செல்ஃபி'

தன்னிடம் உதவி பெற்றவர் அதற்கு நன்றி செலுத்த மீண்டும் அத்தனை தூரம் தேடி வந்ததை அறிந்து டிரிஜானா ஆச்சர்யமடைய, அவரது கைகளில் தனது தங்கப் பதக்கத்தை வழங்கி 'இது உங்களால் தான் சாத்தியமானது' என்று கூறி மேலும் அவரை இன்ப அதிர்ச்சிக்குள்ளாக்கினார் ஹான்ஸ்லே.

உற்சாகத்தில் அதை நம்ப இயலாமல் திகைத்த டிரிஜானா, பின்னர் ஹான்ஸ்லேவின் பதக்கத்தை மகிழ்ச்சியுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டார். டிரிஜானா தனக்கு அளித்து உதவிய தொகையை மீண்டும் அவரிடம் வழங்கிய ஹான்ஸ்லே, அவருக்கு அன்புப் பரிசாக ஒரு டி-ஷர்ட்டையும் வழங்கினார். இருவரும் சேர்ந்து சிறப்பாக ஒரு 'செல்ஃபி'யும் எடுத்துக் கொண்டனர். தகுந்த நேரத்தில் உதவிய டிரிஜானா - நன்றி மறவாத ஹான்ஸ்லேவின் இந்த கதை தற்போது சமூக வலைதளங்களில் மிகப் பிரபலம்.

### ஜமைக்கா அரசு கௌரவம்

தங்களது நாட்டு வீரரான ஹான்ஸ்லேவுக்கு தகுந்த நேரத்தில் உதவிய டிரிஜானாவை கௌரவிக்கும் விதமாக, ஜமைக்காவுக்கு வருமாறு அந்நாட்டு அரசு சார்பில் ஜமைக்க சுற்றுலாத் துறை அவருக்கு அழைப்பு விடுத்துள்ளது. அத்துடன், ஜப்பானில் உள்ள ஜமைக்கா தூதரகம் டிரிஜானாவை நேரில் அழைத்து அவரைப் பாராட்டி கௌரவித்துள்ளது.

# அமெரிக்க ஆதரவாளர்களுக்கு எதிராக தலிபான்கள் தேடுதல் வேட்டை

## ஐ.நா. ஆவணத்தில் தகவல்



**நியூயார்க், ஆக. 19:** ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா மற்றும் நேட்டோ படையினருக்கு ஆதரவாக செயல்பட்டவர்களுக்கு எதிரான தேடுதல் வேட்டையை தலிபான்கள் தீவிரப்படுத்தியுள்ளதாக ஐ.நா.விடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பிபிசி ஊடகம் தெரிவித்துள்ளதாவது: உலக அளவில் உளவுத் தகவல்களைத் திரட்டி ஐ.நா.விடம் நார்வே சர்வதேச பகுப்பாய்வு மையம் அளித்து வருகிறது.

அந்த அமைப்பு, ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகள் ஆட்சியைக் கைப்பற்றியதற்குப் பிந்தைய நிலவரம் குறித்து ஐ.நா.விடம் தற்போது ஓர் அறிக்கை தாக்கல் செய்துள்ளது. அந்த அறிக்கையில், கடந்த காலங்களில் அமெரிக்க மற்றும் பிற நேட்டோ உறுப்பு நாடுகளுடன் இணைந்து பணியாற்றியவர்களுக்கு எதிரான தேடுதல் வேட்டையை தலிபான் அமைப்பினர் தீவிரப்படுத்தியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்கக் கூட்டுப் படைக்கு ஆதரவாக செயல்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களை தலிபான்கள் கைது செய்து வருகின்றனர். மேலும், வெளிநாட்டுப் படையினருடன் இணைந்து பணியாற்றியவர்கள் தாங்களாக முன்வந்து சரணடையாவிட்டால், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் கைது செய்யப்படுவார்கள் அல்லது கொல்லப்படுவார்கள் என்று தலிபான்கள் மிரட்டல் விடுத்து வருகின்றனர்.



காபூல் வீதிகளில் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ள தலிபான்கள்.

ஆப்கன் ராணுவம், காவல்துறை, புலனாய்வுத் துறையில் பணியாற்றவர்கள் இந்த வகையில் தலிபான்களால் குறிவைக்கப்பட்டுள்ளனர்.

முக்கிய நகரங்களைக் கைப்பற்றுவதற்கு முன்னதாகவே, அந்த நகரில் அரசு மற்றும் வெளிநாடுகளுடன் இணைந்து பணியாற்றியவர்கள் குறித்த விவரங்களை தலிபான்கள் சேகரித்தனர்.

காபூல் நகரை அவர்கள் கைப்பற்றியதற்குப் பிறகு விமானம் மூலம் ஆப்கானியர்கள் வெளியேறுவதற்கு அனுமதிப்பதற்கு முன்னதாக, அவர்கள் ஏற்கெனவே வெளிநாட்டுப் படையினருக்கு ஆதரவாக செயல்பட்டனரா என தலிபான்கள் ஆய்வு செய்தனர்.

புதிய அரசுடன் இணைந்து, முந்தைய அரசுக்கு ஆதரவாக செயல்பட்டவர்கள் குறித்த விவரங்களைத் தருவதற்காக ரகசிய உளவாளிகளை தலிபான்கள் நியமித்து வருகின்றனர் என்று ஐ.நா.வில் நார்வே சர்வதேச பகுப்பாய்வு மையம் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பீதியை ஏற்படுத்தும் விடியோ

ஆப்கானிஸ்தானில் முந்தைய அரசின் ஆதரவாளர்கள் தலிபான்களால் குறிவைக்கப்படுவதாக வெளியாகும் தகவல்களை உறுதிசெய்வதுபோல, சமூக ஊடகங்களில் விடியோ காட்சி ஒன்று வெளியாகியுள்ளது.

அந்த விடியோவில், ஆயுதமேந்திய தலிபான்கள் ஒரு வீட்டின் கதவை எட்டி உதைத்து, தாங்கள் பிடித்து வைத்திருக்கும் ஒரு நபரை அந்த வீட்டுக்குள் முரட்டுத்தனமாக பிடித்துச் செல்லும் காட்சி இடம் பெற்றுள்ளது.



## விமானத்திலிருந்து விழுந்து இறந்தவர் ஆப்கன் தேசிய கால்பந்து அணி வீரர்

**நியூயார்க்/பெர்லின், ஆக. 19:** காபூல் விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட அமெரிக்க விமானத்திலிருந்து விழுந்து உயிரிழந்தவர்களில் ஒருவர் ஆப்கானிஸ்தான் தேசிய கால்பந்து அணி வீரர் என்பது தெரியவந்துள்ளது.

ஆப்கனை தலிபான்கள் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததைத் தொடர்ந்து, ஏராளமானோர் அந்நாட்டிலிருந்து வெளியேற முயன்று வருகின்றனர். கடந்த திங்கள்கிழமை காபூல் விமான நிலையத்தில் ஏராளமானோர் திரண்டனர். அவர்களில் சிலர் அங்கிருந்து புறப்பட்ட அமெரிக்க விமானத்தின் இறக்கைப் பகுதியிலும், டயர் பகுதியிலும் ஏறி அமர்ந்துகொண்டனர். விமானம் பறக்கத் தொடங்கியதும் அதிலிருந்து மூவர் தரையில் விழுந்து உயிரிழந்தனர். அவர்களில் ஒருவர் ஆப்கன் தேசிய கால்பந்து ஜூனியர் அணியைச் சேர்ந்த ஜாகி அன்வாரி (19) என்பது தெரியவந்துள்ளது. இத்தகவலை அந்நாட்டின் உடற்கல்வி மற்றும் விளையாட்டுத் துறை இயக்குநர் உறுதிப்படுத்தியுள்ளார்.

**செய்தியாளரின் உறவினர் சுட்டுக் கொலை:** ஜெர்மனியைச் சேர்ந்த அரசுக்குச் சொந்தமான டாய்ச்ச வெல்லா தொலைக்காட்சி நிறுவனத்தின் செய்தியாளர் ஒருவர் ஆப்கானிஸ்தானில் பணிபுரிந்து வருகிறார். மேற்கு ஆப்கானிஸ்தானில் அவர் வசித்து வரும் பகுதியில் வீடு வீடாகத் தேடிய தலிபான்கள், செய்தியாளரின் உறவினர் ஒருவரை சுட்டுக் கொன்றனர். துப்பாக்கிச்சூட்டில் சிலர் காயமடைந்ததாக அந்தத் தொலைக்காட்சி நிறுவனம் வியாழக்கிழமை தெரிவித்தது.

## 'தலிபான்கள் முன்பைவிட விவேகத்துடன் உள்ளார்கள்'

**பெய்ஜிங், ஆக. 19:** தலிபான்கள் முன்பிருந்ததைவிட விவேகத்துடன் செயல்படுவதாக சீனா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ஹுவா சன்யிங் கூறியதாவது:



ஹுவா சன்யிங்

ஆப்கன் ஆட்சியை தலிபான்கள் கைப்பற்றியதிலிருந்து அந்த அமைப்பினருடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்.

தலிபான்களின் செயல்பாடுகளைக் கொண்டே அவர்கள் குறித்து பிற நாடுகள், குறிப்பாக மேற்கத்திய நாடுகள் மதிப்பீடு செய்ய வேண்டும்.

தலிபான்கள் முன்பு செய்த தவறுகளை செய்ய மாட்டார்கள்; அவர்கள் தற்போது விவேகத்துடனும் தெளிவான பார்வையுடனும் உள்ளனர் என்றார் அவர்.

முன்னதாக, ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் புதிய அரசை அமைத்ததற்குப் பிறகுதான் அந்த அரசை அங்கீகரிப்பது குறித்து முடிவெடுக்கப்படும் என்று சீனா கூறியிருந்தது.

## தலிபான்களை எதிர்த்து பொதுமக்கள் 2-ஆவது நாளாக போராட்டம்

**காபூல், ஆக. 19:** ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பொதுமக்கள் போராட்டம் 2-ஆவது நாளாக வியாழக்கிழமை நடைபெற்றது.

இதுகுறித்து அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது:

ஆப்கானிஸ்தானைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ள தலிபான் பயங்கரவாதிகளுக்கு எதிராக பொதுமக்கள் ஆங்காங்கே நடத்தி வரும் போராட்டங்கள் வியாழக்கிழமையும் தொடர்ந்தன.

தலைநகர் காபூலிலுள்ள விமான நிலையத்துக்கு அருகே, ஆப்கன் அரசின் தேசியக் கொடியைப் பொருத்தியபடி கார்களின் ஊர்வலம் வியாழக்கிழமை நடைபெற்றது. இதன் மூலம், ஆப்கானிஸ்தானில் தலிபான்களை எதிர்க்கும் போராட்டச் சின்னமாக அந்த நாட்டின் தேசியக் கொடி உருவெடுத்து வருவதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையே, நாங்கர்ஹார் மாகாணத்தில் தலிபான்களுக்கு எதிராக நடைபெற்ற போராட்டத்தின் போது அவர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட ஒரு விடியோவில், போராட்டக்காரர்கள் ஒருவர் குண்டடிபட்டு ரத்தம் சிந்தும் காட்சியும், அவர்களை அங்கிருந்தவர்கள் தூக்கிச் செல்லும் காட்சியும் இடம் பெற்றுள்ளது.

கோஸ்ட் மாகாணத்திலும் தலிபான் பயங்கரவாதிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வியாழக்கிழமை போராட்டம் நடைபெற்றதாகவும் போராட்டத்தை ஒடுக்குவதற்காக அந்த மாகாணத்தில் தலிபான்கள் ஊரடங்கு அறிவித்துள்ளதாகவும் அந்தப் பகுதியிலுள்ள செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

https://t.me/Tamil_epaper2



ஜலாலாபாதில் தலிபான்களுக்கு எதிராக ஆப்கன் தேசியக் கொடியுடன் போராட்டம் நடத்திய இளைஞர்.

**சுதந்திர தினம்:** கடந்த 1919-ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானில் பிரிட்டன் ஆட்சி முடிவுக்கு வந்ததை ஆப்கானியர்கள் ஆண்டுதோறும் சுதந்திர தினமாகக் கொண்டாடுகின்றனர். அதனை யொட்டி நிகழ்த்திய ஊர்வலங்களை தலிபான்களுக்கு எதிரான போராட்டமாக அவர்கள் மாற்றியதாகக் கூறப்படுகிறது என்று அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

முன்னதாக, காபூலுக்கு 150 கி.மீ. தொலைவில் உள்ள ஜலாலாபாத் நகரில் தலிபான்களுக்கு எதிராக பொதுமக்கள் புதன்கிழமை போராட்டம் நடத்தினர்.

அதன் ஒரு பகுதியாக, அந்த நகரின் முக்கியப் பகுதியான பாஷ்டுனிஸ்தான் சதுக்கத்தில் ஏற்றப்பட்டிருந்த தலிபான்களின் கொடியை அகற்றிவிட்டு, ஆப்கன் தேசியக் கொடியை போராட்டக்காரர்கள் ஏற்றினர். அப்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் பலர் உயிரிழந்ததாகவும் ஏராளமானவர்கள் காயமடைந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

| கரன்சி நிலவரம் (இந்திய ரூபாயில்) | அமெரிக்கா | ஐரோப்பா | பிரிட்டன் | மலேசியா | சிங்கப்பூர் |
|---|---|---|---|---|---|
| | டாலர் 74.36 | யூரோ 86.95 | பவுண்ட் 101.72 | ரிங்கிட் 17.55 | டாலர் 54.54 |

தங்கம் (24 கேரட்) 1 கிராம் ரூ.4,828
தங்கம் (22 கேரட்) 1 கிராம் ரூ. 4,464

வெள்ளி 1 கிலோ.... ரூ.67,400
வெள்ளி 1 கிராம்....... ரூ.67.40

## நவரத்தினங்கள்-ஆபரணங்கள் ஏற்றுமதியில் விறுவிறுப்பு

**புது தில்லி, ஆக. 19:** நாட்டின் நவரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள் ஏற்றுமதி நடப்பாண்டு ஏப்ரல்-ஜூலை காலகட்டத்தில் விறுவிறுப்படைந்துள்ளதாக நவரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள் ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் (ஜிஜேஇபிசி) தெரிவித்துள்ளது.



இதுகுறித்து அந்த கவுன்சில் மேலும் கூறியுள்ளதாவது:

அமெரிக்கா, சீனா மற்றும் ஹாங்காங் உள்ளிட்ட முக்கிய ஏற்றுமதி நாடுகளில் தேவை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அதனை எடுத்துக்காட்டும் விதமாக, நடப்பு 2021 ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான நான்கு மாத காலத்தில் நாட்டின் நவரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள் ஏற்றுமதி 1,255 கோடி டாலராக (இந்திய மதிப்பில் சுமார் ரூ.94,125 கோடி) அதிகரித்துள்ளது. 2019-20-ஆம் நிதியாண்டின் இதே காலகட்டத்தில் ஏற்றுமதி 1,180 கோடி டாலராக (ரூ.88,500 கோடி) காணப்பட்டது. ஆக, ஆபரண ஏற்றுமதி மதிப்பீட்டு காலத்தில் 6.04 சதவீத வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.

குறிப்பாக, ஜூலை மாதத்தில் இவற்றின் ஏற்றுமதி 18 சதவீதம் அதிகரித்து 336 கோடி டாலரைத் தொட்டுள்ளது.

2020-21 ஏப்ரல்-ஜூலை காலகட்டத்தில் நவரத்தினங்கள் மற்றும் ஆபரணங்களின் ஏற்றுமதி 387 கோடி டாலராக மட்டுமே காணப்பட்டது. இதற்கு, கரோனா கட்டுப்பாடுகளே முக்கிய காரணம்.

நறுக்கப்பட்ட மற்றும் பட்டைதீட்டப்பட்ட வைரங்களின் ஏற்றுமதி நடப்பு நிதியாண்டின் முதல் நான்கு மாதங்களில் 852 கோடி டாலராக இருந்தது. இது, 2019-20-ஆம் நிதியாண்டின் இதே காலகட்டத்தில் 670 கோடி டாலராக காணப்பட்டது. இருப்பினும், கணக்கீட்டு காலத்தில் தங்க ஆபரணங்களின் ஏற்றுமதியானது 38.5 சதவீதம் சரிவடைந்து 241 கோடி டாலரானது. அதேநேரம், வெள்ளி ஆபரணங்கள் ஏற்றுமதி 84.3 கோடி டாலராக அதிகரித்திருந்தது என ஜிஜேஇபிசி தெரிவித்துள்ளது.

## இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 9.4%-ஆக இருக்கும்: இந்தியா ரேட்டிங்ஸ்

**மும்பை, ஆக. 19:** நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 9.4 சதவீதமாக இருக்கும் என இந்தியா ரேட்டிங்ஸ் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.



இதுகுறித்து அந்த நிறுவனம் மேலும் கூறியுள்ளதாவது:

முன்பு காணப்பட்ட சந்தை நிலவரங்களின் அடிப்படையில் நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதாரம் 9.1 சதவீதம் அளவுக்கு வளர்ச்சி காணும் என மதிப்பிடப்பட்டிருந்தது. டிசம்பருக்குள் அரசின் இலக்குப்படி தடுப்பூசி திட்டம் செயல்படுத்தப்படும் எனில் இந்த வளர்ச்சி 9.6 சதவீதமாக அதிகரிக்கவும் வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், தற்போது ஏற்பட்டுள்ள தொய்வின் காரணமாக இந்த தடுப்பூசி திட்டம் அனைவருக்கும் செயல்படுத்தப்படுவது மார்ச் வரை நீடிக்கவே அதிக வாய்ப்புகள் உள்ளன. இருப்பினும், பொருளாதார வளர்ச்சி குறித்த மதிப்பீடு உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கு, கரோனா இரண்டாவது அலையின் தாக்கத்துக்குப் பிறகு பொருளாதாரம் ஆச்சரியப்படும் விதத்தில் மீட்சியடைந்து வருவதே முக்கிய காரணம். இதனை எடுத்துக்காட்டும் விதத்தில், நாட்டின் ஏற்றுமதி சிறப்பான அளவில் மேம்பட்டுள்ளது. இவைதவிர, நடப்பாண்டில் பருவமழையும் போதுமான அளவுக்கு இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற சாதகமான சூழல்களை கருத்தில் கொள்ளும்போது நடப்பு 2021-22-ஆம் நிதியாண்டில் நாட்டின் பொருளாதாரம் 9.4 சதவீதம் அளவுக்கு வளர்ச்சி காணும் என மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக இந்தியா ரேட்டிங்ஸ் தெரிவித்துள்ளது.

### அந்நிய நிதி நிறுவனங்கள்

## உள்நாட்டு பங்குகளில் 59,200 கோடி டாலர் முதலீடு

**புது தில்லி, ஆக. 19:** உள்நாட்டுப் பங்குகளில் அந்நிய நிதி நிறுவனங்களின் முதலீட்டு மதிப்பு 59,200 கோடி டாலரை எட்டியுள்ளது.



இதுகுறித்து மார்னிங்ஸ்டார் நிறுவன ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

2021 ஜூன் மாதத்துடன் நிறைவடைந்த மூன்று மாத காலகட்டத்தில் அந்நிய நிதி நிறுவன முதலீட்டாளர்களின் (எஃப்பிஐ) வசம் உள்ள உள்நாட்டு பங்குகளின் மதிப்பானது ரூ.44.40 லட்சம் கோடியை (59,200 கோடி டாலர்) எட்டியுள்ளது. இதற்கு, நிகர அளவிலான முதலீட்டு வரத்து சிறப்பான அளவில் இருந்ததே முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது. குறிப்பாக, அண்மைக் காலமாகவே இந்திய பங்குச் சந்தைகளின் செயல்பாடு உலக அளவில் சிறப்பானதாக இருந்து வருகிறது.



அந்நிய முதலீட்டாளர்கள் இந்தியப் பங்குகளில் மேற்கொண்ட முதலீடு முந்தைய ஜனவரி-மார்ச் காலாண்டில் 55,200 கோடி டாலராக காணப்பட்டது. அதனுடன் ஒப்பிடும்போது ஜூன் காலாண்டில் இந்த முதலீடானது 7 சதவீதம் அளவுக்கு உயர்ந்துள்ளது.

2020 ஜூன் நிலவரப்படி, இந்தியப் பங்குகளில் எஃப்பிஐ முதலீடு 34,400 கோடி டாலராக இருந்தது. இருப்பினும், உள்நாட்டு பங்கு சந்தை மூலதனத்தில் அந்நிய முதலீட்டாளர்களின் பங்களிப்பு மார்ச் காலாண்டில் 19.9 சதவீதமாக காணப்பட்ட நிலையில், ஜூன் காலாண்டில் அது 19.1 சதவீதமாக குறைந்துள்ளது.

கரோனா இரண்டாவது அலையின் காரணமாக ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் அந்நிய முதலீடு எதிர்மறை நிலையைக் கண்டது. அந்த மாதங்களில் முதலீட்டாளர்கள் நிகர அளவில் முறையே 129 கோடி டாலர் மற்றும் 39 கோடி டாலர் மதிப்பிலான பங்குகளை விற்பனை செய்தனர். அதன்பிறகு, சாதகமான சூழ்நிலை திரும்பியதையடுத்து ஜூன் மாதத்தில் அவர்கள் 236 கோடி டாலரை (ரூ.17,700 கோடி) பங்குகளில் முதலீடு செய்தனர். இருப்பினும் ஜூலையில் அமெரிக்க மத்திய வங்கியின் அறிவிப்புகளை எதிர்நோக்கி அவர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட்டதாக அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சோயா பிண்ணாக்கு ஏற்றுமதி 57% குறைந்தது

**புது தில்லி, ஆக. 19:** கால்நடை தீவனமாக பயன்படுத்தப்படும் சோயா பிண்ணாக்கு ஏற்றுமதி கடந்த ஜூலையில் 57 சதவீதம் வீழ்ச்சி கண்டுள்ளதாக எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் (எஸ்இஏ) தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த சங்கம் வியாழக்கிழமை மேலும் தெரிவித்துள்ளதாவது:

உள்நாட்டில் காணப்படும் தட்டுப்பாட்டையடுத்து சோயா பிண்ணாக்கு ஏற்றுமதி கடந்த ஜூலை மாதத்தில் 26,725 டன்னாக இருந்தது. இது, கடந்தாண்டு ஏற்றுமதியுடன் ஒப்பிடும்போது 57 சதவீதம் சரிவாகும்.

சோயா பிண்ணாக்கின் விலையை கட்டுக்குள் வைக்கும் வகையில் உள்நாட்டில் அளிப்பை அதிகரிக்க மத்திய அரசு 12 லட்சம் டன் சோயாபிண்ணாக்கை இறக்குமதி செய்ய முயற்சிக்கும் நேரத்தில் இந்த ஏற்றுமதி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மரபணு மாற்றப்பட்ட (ஜிஎம்) சோயா பிண்ணாக்கை இறக்குமதி செய்ய மத்திய அரசு அனுமதித்துள்ளது. இந்த நிலையில், அதன் இறக்குமதிக்கான ஆர்டர்களை வர்த்தகர்கள் பெறத் தொடங்கியுள்ளனர்.



கடந்த இரண்டு மாதங்களாகவே சோயா பிண்ணாக்கின் ஏற்றுமதி 56,000-62,000 டன் என்ற அளவில் குறைந்துள்ளது. பற்றாக்குறை காரணமாக சோயாபிண்ணாக்கின் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளது (உள்நாட்டு சந்தையில்) ஏற்றுமதி மற்றும் கோழிப்பண்ணையாளர்களை வெகுவாக பாதித்துள்ளது.

இந்த சூழ்நிலையில், கோழிப்பண்ணையாளர் கூட்டமைப்பின் கோரிக்கையை ஏற்று மரபணு மாற்றப்பட்ட சோயா பிண்ணாக்கை இறக்குமதி செய்ய மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது தற்போது அவர்களுக்கு மிகப் பெரிய நிவாரணமாக அமையும்.

சோயாவிலிருந்து எண்ணெயை பிரித்தெடுத்த பிறகு கிடைக்கும் சோயா பிண்ணாக்கில் புரதச் சத்து அதிகமாக காணப்படுகிறது. எனவேதான், இது கோழி தீவனத்தில் முக்கிய மூலப்பொருளாக விளங்குகிறது.

சோயா பிண்ணாக்கு தவிர, கடுகு, நிலக்கடலை, ஆமணக்கு, தவிட்டு பிண்ணாக்கு வகைகளும் அதிக அளவில் ஏற்றுமதி செய்யபடுகின்றன.

நடப்பாண்டு ஜூலையில், மொத்த பிண்ணாக்கு ஏற்றுமதி 27 சதவீதம் சரிவடைந்து 2.62 லட்சம் டன்னிலிருந்து 1.91 லட்சம் டன்னாக குறைந்துள்ளதாக எஸ்இஏ தெரிவித்துள்ளது.

## வீடுகள் விற்பனை 30% அதிகரிக்கும்



**புது தில்லி, ஆக. 19:** வீடுகள் விற்பனை நடப்பாண்டில் 30 சதவீதம் அதிகரிக்கும் என சொத்து ஆலோசனை நிறுவனமான அனராக் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த நிறுவனத்தின் ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

வீடுகளுக்கான தேவையைப் பொருத்தமட்டில் கரோனா பாதிப்புக்கு முந்தைய நிலையைக் காட்டிலும் இன்னும் குறைவாகவே உள்ளது. இருந்தபோதிலும், நடப்பு 2021-ஆம் ஆண்டில் முக்கிய ஏழு நகரங்களில் வீடுகளின் விற்பனை 1,79,527-ஆக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது, கடந்த 2020-ஆண்டு விற்பனையான 1,38,344 வீடுகளுடன் ஒப்பிடும்போது 30 சதவீதம் அதிகமாகும்.

கடந்த 2019-இல், சென்னை, கொல்கத்தா, ஹைதராபாத், பெங்களூரு, புணே, மும்பை மெட்ரோபாலிட்டன் மண்டலம் (எம்எம்ஆர்), தில்லி-என்சிஆர் ஆகிய முக்கிய ஏழு நகரங்களில் வீடுகள் விற்பனையானது 2,61,358-ஆக இருந்தது.

நிலைமை சீரடையும்பட்சத்தில் வரும் வரும் 2022 மற்றும் 2023-ஆம் ஆண்டுகளில் முறையே 2,64,625 மற்றும் 3,17,550-ஆக மேலும் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வீடுகள் விற்பனை 2014-இல் 3,42,980-ஆகவும், 2015-இல் 3,08,250-ஆகவும், 2016-இல் 2,39,260-ஆகவும், 2017 மற்றும் 2018-ஆம் ஆண்டுகளில் முறையே 2,11,143 மற்றும் 2,48,311-ஆகவும் இருந்ததாக அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருவான்மியூர்
COTTON HOUSE
காட்டன் ஹவுஸ் திருவான்மியூர் சிக்னலில் மட்டுமே
No.68, L.B.Road, Chennai - 600 041.
Phone: 044- 2445 4442 / 4201 0609

தினமணி
வெள்ளிக்கிழமை, 20 ஆகஸ்ட் 2021

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

# சிங்கம்பட்டி ஜமீன் அவதூறு வழக்கில் திரைப்பட இயக்குநர் பாலா விடுவிப்பு


அம்பாசமுத்திரம் நீதிமன்றத்தில் ஆஜராக வந்த இயக்குநர் பாலா.

**அம்பாசமுத்திரம், ஆக. 19:** சிங்கம்பட்டி ஜமீன் குறித்த அவதூறு வழக்கிலிருந்து இயக்குநர் பாலாவை விடுவித்து திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் நீதிமன்றம் வியாழக்கிழமை தீர்ப்பளித்தது.

இயக்குநர் பாலா இயக்கத்தில் நடிகர் ஆர்யா-விஷால் நடித்து கடந்த 2011 ஆம் ஆண்டு வெளியான படம் 'அவன் இவன்'. இந்தப் படத்தில் சிங்கம்பட்டி ஜமீன் மற்றும் சொரிமுத்து அய்யனார் கோயில் குறித்து அவதூறாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது எனக் கூறி, சிங்கம்பட்டி ஜமீனைச் சேர்ந்த சங்கர் ஆத்மஜன் 2011 ஜூனில் அம்பாசமுத்திரம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தார். இவ்வழக்கில் ஆர்யா தரப்பில் கடந்த மார்ச் மாதம் சங்கர் ஆத்மஜனிடம் வருத்தம் தெரிவித்ததையடுத்து வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

இயக்குநர் பாலா மீதான வழக்கு தொடர்ந்து நடைபெற்று வந்த நிலையில், புகாரை முறையாக நிரூபிக்காததாலும், குற்றச்சாட்டில் போதிய முகாந்திரம் இல்லாததாலும் பாலா வழக்கிலிருந்து விடுவிக்கப்படுகிறார் என்று நீதிபதி கார்த்திகேயன் வியாழக்கிழமை தீர்ப்பளித்தார். முன்னதாக, நீதிபதியின் முன்பு இயக்குநர் பாலாவும், மனுதாரர் சங்கர் ஆத்மஜனும் ஆஜராகினர்.

இது குறித்து இயக்குநர் பாலா கூறுகையில், பொய் வழக்கிலிருந்து விடுவித்ததற்கு மகிழ்ச்சி என்றார். அவரது தரப்பில் வழக்குரைஞர் முகம்மது உசேன், முகம்மது நயினார் ஆகியோரும், எதிர்தரப்பில் வழக்குரைஞர் ரமேஷ் உள்ளிட்டோரும் ஆஜராகி வாதாடினர்.

# 100 நாள்கள் சாதனை: தமிழரசு சிறப்பு வெளியீடு


அரசின் 100 நாள்கள் நிறைவை ஒட்டி, ஆட்சியின் சாதனைகள் அடங்கிய தமிழரசு புத்தகத்தின் சிறப்பு மலரை வியாழக்கிழமை வெளியிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் அமைச்சர்கள், அதிகாரிகள்.

**சென்னை, ஆக. 19:** அரசின் நூறு நாள்கள் சாதனையை ஒட்டி, தமிழரசு இதழின் சிறப்பு வெளியீட்டை முதல்வர் மு.க.ஸ்டாலின், வியாழக்கிழமை வெளியிட்டார். இதனை தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு பெற்றுக்கொண்டார்.

'தலைநிமிரும் தமிழகம்-நூற்றாண்டின் திசையில் நூறு நாள்கள்' என்ற தலைப்பில் புத்தகம் வெளியிடப்பட்டது.

இந்த மலரில் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் நலத் திட்டங்கள், மாவட்டங்களுக்கு முதல்வர் நேரடியாகச் சென்று மேற்கொண்ட களப் பணிகள், ஆய்வுப் பணிகள், துறை வாரியான ஆய்வுகள், முக்கிய நிகழ்வுகளில் உரைகளின் தொகுப்புகள் ஆகியன இடம் பெற்றுள்ளன.

இந்த நிகழ்வில், செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ், மக்களவை உறுப்பினர் ஆ.ராசா, செய்தித் துறை செயலாளர் மகேசன் காசிராஜன், செய்தித் துறை இயக்குநர் வீ.ப.ஜெயசீலன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடியில் ரூ. 23 கோடி மதிப்பிலான திமிங்கல உமிழ்நீர்க் கட்டிகள் பறிமுதல்

**தூத்துக்குடி, ஆக. 19:** தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு கடத்தப்பட இருந்த ரூ. 23 கோடி மதிப்பிலான திமிங்கல உமிழ்நீர் கட்டிகளை மத்திய வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகள் வியாழக்கிழமை பறிமுதல் செய்தனர்.


தூத்துக்குடியில் பறிமுதல் செய்யப்பட்ட திமிங்கலத்தின் உமிழ்நீர் கட்டிகள்.

தமிழகத்தில் தடைசெய்யப்பட்ட பொருள்களை சிலர் தூத்துக்குடி கடற்கரைப் பகுதியிலிருந்து இலங்கைக்கு கடத்த முயல்வதாக கிடைத்த தகவலின் பேரில், தூத்துக்குடி மத்திய வருவாய் புலனாய்வு பிரிவு உதவி இயக்குநர் கார்த்திகேயன் தலைமையிலான அதிகாரிகள் தெர்மல்நகர் கடற்கரைப் பகுதியில் வியாழக்கிழமை கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

ஒரு காரில் சென்ற 3 பேரைப் பிடித்து விசாரித்தபோது, அவர்கள் மெழுகு போன்ற பொருளைக் கடத்திச் செல்வது தெரியவந்தது. அதை, அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். ஆய்வில், அப்பொருள், திமிங்கலத்தின் உமிழ்நீர் கட்டிகளான மெழுகு போன்ற 'அம்பர்கிரிஸ்' எனத் தெரியவந்தது.

துபை உள்ளிட்ட வெளிநாடுகளில் உயர்தர நறுமணப் பொருள்கள் தயாரிக்க இதைப் பயன்படுத்துவதாகவும், இந்தியாவில் அம்பர்கிரிஸை விற்கத் தடை உள்ளதால் அதை வெளிநாடுகளுக்கு கடத்திச் செல்வது அதிகரித்து வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட அம்பர்கிரிஸின் எடை 23 கிலோ என்றும், சர்வதேச மதிப்பில் ஏறத்தாழ ரூ. 23 கோடி வரை இருக்கும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். இதுதொடர்பாக, தூத்துக்குடி மீனாட்சிபுரத்தைச் சேர்ந்த திமுக பிரமுகர் பெரியசாமி, திருநெல்வேலி மேலப்பாளையம் நேதாஜி சாலையைச் சேர்ந்த சதாம் உசேன், திடியூர் பகுதியைச் சேர்ந்த பிரபாகரன் ஆகிய 3 பேரிடம் விசாரித்துவருகின்றனர். முதல்கட்ட விசாரணையில், அம்பர்கிரிஸை இலங்கைக்கு கடத்தத் திட்டமிட்டது தெரியவந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மக்களைத் தேடி மருத்துவம்: 14 நாள்களில் 1.41 லட்சம் பேருக்கு சிகிச்சை

**சென்னை, ஆக.19:** மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் கடந்த 14 நாள்களில் மட்டும் 1.41 லட்சம் பேருக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் முதற்கட்டமாக 1,172 துணை சுகாதார நிலையங்கள், 189 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 50 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 3 மாநகராட்சிகளில் (சென்னை, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி) தலா ஒரு மண்டலம் என மொத்தம் 21 நகர ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொடங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் இதுவரை மொத்தம் 1 லட்சத்து 41 ஆயிரத்து, 390 பேர் பயனடைந்துள்ளனர். இதில், 64,128 பேர் உயர் ரத்த அழுத்த நோயாளிகள்; 40, 554 பேர் நீரிழிவு நோயாளிகள் என்பது குறிப்பிடத்தக்கது. இதைத் தவிர, வலி நிவாரண சிகிச்சையை, 4,199 பேரும், இயன்முறை சிகிச்சையை 4,257 பேரும் பெற்று பயனடைந்துள்ளனர். மேலும், 18 பேர் டயாலிசிஸ் சிகிச்சை பெற்றுள்ளனர்.

அதிகபட்சமாக, ராமநாதபுரத்தில், 9,508 பேர்; சேலத்தில், 8,240 பேர், ராணிப்பேட்டையில், 8,146 பேர், சென்னையில், 5,540 பேர் பயனடைந்துள்ளனர்.

# பயோடீசல் பெயரில் போலியான எரிபொருள்

## இந்தியன் ஆயில் நிறுவனம் எச்சரிக்கை

**சென்னை, ஆக.19:** தமிழகத்தில் பயோடீசல் என்னும் பெயரில் போலியான எரிபொருள் விற்பனை செய்யப்படுவதாகவும், அது சுற்றுச்சூழலை மாசுபடுத்துவதுடன் வாகனங்களையும் சேதப்படுத்துவதாக இந்தியன் ஆயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்நிறுவனம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழகத்தில் பயோடீசல் என்ற பெயரில் மோசமான, போலியான வாகன எரிபொருளை விற்பனை செய்யும் சில விநியோகஸ்தர்கள், அண்மைக் காலமாக பெருகி வருவது தெரிய வந்துள்ளது. அப்படிப்பட்டோர் ரகசியமான முறையில் பெயர்ப்பலகை வைக்கப்படாத கிடங்குகளில் இருந்து போலி எரிபொருளை விநியோகித்து வருகிறார்கள்.



இத்தகைய செயல்பாடுகள், இந்தியாவில் பிஎஸ்-6 தூய்மையான மோட்டார் வாகன எரிபொருள்களை வழங்கி சுற்றுச்சூழலைத் தூய்மையாகப் பாதுகாக்கும் முயற்சிகளை முன்னெடுத்து வரும் இந்திய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் முயற்சிகளை சீர்குலைக்கும் வகையில் அமைந்துள்ளன.

குறிப்பாக பிஐஎஸ் 15607 / 2016 (பி-100) வரையறைகளின் படி, சரியான பயோ டீசலை மாநில அரசின் முன் அனுமதி மற்றும் ஒப்புதல் பெற்று மட்டுமே விற்பனை செய்ய முடியும். பயோடீசல் சேமிப்பு மற்றும் விற்பனை செய்யப்படும் இடமானது கிளாஸ்-பி தர நிர்ணய உரிமங்களை அரசிடமிருந்து பெற்றிருக்க வேண்டும்.

https://t.me/Tamil_epaper2

தற்போது இயங்கி வரும் எண்ணெய் விற்பனை நிறுவனங்களைத் தவிர்த்து வேறு யாருக்கும் பயோ டீசல் விற்பனை செய்ய தமிழக அரசு ஒப்புதல் அளிக்கவில்லை.

தேசிய பயோ எரிபொருள் கொள்கை (2018)- படி பெட்ரோல் விற்பனை நிறுவனங்களில் விற்கப்படும் டீசலில் 7% வரை சேர்ப்பதற்காக மட்டுமே பயோடீசலின் விற்பனை அனுமதிக்கப்பட்டுள்ளது. சேலம், நாமக்கல், சங்ககிரி, தூத்துக்குடி, ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய சந்தைகளில் இந்த போலி தயாரிப்புகள், சட்ட விரோதமாக விற்பனை செய்யப்படுவதாகத் தெரியவருகிறது.

இது சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிப்பதுடன் வாகனங்களையும் சேதப்படுத்துகிறது. மேலும் போலி தயாரிப்புகளால் பொது மக்களின் உடல்நலன் பாதிக்கப்படுவதுடன், அரசுக்கும் பெருமளவிலான வருவாய் இழப்பு ஏற்படுகிறது.

# தமிழ்ப் பல்கலை.யில் பேசும் கலை – எழுதும் கலை: பட்டயப் படிப்புகள் அறிமுகம்

**தஞ்சாவூர், ஆக. 19:** தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பேசும் கலை, எழுதும் கலையில் பட்டயப்படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என்றார் அப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கோ. பாலசுப்ரமணியன்.

இதுதொடர்பாக மணப்பாறையில் திருக்குறள் தொடர்பான வகுப்புகளை நடத்தி வரும் பழந்தமிழ்க்காவிரி அறக்கட்டளையும், தமிழ் வளர் மையமும் வியாழக்கிழமை புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டன. அப்போது, துணைவேந்தர் தெரிவித்தது:

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் தமிழ் வளர் மையம் மூலமாக அயல்நாடுகள் மற்றும் இந்திய மாநிலங்களில் தமிழ் சார்ந்த படிநிலை, சான்றிதழ் மற்றும் பட்டயப்படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் ஒருபகுதியாக, பேசும் கலை மற்றும் எழுதும் கலையில் பட்டயப்படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இன்றைய நவீன உலகில் உயர்கல்வி நிறுவனங்களில் சேருவதற்கான நேர்காணல்களிலும், அலுவலக நடைமுறைகளிலும் குழுக் கலந்துரையாடல் என்ற உத்தியைப் பயன்படுத்துகின்றனர். இந்த வகையான விவாதங்களில் பங்கேற்றுக் கருத்துரைப்பதில் இளம்தலைமுறையினரிடையே தயக்கம் நிலவுவதைப் பார்க்கிறோம். எனவே, பேசும் கலையை அறிமுகப்படுத்துவதன் மூலம், மேடைப் பேச்சுக்கலை மற்றும் அன்றாட வாழ்வியல் தேவைக்கான பேசும் கலை என இரு கோணங்களில் இளம்தலைமுறையினர் பயன்பெறும் வகையில் இப்படிப்பு அமைகிறது.

மேலும், இணையவழியில் சுருக்க வடிவிலான குறியீடுகளில் விடையளிக்கும் காலத்தில் வாழ்வதால், எழுதும் கலை என்ற மிகச் சிறந்த வெளிப்பாட்டை நாம் இழந்து வருகிறோம். இதனால், படைப்புலகிலும் எண்ணத்தை வெளிப்படுத்தும் நடைமுறை வாழ்விலும் ஆற்றல் மிக்க எழுத்தாற்றலை இன்றைய மாணவர்கள் மறந்து வருகின்றனர். எனவே, காலத்தின் தேவையைக் கருதி எழுதும் கலை குறித்த பட்டயப் படிப்பும் தொடங்கப்படுகிறது.

பன்னாட்டு மாணவர்களைப் பேசும் கலையில் வல்லவர்களாக உருவாக்க உதவும் வகையில் பேசும் கலைப் படிப்பு விரைவில் மலேசியாவில் தொடங்கப்படவுள்ளது என்றார் துணைவேந்தர்.

இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொறுப்பு) மோ. கோ. கோவைமணி, தமிழ் வளர் மைய இயக்குநர் (பொறுப்பு) இரா. குறிஞ்சிவேந்தன், பழந்தமிழ்க்காவிரி அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் மணவை தமிழ்மாணிக்கம், செயலர் ஆ. தமிழ்மணி, புரவலர் எம்.ஆர். பாலுசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# முதுநிலை, ஒருங்கிணைந்த முதுநிலைப் படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம்: அண்ணா பல்கலை.

**சென்னை, ஆக. 19:** நிகழ் கல்வியாண்டுக்கான (2021- 2022) முதுநிலை மற்றும் ஒருங்கிணைந்த முதுநிலைப் படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

இது குறித்து அண்ணா பல்கலை. வெளியிட்டுள்ள அறிவிப்பு: 2021- 22ஆம் ஆண்டுக்கான முதுநிலை மற்றும் ஒருங்கிணைந்த முதுநிலைப் படிப்புகளுக்கு விண்ணப்பப் பதிவு தொடங்கியுள்ளது. 2 ஆண்டு எம்எஸ்சி படிப்பு, 5 ஆண்டு ஒருங்கிணைந்த எம்எஸ்சி, எம்ஃபில் படிப்புகளுக்கு விண்ணப்பிக்க செப்டம்பர் 15 கடைசித் தேதி.

கூடுதல் விவரங்களை https://admissions.annauniv.edu/cfa/images/MSC_Advt_2021.jpg என்ற இணையதள முகவரியில் காணலாம்.

பி.இ., பி.டெக்., பி.ஆர்க்., எம்சிஏ படிப்புகளில் சேரவும் வெளிமாநில மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். இந்தப் படிப்புகளுக்கு விண்ணப்பிக்கவும் செப்.15 கடைசி தேதி.

# தடுப்பூசி செலுத்தினாலும் தாக்குகிறது டெல்டா வகை கரோனா தொற்று

## ஐசிஎம்ஆர் ஆய்வு முடிவில் தகவல்

**சென்னை, ஆக.19:** தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களுக்கும் டெல்டா வகை கரோனா தொற்று ஏற்படுவதாக இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் (ஐசிஎம்ஆர்) ஆய்வு முடிவுகளில் தெரியவந்துள்ளது.

அதேவேளையில், தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் கரோனாவால் உயிரிழப்பது மிகக் குறைவாக உள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக தீநுண்மியைப் பொருத்தவரை லட்சக்கணக்கான மக்களிடம் பல்கிப் பெருகும்போது, அது தன்னைக் காத்துக்கொள்ள உருமாற்றம் பெறத் தொடங்கும்.

அவ்வாறு உருமாற்றமடைந்த தீநுண்மிகள் ஏற்கெனவே உள்ள தீநுண்மியைக் காட்டிலும், வீரியமிக்கதாகவும், அதிக பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் இருக்கும். அந்த வகையில் கரோனா முதல் அலையின் போது தமிழகம் உள்பட இந்தியா முழுவதும் ஒரே வகை தீநுண்மியே காணப்பட்டது.

நாளடைவில் அது உருமாற்றமடைந்து வீரியமானது. இந்தியாவில் உருமாற்றமடைந்த அந்த தீநுண்மியை டெல்டா வகை கரோனா என்று உலக சுகாதார நிறுவனம் வகைப்படுத்தியது. அதன் தொடர்ச்சியாக அதிலிருந்தும் வேறுபட்ட புதிய தீநுண்மிகள் கண்டறியப்பட்டன. அதற்கு டெல்டா பிளஸ் எனப் பெயரிடப்பட்டது.



இந்நிலையில், இரண்டாம் அலை பாதிப்புகள் குறித்து மத்திய, மாநில அரசுகள் தொடர்ந்து ஆய்வுக்குட்படுத்தி வருகின்றன. அந்த வகையில் சென்னையில் உள்ள தேசிய நோய்ப் பரவியல் ஆராய்ச்சி நிறுவனம் அதுதொடர்பான ஆய்வினை மேற்கொண்டது.

அதன் முடிவுகள் அண்மையில் வெளியிடப்பட்டன. அதில், தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களுக்கும், செலுத்தாதவர்களுக்கும் ஒரே மாதிரியாகவே டெல்டா வகை கரோனா தொற்று பாதிப்பு ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக தடுப்பூசி செலுத்திக் கொண்டால் நோய்க் கிருமிகள் உடலுக்குள் ஊடுருவும்போது அதற்கு எதிரான எதிர்ப்பாற்றல் தாமாக உருவாகி தொற்றைத் தடுக்க வேண்டும்.

கோவிஷீல்ட் மற்றும் கோவேக்ஸின் தடுப்பூசிகளைப் பொருத்தவரை முதலாவதாக பரவிய கரோனா வகைக்கு எதிரான நோய் எதிர்ப்பாற்றலையே அளிக்க வல்லது.

அதன் காரணமாகவே, டெல்டா வகை கரோனா பாதிப்பு ஏற்படும்போது தடுப்பூசி செலுத்திக் கொண்டாலும் அதற்கு எதிரான எதிர்ப்பாற்றல் குறைவாக உருவாவதாக அந்த ஆய்வு முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளையில், தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் டெல்டா வகை கரோனாவால் தீவிர பாதிப்புக்குள்ளாவதும், உயிரிழப்பதும் மிகவும் குறைவு என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் புதிதாக 1,702 பேருக்கு கரோனா

**சென்னை, ஆக.19:** தமிழகத்தில் புதிதாக 1,702 பேருக்கு கரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

மாநிலத்தில் இதுவரை 4.04 கோடிக்கும் மேற்பட்ட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதில் 25 லட்சத்து 95,935 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை வெளியான பரிசோதனை முடிவுகளில் அதிகபட்சமாக கோவையில் 198 பேருக்கும், சென்னையில் 193 பேருக்கும், ஈரோட்டில் 147 பேருக்கும் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

இதனிடையே, மேலும் 1,892 பேர் கரோனாவிலிருந்து விடுபட்டு வீடு திரும்பியுள்ளனர். இதன் மூலம் இதுவரை குணமடைந்தோரின் எண்ணிக்கை 25 லட்சத்து 41,432-ஆக அதிகரித்துள்ளது.

மருத்துவமனைகளிலும், வீடுகளிலும் தற்போது மருத்துவக் கண்காணிப்பில் 19,864 பேர் உள்ளதாக சுகாதாரத் துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தில் கரோனா பாதிப்புக்குள்ளாகி மேலும் 29 பேர் பலியாகியதை அடுத்து நோய்த் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 34,639-ஆக அதிகரித்துள்ளது.

# மாநில அரசு விண்ணப்பம் அனுப்பும் மொழியிலேயே பதிலளிக்க வேண்டும்

## மத்திய அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு

**மதுரை, ஆக.19:** மாநில அரசு விண்ணப்பம் அனுப்பும் மொழியிலேயே பதில் அளிக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

மதுரை மக்களவை உறுப்பினர் சு. வெங்கடேசன், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தாக்கல் செய்த மனு: மத்திய அரசின் குரூப் 'பி' மற்றும் குரூப் 'சி' பிரிவில் 780 பணியிடங்களை நிரப்புவதற்காக நடத்தப்பட்ட எழுத்துத் தேர்வுக்கு தமிழகம், புதுவையில் ஒரு தேர்வு மையம் கூட அமைக்கவில்லை.

இப்பகுதிகளில் குறைந்தபட்சம் ஒரு தேர்வு மையமாவது அமைக்கக் கோரி உள்துறை அமைச்சகம் மற்றும் சி.ஆர்.பி.எப். இயக்குநருக்கு அக்டோபர் 9-இல் கடிதம் அனுப்பினேன். இதற்கு மத்திய உள்துறை இணை அமைச்சர் நவம்பர் 9-இல் ஹிந்தியில் பதில் கடிதம் அனுப்பியிருந்தார். இதனால் அக்கடிதத்தில் என்ன கூறியிருந்தார் என்பதை அறிய முடியவில்லை. ஹிந்தியில் பதில் அளித்தது சட்ட விதிமீறலாகும்.

தமிழக மக்கள் தங்களது குறைகளை நிவர்த்தி செய்யக்கோரி மத்திய அரசுக்கு அனுப்பும் அனைத்து கடிதங்களுக்கும் ஹிந்தியில் பதிலளிப்பது தொடர்கிறது. இது அரசியலமைப்பு சட்ட உரிமைகளுக்கும், 1963-ஆம் ஆண்டின் அலுவல் மொழிச் சட்டத்துக்கும் முரணானது.



ஹிந்தி பேசாத மாநிலங்களைச் சேர்ந்த மக்களவை உறுப்பினர்கள் மற்றும் அம்மாநில மக்களின் உரிமைகளை மீறுவதாகும். எனவே, தமிழக அரசுக்கும், தமிழக மக்களவை உறுப்பினர்கள் மற்றும் தமிழக மக்களுக்கும் ஹிந்தியில் கடிதம் அனுப்பக் கூடாது என்றும் ஆங்கிலத்தில் மட்டுமே கடிதங்கள் அனுப்ப வேண்டும் என்றும் மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும். விதியை மீறும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். இந்த மனு ஏற்கெனவே விசாரிக்கப்பட்டு வழக்கின் தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்த வழக்கில் நீதிபதிகள் என். கிருபாகரன், எம். துரைசாமி ஆகியோர் அடங்கிய அமர்வு வியாழக்கிழமை தீர்ப்பளித்தது.

அதன் விவரம்: தாய்மொழி என்பது மிகவும் முக்கியமானது. அடிப்படைக் கல்வியை தாய் மொழியில் கற்பிக்க வேண்டும். ஆனால் தற்போது ஆங்கில வழிக்கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஆங்கில மொழிக்கு பொருளாதார அடிப்படையிலேயே அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. எத்தகைய செய்தியாக இருந்தாலும், விளக்கமாக இருந்தாலும் அதைத் தாய்மொழியில் புரிந்து கொள்ளும்போது தான் முழுமையடைகிறது. இந்தியாவில் சில மொழிகள் ஆயிரம் ஆண்டுகள் பழைமையானவை. பல மொழிகள் நூறு ஆண்டுகள் பழைமையானவை. ஒவ்வொரு மொழியின் முக்கியத்துவத்தையும் உணர்ந்து அவற்றின் வளர்ச்சிக்கு மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மாநில அரசுகள் விண்ணப்பம் அனுப்பும் மொழியிலேயே மத்திய அரசு பதில் அளிக்க வேண்டும். இந்திய அலுவலக மொழிச் சட்டமும் இதை உறுதி செய்கிறது. ஆனால், இந்த வழக்கில் மனுதாரருக்கு ஹிந்தியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், விதியை மீறும் எண்ணமில்லை என மத்திய அரசுத் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, மத்திய அரசு மற்றும் அதன் அலுவலர்கள் இந்திய அலுவல் மொழிச் சட்டத்தை முறையாகப் பின்பற்ற உத்தரவிடப்படுகிறது என தீர்ப்பளித்து வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டனர்.

DINAMANI, Chennai Phone: 23457601 Fax: 044-23457619 RNI Reg. No. 34593/83 Printed and Published by R.K. Jhunjhunwala on behalf of Express Publications (Madurai) Private Limited., at Express Press, 'Express Gardens', 29, Second Main Road, Ambattur Industrial Estate, Chennai - 600 058. ஆசிரியர்: கே. வைத்தியநாதன் - Editor: K.Vaidyanathan. Chennai Vol. 88, No.221.
COPYRIGHT: Express Publications (Madurai) Private Limited. All rights reserved. Reproduction in any manner, electronic or otherwise, in whole or in part, without prior written permission is prohibited.

epaper.dinamani.com